# வணிகத்தளிர்

# Vanikaththalir




யா / திருக்குடும்ப கன்னியர் மடம்

J/ HOLY FAMILY CONVENT

2017 தளிர் – 15

# வணிகத்தளிர்

## திருக்குடும்ப கன்னியர் மடம்
## தேசிய பாடசாலை

J/HOLY FAMILY CONVENT
LIBRARY
DATE:- 23-03-2018
M-51
NATIONAL SCHOOL JAFFNA

COMMERCE UNION • HOLY FAMILY CONVENT JAFFNA

வணிக மாணவர் ஒன்றியம்

தளிர் 15

நூல் : வணிகத்தளிர்

வெளியீடு : யா/திருக்குடும்ப கன்னியர்மடம்,
யாழ்ப்பாணம்.

பதிப்பு : நவம்பர் 2017

இதழாசிரியர் : இ.மிதுனா, பா.ரம்மியா

அச்சுப்பதிப்பு : மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்
முருகேசர் லேன்,
நல்லூர்.
021 2229285.

பக்கங்கள் : 130

Title : Vanikaththalir

Published by : J/Holy Family Convent,
Jaffna.

Published in : November 2017

Editor : R.Mithuna, P.Ramiya

Printers : Mathi Colours,
Murugesar Lane,
Nallur.

Pages : 130

# யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
# வணிக மாணவர் ஒன்றியம்

## Vision

### தூரநோக்கு

சர்வதேச ரீதியில் ஆளுமைத்திறன் மிக்க மாணவர்களை உருவாக்குதல்

## Mission

### இலட்சிய நோக்கு

வணிகத்துறை சார்ந்த அறிவினை வளர்க்கும் பரவச் செய்யும் அனுபவக் களங்களின் வழி மாணவிகளின் கல்வித்தர மேம்பாட்டினை உறுதி செய்தல்.

# வணிக கீதம்

போற்று முயர்திருக்குடும்பம் எனப்புகழ்

ஆற்றும் கன்னியரின்

ஏற்றமுற மடம் ஈட்டும் வணிகமன்று

ஆக்கும் பணி வளர்க

ஆக்கும் பணி வளர்க

நேற்று வளர் தளிர் ஏற்று மலர் மணம்

சேர்த்து எழில் மிகவே

ஊற்று வரப் பயன் தூக்கி நுகர்வுற

வீற்று மகிழ்வுறுவோம்

கேற்று முயர் நெறி தேவன் கருணையால்

கீர்த்தி பெறு முறுதி

பீற்று வரப்பலம் ஊட்டி யெம் மனன்னிலே

ஈடுற வாழ்வோமே.




# கல்லூரி முதல்வரின் ஆசிச்செய்தி

ஈழவளத் திருநாட்டில் எல்லா வளமும் நிறைந்திருக்கும் யாழ் மண்ணில் பெண்களுக்காக மிளிர்ந்துள்ள பாடசாலைகளில் ஒன்றாக விளங்கிய போதிலும் தனக்கெனத் தனிச் சிறப்புக்களைக் கொண்டமைந்த யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை வணிகத் துறையினால் அமைக்கப்பட்ட வணிகமன்றமானது வருடந்தோறும் "வணிகத்தளிர்" என்னும் நாமம் தாங்கி மாணவர்களது ஊக்கத்தின் விளைவாக அவர்கள் தம் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகிறது. இந்த வகையில் 2017 இல் வெளிவரும் இதழ் 15 இற்கும் என் ஆசிச் செய்தியை நல்கி நிற்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய உலகின் அதீத வளர்ச்சிப் போக்கிற்கு முகம் கொடுக்கும் போட்டியுலகுடன் போட்டியிட்டு வெற்றி கொள்ளும் துறையாக வணிகத்துறை வளர்ச்சி பெற்றுள்ளது. அந்த வகையில் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற முன்னோர் மொழியை பொய்யாக்கி வளர்ந்து வரும் உலகுடன் போட்டியிட்டு தலைநிமிர்ந்து சாதனைகளை இன்றைய பெண்கள் படைத்து வருகின்றார்கள். இதற்கு நாம் மட்டும் விதிவிலக்காகலாமா? என்ற எண்ணம் எமது மாணவரையும் தூண்டச் செய்து ஆண்டு தோறும் "வணிகத்தளிர்" பிரகாசிக்கச் செய்து வருகின்றார்கள்.

இவர்களின் ஆக்க முயற்சி, வாசிப்பு உலகை ஒளிமயப்படுத்தி மாணவர்களின் வாழ்வை மென்மேலும் பிரகாசிக்கச் செய்ய வணிகத்தளிர் 15 இனை பிரகாசிக்கச் செய்ய வழிகாட்டிய வணிக மன்ற ஆசிரியர்களுக்கும் ஆக்கங்களை படரவிட்ட மாணவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு இச்சுடர் பிரகாசிக்க மனமுவந்து நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருட் சகோதரி அன்ரனிற்றா மார்க்
அதிபர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்




# Message from the Chief Guest

I feel great pleasure in writing this message to the magazine "Vanigathalir - 15" published by the Commerce union of the Holy Family Convent, National School, Jaffna. I think, launching of this magazine in expected to communicate to its readers about the achievement of the students in collecting ideas from various sources in a particular field they have chosen.

Today we can see the vast changes that take place in the business world. It is very necessary for our students to update themselves in the latest inventions.

I sincerely hope and wish that the students and teachers who have worked hard for the success of this magazine require special appreciation.

**Mr.W.M.Jayantha Wickramanayaka**
SLEAS - I
Director of Education
National School
Ministry of Education



# வலயக் கல்விப்பணிப்பாளரின் ஆசிச் செய்தி

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் வனிதையரின் வணிகத்தளிரின் பதினைந்தாவது தளிர் வெளிவருவதை எண்ணி என் மனம் மகிழ்வடைகின்றது.

உலகத்தையும் உள்ளங்களையும் ஒன்றிணைப்பதில் வணிகம் மிக மகத்தான பணியாற்றுகின்றது. உலகமே வணிகமயம். நாட்டுக்குள்ளும் நாடுகளுக்கிடையேயும் சமூகவிழுமியங்களை கடத்துவதில் வணிகத்திற்கு நிகர் வணிகமே.

வணிககற்கைநெறி மாணவர்களின் தேடல்களையும், உட்புதைந்த ஆற்றல்களையும், சிந்தனைத் சிதறல்களையும் இன்னொரு முறை பதிவு செய்வதற்கு வணிகத்தளிரின் பதினைந்தாவது இதழ் வழி அமைத்துள்ளது.

வருடம் தோறும் வணிக மாணவர்களின் பொருண்மியம், வணிகம், கணக்கீடு போன்ற பாடங்களின் அறிவு, அனுபவம், ஆக்கம் போன்ற பல்துறைப்பரிமாணங்களின் கருவூலமாகவும், வரலாற்றுச் சுடராகவும் வெளிவரும் வணிகத் தளிர் என்றும் இளந்தளிராக தளிர் விட எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.


ந.தெய்வேந்திரராஜா

வலயக் கல்விப் பணிப்பாளர்,

வலயக் கல்வி அலுவலகம்,

யாழ்ப்பாணம்.



# வணிகத்தளிர் துளிர்த்திலங்க.......

எமது வலயத்தின் தேசிய பாடசாலைகளில் ஒன்றாக அமைந்துள்ள யா/திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வணிக மன்றத்தினரால் வெளியிடப்படும் 15வது தளிருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இத்தளிரானது வணிகத்துறையில் பயிலும் மாணவருக்கு மட்டுமன்றி பொது அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புவோருக்கும், வாசிப்பில் ஆர்வமுடையோருக்கும் நல்விருந்தாக அமையும் என்பது தெளிவு.

இத்தளிரை சாரம் நிறைந்ததாக உருவாக்க உழைத்த பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இவர்களை ஊக்கப்படுத்திய அதிபர் ஆகியோரைப் பாராட்டுவதோடு இத்தளிர் துளிர்த்தோங்க இறையருளையும் வேண்டுகின்றேன்.

**வேழினி பாலேந்திரா.**
**உதவிக்கல்விப் பணிப்பாளர்**
**(தொழிநுட்பப் பாடங்கள்)**



# வணிக மன்ற பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து...

காலத்தால் அழியாத தடங்களைப் பதித்து தண்ணிகரில்லாத் தலைமை யேற்று போட்டி போடும் உலகில் தலை நிமிர்ந்து வாழ வழிவகுக்கும் யாழில் புகழ் பூத்த பெண்கள் கல்லூரியில் ஒன்றாக விளங்கும் யாழ் திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை வணிக மன்றமானது 2017 இற்கான வணிகத் தளிர் (நூலை) வெளியிடுவதில் பெருமகிழ்வு அடைகின்றது.

மாறும் உலகில் மாற்றம் ஒன்றே நிரந்தரம்" எனும் கூற்றுக்கு அமைய மாறிவரும் பொருளாதார கொள்கைகளுக்கும் போட்டி போட்டு வளரும் வியாபார நிறுவனங்களிற்கும் முகங்கொடுத்து வாழும் வகையில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் எழுதப்பட்ட ஆக்கங்களைத் தாங்கிவரும் இந்நூலானது பலருக்கு பயன்தரும் என்பதில் ஐயமில்லை.

எனவே ஆக்கங்களைப் பதிவு செய்த அனைவருக்கும் என் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வணிக மன்றத்தினர் ஆண்டு தோறும் வெளியிடும் இவ் விதழானது வாழும் உலகின் தேவையறிந்து வெளியிடும் பல்தர வணிகச் செய்திகளோடு வளர வேண்டும், புத்துயிர் பெற்று புதுப் பொலிவுற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

திரு.தி.லீன்ரஸ்
மன்றப் பொறுப்பாசிரியர்



# தலைவரின் உள்ளத்திலிருந்து...

யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் வணிகத்துறை மாணவர்களின் ஒன்றுபட்ட செயற்பாட்டினால் உருவான இவ் வணிகத்தளிர் பதினைந்தாவது மலராக மாணவர்களுக்கு மிகவும் பயனுடைய அம்சங்களை உள்ளடக்கி வெளி வருவதையிட்டு பெரு மகிழ்வடைகிறேன்.

நவீன வசதிகளுடன் மாற்றமடைந்து வரும் இவ்வுலகில் வணிகத் துறையானது மிக முக்கிய இடம் பிடித்துள்ளது. மனிதனின் முழுமையானதும் வெற்றிகரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் இத்துறை முதன்மையாக விளங்குகிறது. இவ்விரைவான வணிக உலகில் ஒவ்வொரு மாணவர்களும் திறமையுள்ளவர்களாகவும் சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னேற வேண்டும். காலத்திற்கேற்ப எம்மை நாம் மாற்றமடைய செய்ய வேண்டும். அதற்கேற்ப மாணவர் தம்மை தயார்படுத்தி கொள்ள "வணிகத்தளிர்" உதவுமென நம்புகிறேன்.

பல்வேறுபட்ட ஆக்கங்களினை தாங்கி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தி நிற்கும் வணிகத்தளிரினை வெளிக் கொணர எம்மோடு துணைநின்ற அனைவருக்கும் எமது நன்றிகள்.

மேலும் இம்மலரானது தொடர்ந்தும் சிறப்பாக வெளிவர மனதார வாழ்த்துகின்றேன்.

செல்வி.மேரிடானியா அன்ரன் கொன்சாள்ஸ்
வணிக மன்றத் தலைவர்



# செயலாளரின் உள்ளத்திலிருந்து....

எமது பாடசாலையின் வணிக மாணவர் மன்றத்தினால் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வரும் வணிக தளிர் மலர் பல இடர்களை தாங்கி தனது 15வது அகவையில் தடம் பதிப்பதையிட்டு மன்ற செயலாளர் என்ற ரீதியில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மாற்றம் என்ற சொல்லைத் தவிர மற்றைய அனைத்தும் மிக வேகமாக மாற்றமடைந்து நவீன தொழினுட்ப வளர்ச்சி வேகம் மிக்க இவ்வுலகிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற நவீன மனிதர்களாகிய நாமும் காலத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து வாழ வேண்டியது எமது பொறுப்பாகும். அந்த வகையில் மாணவர்களது வணிக அறிவை வளர்க்கும் நோக்கோடு எமது மன்றம் இத்தளிரை வெளியிடுகிறது.

இச் சஞ்சிகை வெளிவர எமக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த எமது அதிபர், உப அதிபர் அவர்களுக்கும் எமது நன்றிகளை கூறிக் கொள்கிறோம். மேலும் எமக்கு ஆலோசனை வழங்கி எம்மை வழிநடத்திய எமது மன்ற பொறுப்பாசிரியர் திரு.தி.லீன்ரஸ் அவர்களுக்கும், மன்ற உறுப்பினர்கள் துறை சார்ந்த பெரியோர், ஆக்கங்களை தந்த மாணவர்கள், பழைய மாணவர்கள், விளம்பர உதவியாளர் அனைவருக்கும் என் உளம் கனிந்த நன்றிகள்.

இனி வரும் காலங்களிலும் எமது வணிகத் தளிர் சுடர் விட்டு ஒளிர எமது மாணவர்கள் முயற்சி எடுப்பார்கள் என நம்புகிறேன்.

செல்வி.தட்சாயினி அன்ரனிகிளைவ்
செயலாளர்



# இதழாசிரியர்களின் உள்ளத்திலிருந்து...



எமது பாடசாலையின் வணிக மாணவர் ஒன்றியத்தினால் இம்முறை 15வது தடவையாக "வணிகத் தளிர்" என்னும் மலரினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மாறிவரும் உலகில் அனைத்து நாடுகளும் இலத்திரனியல் வணிகத்திலும் சரி, தொழில்நுட்பத்திலும் சரி மிக வேகமாக முன்னேற்றம் காண்கின்றன. இந்நிலையில், இன்றைய 21ம் நூற்றாண்டின் எம் மாணவ சமுதாயத்திடையே உள்ள ஆற்றல்களும், திறன்களும் இந்நூலினூடாக வெளியுலகிற்கு கொண்டு வரப்படுவதை இட்டு நாம் மகிழ்வடைகின்றோம்.

இத்தளிரானது, 21 ம் நூற்றாண்டின் புதிய பல தகவல்களை தாங்கி வருவது மாத்திரமன்றி எமது மாணவர்களின் அயராத உழைப்பிற்கான பலனையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

மாணவர்கள் இந்தக் குறுகிய காலத்தில் இடைவிடாத கற்றலின் மத்தியிலும், தமது அயராத உழைப்பின் மூலம் இத்தளிருக்காக பெரும்பாடுபட்டுள்ளனர். இவ் அயராத உழைப்பிற்கு கிடைக்கும் தகுந்த சன்மானமாக இந்த நூலைக் கருதுகின்றோம்.

மேலும், இந்நூலை வெளியிடுவதற்காக அரும்பாடுபட்ட அனைத்து நல்லுள்ளங் களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம்.

செல்வி.மிதுனா இரட்ணகுமார்
செல்வி.ரம்மியா பாண்டியராஜா
இதழாசிரியர்கள்

# வணிக மன்ற உறுப்பினர்கள்

தலைவர்
**மேரி டானியா அன்ரன் கொண்சாள்ஸ்**

உபதலைவர்
**அனார்த்தனி சாள்ஸ் ஸ்ரீவின்சன்**

செயலாளர்
**தட்சாயினி அன்ரனி கிளைவ்**

உபசெயலாளர்
**லூர்த்திகா அருள்நேசன்**

பொருளாளர்
**மேரி சோனியா அன்ரன் கொண்சாள்ஸ்**

இதழாசிரியர்
**மிதுனா இரட்ணகுமார்**
**ரம்மியா பாண்டியராஜா**

விளம்பர பொறுப்பாளர்
**ரம்சியா பாண்டியராஜா**

# தளிரின் உள்ளே...

யாழ் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பொருளியல் பட்டத்துக்குரிய சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றும் திரு.சுவாமிநாதன் விஜயநாதன் அவர்களுடனான நேர்காணல்.

பக்கம்

பொருளியல்


1. இலங்கையின் போட்டித்தன்மை 01-05
2. மனித தேவைகளும் விருப்பங்களும் 06-12
3. நிறைபோட்டிச் சந்தையும் இலாப சமநிலையும் 13-15
4. இலங்கையின் வறுமை நிலைபற்றிய ஓர் கண்ணோட்டம் 16-19
5. நாணய மாற்று வீத நிர்ணயம் 20-22
6. கேள்விப்பக்க பொருளியலும் நிரம்பல் பக்கப் பொருளியலும் 23-28
7. பொருளாதார முறைமைகள் 29-32
8. (கவிதை) - மனிதனை மாற்றிய வணிகம் 33


வணிகக்கல்வி


9. நிதானமாய் பயணிப்போம் 34-35
10. உற்பத்தி பொருளின் வாழ்கை வட்டம் 36-37
11. இருப்புக்கட்டுப்பாடு 38-39
12. வணிகத்திட்டம் 40-42
13. வணிகங்களுக்கான சமூகப் பொறுப்புக்களும் வணிக விழுமியங்களும் 43-44
14. வங்கிகளின் தொழில்நுட்ப வளர்ச்சி 45-46
15. உலக வங்கி அறிமுகக் குறிப்பு 47-48
16. வலையமைப்பினூடாக வங்கிச் சேவையும், தொலை வங்கிச் சேவையும் 49-50
17. காப்புறுதிச் சேவையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுஸ்தாபனம் 51-55
18. மனித வளமுகாமைத்துவமும் அதன் பணிகளும் 56-58
19. இலங்கையின் பாங்குச்சந்தை 59-61
20. பாங்குகள் - அறிமுகம் 62-63
21. மத்திய வங்கியின் குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும் 64-68

**03. கணக்கீடு**


| | |
|---|---|
| 22.மேந்தலை | 69-70 |
| 23.கணக்கீட்டு எண்ணக்கருக்களும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் | 71-73 |
| 24.New way of Accounting through software | 74-76 |
| 25.இருப்புக்கள் | 77-78 |
| 26.நிதிப்பகுப்பாய்வு | 79-84 |
| 27.வங்கிக் கணக்கிணக்கக் கூற்று | 85-87 |
| 28.ஒதுக்கங்களும் ஏற்பாடுகளும் | 88-89 |
| 29.இலங்கை கணக்கீட்டு நியமம் - 17 (LKAS -17) குத்தகை | 90-92 |
| 30.மீள்மதிப்பீடு | 93-95 |
| 31.பெறுமதி சேர் வரி | 96-98 |
| 32.NVQ Levels | 99-100 |
| 33.கவிதை - ஏணி | 101 |




# OUR PRINCIPAL




Rev.Sr.Antonita Mark, B.A, Dip in Edu., SLPS 2.II

# யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம் - வணிக மாணவர் ஒன்றியம் - 2017



(இருப்பவர்கள்) இடமிருந்து வலம் :- அ.தட்சாயினி (செயலாளர்), திரு.தி.லீன்ரஸ் (பொறுப்பாசிரியர்) அருட்.சகோதரி அன்ரனிற்றா மார்க் (அதிபர்), திருமதி.பு.திருஞானசம்பந்தன் (உப அதிபர்) அ.மேரி டானியா (தலைவர்)

(நிற்பவர்கள்) இடமிருந்து வலம் :- சா.அனார்த்தனி (உபதலைவர்), சு.பாபரா சுஜானா, அ.லூர்த்திகா (உபசெயலாளர்), இ.மிதுனா (இதழாசிரியர்), பா.ரம்சியா, பா.ரம்மியா (இதழாசிரியர்), தா.தர்சிகா, அ.மேரி ஜென்சியா, அ.மேரி சோனியா (பொருளாளர்)

# யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம் - வணிக மாணவர் - 2017



**இருப்பவர்கள் இடமிருந்துவலம்** :- திருமதி.து.சந்திரமோகன், திருமதி.மைக்கல் இவோன், திருமதி.கௌ.சண்முகலிங்கம், திருமதி.ஜெ.ஜெபநேசன், திருமதி.பு.திருஞானசம்பந்தன் (உபஅதிபர்), அருட்சகோதரி அன்ரனிற்றா மார்க் (அதிபர்), திரு.தி.லீன்ரஸ் (பொறுப்பாசிரியர்), திரு.அ.ரவீந்திரன், திரு.ம.மக்சன்

**நிற்பவர்கள் 1ம் வரிசை** :- சா.அனார்த்தினி (உபதலைவர்) சு.பாபரா சுஜானா (அங்கத்தவர்) அ.லூர்த்திகா (உபசெயலாளர்), கு.டினேக்கா, தே.அல்பாஜினி, பா.ரம்மியா (இதழாசிரியர்), செ.சௌமிகா, லூ.சௌமியா, த.தர்சிகா, ஞா.சுதர்சினி, பி.லக்சனா, அ.கனுஜா, அ.தட்சாயினி (செயலாளர்)

2ம் வரிசை :- இ.மிதுனா (இதழாசிரியர்), அ.மேரி டானியா (தலைவர்) சா.சுலக்சி, தே.துஷாந்தினி, அ.மேரி ஜென்சியா, அ.மேரி சோனியா(பொருளாளர்), பி.பியூலா, சி.லாவண்யா, பா.மதுசனா

3ம் வரிசை :- ச.டொறிஷா, கு.அர்ச்சனா, நெ.டெவ்னியா, தா. தர்சிகா, அ.ஆன் சொபியா, அ.தனுஷா, பா.ரம்சியா (விளம்பர பொறுப்பாளர்) வ.மதுசா

## யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம் - வணிக மாணவர் - 2018





யாழ் உயர் தொழிநுட்ப கல்வி நிறுவனத்தில்

பொருளியல் பாடத்துக்குரிய சிரேஷ்ட விரிவுரையாளராக

கடமையாற்றும் திரு.சுவாமிநாதன் விஜயநாதன்

அவர்களுடனான

# நேர்காணல்

1. 15.03.2000 ஆண்டு பொருளியல் பாடத்துக்குரிய விரிவுரையாளராக யாழ்/உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திற்கு அறிமுகமானவர்.

2. H.N.D.Bs, H.N.D.THM கற்கை நெறிகளுக்கு துறை தலைவராக சுமார் 7 வருடங்கள் பணியாற்றியவர்.

3. யா/உயர் தொழினுட்ப கல்வி நிறுவனத்தின் பதில் பணிப்பாளராக (2011 மார்ச் தொடக்கம் 2012 மார்ச் வரை) பணியாற்றியவர்.

4. கலாநிதி பட்டத்தினை (2013 ஜனவரி 01 தொடக்கம் 2017 மே 25 வரை இந்தியாவின் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கற்று நிறைவு செய்தார்.

5. 18 வருடங்களுக்கு மேலாக வெளிவாரி பட்டப்படிப்புக்களுக்கு நல் ஆசானாகவும் வழி காட்டியாகவும் அமைந்தவர்.

01) எங்கள் புலத்தின் பொருளியல் கல்வியாளராக பெருமை பெறும் நீங்கள் இந்தத்துறையை எவ்வாறு தேர்ந்தெடுத்தீர்கள்?

நான் உயர் தரத்தில் கல்வி கற்கும் போது பொருளியலை ஒரு பாடமாகத் தெரிவு செய்தேன் அப்போது எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள் தந்த ஊக்கம் இன்று வரை நான் பொருளா தாரத்தை விரும்பக் காரணமாகியது. அவர்களது அன்பான அரவணைப்பும் அப்பாடத்தை நான் விளக்கத்துடன் படிப்பதற்கும் வழிவகுத்தது. (ஜீவலதா - பாலசிங்கம்)

02) உங்கள் துறை சார்ந்த கல்வியானது உங்கள் தொழில்வாண்மை மேம்பாட்டில் எத்தகைய பங்களிப்பை தந்துள்ளது?

1991ம் ஆண்டு உயர்தரத்தில் சித்தியானதும் யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான நான் 1997 ல் பொருளியல் சிறப்பு பட்டதாரியாக வெளி யேறினேன். அந்த சமயம் பொருளியல் பாடமென் றாலே குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே தெரிவு செய்வதுண்டு இக்காலப்பகுதியில் பொருளியல் சம்பந்தமான வேலை வாய்ப்பு அதிகமாகக் காணப்பட்ட காலப்பகுதியாகவும் இருந்தது. 2000ம் ஆண்டில் இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் பொருளியல் விரிவுரையாளராகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

03) அண்மையில் தாங்கள் கலாநிதிப்பட்ட ஆய்வினை நிறைவு செய்துள்ளமை பற்றி அறிகின்றோம் தங்கள் ஆய்வின் பொருண்மை, பொருளியல் கல்வியில் அதன் முக்கியத்துவம் பற்றி கூறுவீர்களா?

பொருளியலில் முது தத்துவமாணிப் பட்டத்தை (M.Phil in Econome) யாழ் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் சு.நந்தகுமார், பேராசிரியர் சிவநாதன் ஆகியோரின் மேற் பார்வையில் 2009 ம் ஆண்டு நிறைவு செய்தேன். இதன் பிறகு அவர்களது தூண்டலும், ஊக்கமும் எனது பதவியில் நான் பொருளியல் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவி வகிக்கின்றேன். எனது கல்விப் புலத்தில் பொருளியில் கலாநிதிப் பட்டத்தை நிறைவு செய்ய வேண்டிய தேவை உண்டு என்பதும் நீண்ட நாளாக என் வாழ்நாளில் பொருளியலில் ஒரு உச்ச நிலைக்கு செல்ல வேண்டும் என்பது என் தூர நோக்கு. அதன் படி இந்தியாவில் உள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் எனது கலாநிதி பட்டத்தினை தொடர விரும்பி இன்று ஆய்வுக் கட்டுரையினை வழங்கி Vivaவுக்காகக் காத்திருக்கின்றேன். உண்மை யில் ஒவ்வொரு நாட்டினதும் முதுகெலும்பாக உள்ளது பொருளாதாரமே. எனவே அந்த நாட்டின் பொருளாதாரத்தை கற்க வேண்டியது அவசிய மாகும்.

04) தாங்கள் பணியாற்றும் உயர் தொழில்நுட்ப கல்லூரியில் வணிகத்துறை மாணவர்களுக் கென உள்ள கற்கை நெறி பற்றி தெளிவுபடுத்து வீர்களா,?

வணிகத்துறை சார்பாக பின்வரும் துறைகள் காணப்படுகின்றன.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா

உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா

உயர் தேசிய சுற்றுலாத்துறை டிப்ளோமா

இதில் H.N.D.A பகுதி நேரம் முழு நேரம் என 4 வருடங்கள் கொண்டதுறையாகவும் ஏனையவை 3 வருடங்கள் கொண்டுள்ளது.

05) **H.N.D.A** கற்கை நெறி வணிகத் துறையை மாணவர்களுக்கு மட்டுமானதா? அன்றி வேறு துறை மாணவர்களும் கற்க முடியுமா?

வணிகத்துறை மாணவர்களுக்கு உரியதாகவே H.N.DA அமைகின்றது. வணிகத் துறையில் இருந்து வருபவர்களே இக் கற்கை நெறியை பயில வசதியாக இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**06) வணிகத்துறை மாணவர்களுக்கான எதிர்கால தொழில் வாய்ப்புக்கள் பற்றியதான வழிகாட்டலை தருவீர்களா?**

| **H.N.DA** | **H.N.D.M** |
|---|---|
| Accountant | Management Assistants |
| Book Keepers | Administrators |
| Auditors | |

**07) வணிகத்துறை மாணவர்களாகிய எங்களுக்கான உங்கள் அறிவுரையினை வேண்டி நிற்கின்றோம்?**

வணிகத்துறை டிப்ளோமாவுடன் I.T, English அறிவினை வளர்த்து கொள்வதனூடாக உலகில் நீங்கள் எந்த துறையிலும் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியும்

**08) H.N.D.A, H.N.DM கற்கை நெறிக்கான (மாலை நேர, முழுநேர ) அடிப்படைதகைமைகள் யாவை? 2017ம் ஆண்டில் முதல் தடவையாக கா.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் நாம் பல்கலைக்கழக அனுமதிக் கான Z புள்ளி கிடைக்காத வேளையில் 2018 ம் ஆண்டில் இக் கற்கை நெறிகளை தொடர சந்தர்ப்பம் கிடைக்குமா?**

ஆம் H.N.D.A கற்கை நெறிக்கு வர்த்தக பாடநெறி அடிப்படையிலான தகைமை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். கலைப்பிரிவு மாணவர்கள் இதில் இணைக்கப்படமாட்டார்கள். ஆனால் உயர் தேசிய முகாமைத்துவ Diploma வுக்கு கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து துறை மாணவர்களும் உள்ளடக்கப் படுவர்.

**09) நீங்கள் கலாநிதிப்பட்டத்திற்காக தெரிவு செய்த தலைப்புப் பற்றியும் தெரிவுக்கான காரணம் பற்றியும் கூறமுடியுமா?**

எனது கலாநிதி பட்டத்துக்கு தெரிவு செய்த தலைப்பு யாழ் மாவட்டத்தில் கைத்தொழில் முதலீடுகளுக்கான அபிவிருத்தி வாய்ப்புகள் பற்றிய ஓர் ஆய்வு. இதில் 2009 ம் ஆண்டிற்கு முன் (உள்நாட்டு போருக்கு முன்பு) 2009 ம் ஆண்டிற்கு பின் (உள்நாட்டு போருக்கு முன்பு) எத்தகைய முதலீட்டு வாய்ப்புகள் காணப்படுகின்றன. அரசாங்கமும் ஏனைய நிதி நிறுவனாங் களும் நுண்பாக சிறிய, நடுத்தர கைத்தொழில்களுக்கான முதலீடுகளை செய்வதில் எவ்வளவு பங்கு வகிக்கின்றன. என்பதில் 78% முதலீடுகள் அரசாங்கத்தினாலும் மிகுதி ஏனைய நிறுவனங்களினாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வட மாகாணத்தில் மட்டுமன்றி மொத்த இலங்கையிலும் இம் முதலீட்டை அதிகரிப்பதன் ஊடாகவே வேலை வாய்ப்பு அதிகரிப்பு, வறுமை ஒழிப்பு, பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றை ஏற்படுத்தி கொள்ள முடியும். இதனூடாக பேரினப் பொருளாதார உறுதி என்பதனை ஏற்படுத்தி, நிலைபேறான அபிவிருத்தி அடைய இது வழி அமைக்கின்றது.

**10) பரீட்சைகளில் மாணவர் அடைவை அதிகரிக்க கையாளக்கூடிய வழிமுறைகள் பற்றி குறிப்பிட முடியுமா?**

1. கடந்தகால வினாவிடைகளை பல முறை பயிற்சி செய்து பார்த்தல்.
2. மத்தியவங்கியின் அண்மைக்கால அறிக்கைகளைப் பின்பற்றி பாட விதானத்தை கற்பித்தல்.
3. அடிக்கடி பரீட்சைகளை மேற்கொள்ளுதல்
4. குழுக்கல்வி முறைகளை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல்.
5. பொருளியல் ஆய்வு அரங்குகளைப் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தல்.

# பொருளியல்

# ஸ்யமந்தகம்

# இலங்கையின் போட்டித் தன்மை
# Sri Lankas Competitiveness



வே.கருணாகரன்
பொருளியல் ஆசிரியர்

**அறிமுகம் - Introduction**

உள்நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் பரவலாகப் பேசப்படும் ஒரு விடயம் போட்டித் தன்மை பற்றியதாகும். இலங்கை சுதந்திரம் பெற்று 70வது வருட நிறைவைக் கொண்டாடவுள்ள நிலையில் (1948-2018) 2017 செப்டெம்பர் 04 இல் அரசினால் முன்வைக்கப் பட்டுள்ள"தொலைநோக்கு 2025 - ஒரு வளமான நாடு" (Vision 2025- A Country Enriched) என்ற அபிவிருத்தித்திட்டத்தில் இலங்கையின் போட்டித் தன்மையை மேம்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் பரீட்சை களில் முக்கியத்துவம் பெறும் விடயமாக "போட்டித் தன்மை" என்பது விளங்குவதனால் அது பற்றி மாணவர் வினாக்களுக்கு விடையளிக்கக் கூடிய வகையில் சுருக்கமாக பின்வரும் ஏழு உபதலைப் புக்களில் ஆராயப்படுகிறது.

*i. வரைவிலக்கணம்*
*ii. நிர்ணயிக்கும் காரணிகள்*
*iii. உலகளாவிய போட்டித் தன்மைச் சுட்டெண்*
*iv. இலங்கையின் நிலை*
*v. மேம்படுத்துவதன் அவசியம்*
*vi. பிரச்சினைக்குரிய காரணிகள்*
*vii. மேம்படுத்தும் வழிமுறைகள்*

**i. வரைவிலக்கணம் - Definition**

உலக பொருளாதார மன்றம் (World Economic Forum) நாட்டின் போட்டித் தன்மை யினை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தி யுள்ளது.

"நாடொன்றின் உற்பத்தித்திறன் மட்டத் தினை நிர்ணயிக்கும் நிறுவனங்கள், கொள்கைகள் மற்றும் காரணிகளின் தொகுப்பு"

"The set of institutions, policies and factors that determine the level of productivity of a country"

வளர்ச்சி மாதிரியுருக்கள் (Growth models) நீண்ட காலத்தில் ஒரு நாடு அதன் மக்களின் சௌபாக்கிய மட்டத்தினை விபரிக்கின்ற மிக அடிப்படையான விடயமொன்றாக உற்பத்திதிறன் இருக்கின்றது எனப் பரிந்துரைக்கின்றது.

**ii. நிர்ணயிக்கும் காரணிகள் Determinants**

- *விளைதிறன் /உற்பத்தித்திறன்*
- *பேரினப் பொருளாதார உறுதிப்பாடு*
- *உட்கட்டமைப்பு வசதிகள்*
- *ஆய்வு மற்றும் அபிவிருத்தி (R&D) மீதான முதலீடுகள்*
- *வரிக்கட்டமைப்பு*
- *நாணயமாற்றுவீத உறுதிப்பாடு*
- *உலகச்சந்தைக்கு தேவையான மனித மூலதனத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமை*
- *வணிகம் செய்வதிலுள்ள செலவுகள் (Cost of Doing Business)*
- *நிர்வாக முறையின் தன்மை*
- *ஊழியச் சந்தையின் நெகிழ்தன்மை*
- *அரசாங்க நிர்வாகத்தின் வினைத் திறன்*
- *தனியார் சொத்துரிமைப் பாதுகாப்பு*
- *சட்டவாதிக்கம்*
- *நல்லாட்சி*

**iii. உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண்**
**(Global Competitiveness Index - GCI)**

உலகளாவிய ரீதியில் நாடுகளின் போட்டித் தன்மையின் நிலைமையை இனங் காணப்பதற்கு உலக பொருளாதார மன்றத்தால் (WEF) இது அறிமுகப்படுத்தப்பட்டது.

இது பின்வரும் 12 தூண்களால் (Pillars) அளவிடப்படுகிறது. இது நாடுகளாக மூன்று விசேட கட்டங்களாக பிரித்துள்ளது.

| தூண்கள் | கட்டங்கள் – பொருளாதாரம் |
|---|---|
| 1. நிறுவனங்கள்<br>2. உட்கட்டமைப்பு<br>3. பேரினப்பொருளாதார சூழல்<br>4. சுகாதாரமும் முதல் நிலைக் கல்வியும் | → காரணிகள் ஊடாக இயக்கப்படும் பொருளாதாரம்<br>Factor -Driven Stage |
| 5. உயர்கல்வியும் பயிற்சியும்<br>6. பொருட்சந்தையின் செயற்திறன்<br>7. உழைப்புச் சந்தையின் செயற்திறன்<br>8. நிதிச்சந்தை அபிவிருத்தி<br>9. தொழில் நுட்ப ஆயத்தம்<br>10. சந்தையின் பருமன் | → செயற்திறன் -ஊடாக இயக்கப்படும் பொருளாதாரம்<br>Efficiency - Driven stage |
| 11. வணிக நுணுக்கம்<br>12. புத்தாக்கம் | → புத்தாக்கத்தின் - ஊடாக இயக்கப்படும் பொருளாதாரம்<br>Innovation - driven Stage |

இலங்கை காரணிகள் ஊடாக இயக்கப்படும் பொருளாதாரமாக உள்ளது.

உலக போட்டித் தன்மை அறிக்கை 2016-2017 இதன்படி மிகவும் போட்டித்தன்மை கொண்ட உயர் நிலையிலுள்ள 10 நாடுகள் வருமாறு.

| தரம் Rank | நாடுகள் |
|---|---|
| 1 | சுவிஸ்லாந்து |
| 2 | சிங்கப்பூர் |
| 3 | ஐக்கிய அமெரிக்கா |
| 4 | நெதர்லாந்து |
| 5 | ஜேர்மனி |
| 6 | சுவீடன் |
| 7 | ஐக்கிய இராச்சியம் |
| 8 | ஜப்பான் |
| 9 | கொங்கொங் |
| 10 | பின்லாந்து |

## IV. இலங்கையின் நிலை - Current Context

உலகளாவிய போட்டித் தன்மைச் சுட்டெண் 2016/2017 இல் 138 நாடுகளில் இலங்கை 71வதாக தரமிடப்பட்டதுடன் இது 2015 /2016 இல் அதன் நிலைமையிலிருந்து (68) மூன்றிடங்கள் வீழ்ச்சியடைந்துள்ளது. அதே நேரம் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளான சிங்கப்பூர் 2வது மலேசியா 25வது இந்தியா 39வது நிலைகளில் தரமிடப்பட்டு கடந்த சில தசாப்தங்களில் தாங்களின் உலகப் போட்டித் தன்மையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினைக்காட்டின.

**இலங்கையின் அயல் (தென்னாசிய/ சார்க்) நாடுகளின் நிலை வருமாறு.**

| தரம் | நாடுகள் |
|---|---|
| 39 | இந்தியா |
| 71 | இலங்கை |
| 97 | பூட்டான் |
| 98 | நேபாளம் |
| 106 | பங்களாதேஷ் |
| 122 | பாகிஸ்தான் |

## V. மேம்படுத்துவதன் அவசியம் Need of Improving

ஒரு போட்டித் தன்மையுள்ள நாடு உற்பத்தி திறன் கொண்டது. அது பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும். அதன் மூலம் வருமானம் அதிகரிக்கும் வருமான அதிகரிப்பு வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கும். எனவே போட்டித் தன்மையை மேம்படுத்துவது அவசியம்.

பெருமளவில் வர்த்தகத்தில் தங்கியிருக்கும் சிறிய பொருளாதாரம் என்ற வகையிலும், அதிகரித்தளவில் உலகமயப்பட்டு வரும் சூழல் ஒன்றிலும், நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு போட்டித் தன்மையை மேம்படுத்துவது அவசியமாகும்.

எங்களது தொலைநோக்கு 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையை ஒரு செல்வந்த நாடாக உருவாக்குவதாகும். (Make Sri Lanka a rich country by 2025)

- ***வருடத்தலைவருமானத்தை ஐக்கிய அமெரிக்க டொலர் 5000 இற்கு உயர்த்துதல்.***
- ***ஒரு மில்லியன் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.***
- ***வெளிநாட்டு நேரடிமுதலீட்டை (FDI) ஐக்கிய அமெரிக்க டொலர் 5 பில்லியனுக்கு அதிகரித்தல்.***
- ***வருடாந்த ஏற்றுமதியை ஐ.அ.டொலர் 20பில்லியனுக்கு இரட்டிப்பாக்குதல்.***

இவை "தொலைநோக்கு 2025" இன் இடைநிலை அறிவை அடிப்படையாகக் கொண்ட உயர் போட்டித் தன்மையுள்ள சமூக சந்தைப் பொருளாதாரமாக மாற்றுவதால் இவற்றை அடைய முடியும். இதனூடாக இந்து சமுத்திரத்தின் மையமாக (hub of the Indian Ocian) இலங்கையை மிளிர வைக்க முடியும்.

அதிகரித்துச் செல்லும் போட்டித் தன்மை யுடைய உலக சந்தையில் ஒரு நாட்டின் தேசிய போட்டித் தன்மையானது உலக பெறுமதிச் சங்கிலியில் (Global Value Chain) தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்ற அதன் திறமை யிலும், உயர்ந்த வளர்ச்சிக்கு இன்றியமையாத வையான பொருட்கள், சேவைகள், முதலீடுகள் மற்றும் மனித மூலதனம் போன்றவற்றின் வர்த்தகத்தில் உயர்ந்த பங்கிற்காக வெற்றிகரமாக

போட்டியிடுவதிலும் தங்கியுள்ளது. நாடுகள் அதிகரித்த சவால் மிக்கதும் தேவைப்படுகின்றதுமான உலக சந்தையில் போட்டியிடுவதனால் நாட்டின் போட்டித் தன்மையானது முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்கள் (Emerging market economies) இரண்டிலும் பொருளியளாலர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்குமிடையிலான கலந்துரையாடலின் மையக்கருவாகமாறியிருக்கின்றது.

"தாழ்ந்த - நடுத்தர வருமான நாடு (Lower - middle income economy)" எனும் வகையிலிருந்து "உயர் நடுத்தர வருமான நாடு (Upper - middle income economy) ஆக மேல் நோக்கிச் செல்வதற்காக அதன் போட்டித் தன்மையை மேம்படுத்திக் கொள்ளும் கொள்கை முயற்சிகள் இன்று இலங்கைக்குத் தேவையானதொன்றாகவுள்ளது.

## VI. பிரச்சனைக்குரிய காரணிகள் Problematic Factors

உலகளாவிய போட்டித்தன்மை சுட்டெண் அறிக்கை 2016/17 இல் அடையாளம் காணப்பட்ட இலங்கையில் வர்த்தகம் செய்வதற்கு சவால் மிக்க காரணிகளாவன.

1. ***கொள்கை உறுதியின்மை***
2. ***நிதியிடலுக்கான அனுகுமுறை***
3. ***செயற்திறனற்ற அரசபணித்துறை***
4. ***வரி வீதங்கள்***
5. ***வரி ஒழுங்குவிதிகள்***
6. ***உட்கட்டமைப்புக்களின் நிரம்பல் போதாமை***
7. ***தேசிய தொழிற்படையில் வேலைசார் விழுமியம் போதாமை***
8. ***பணவீக்கம்***
9. ***ஊழல்***
10. ***அரசாங்க உறுதிப்பாடின்மை***
11. ***வெளிநாட்டுச் செலவாணி ஒழுங்கு விதிகள்***
12. ***போதியளவு கற்றல் இல்லாத தொழிற் படை***
13. ***இறுக்கமான ஊழியர் ஒழுங்குவிதிகள்***
14. ***குற்றம் மற்றும் களவுகள்***
15. ***போதாத பொதுசுகாதாரம்***
16. ***புத்தாக்கத்திற்கான இயலளவு போதாமை***

உலகளாவிய முதலீட்டாளர்களால் வழங்கப்பட்ட மேற்படி கருத்துக்கள் போட்டித் தன்மையை மேம்படுத்தும் கொள்கை முயற்சியாளர்களுக்கு பயன்பாடுடையவையாகும்.

## VII. மேம்படுத்தும் வழிமுறைகள் Measures Towards Improving

உலகளாவிய போட்டித் தன்மை தரமிடலில் இலங்கையின் செயலாற்றத்தினைப் பகுப்பாய்வு செய்ததில் பின்வரும் விடயப்பரப்புக்கள் உலக அரங்கில் நாட்டின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கான சீர்திருத்த செயன்முறையின் கொள்கை முன்னுரிமைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன:

1. ***நிலையான தேசிய அபிவிருத்திக் கொள்கைக்கான தேவைப்பாடு***

   ***வளர்ச்சிக்கான புதிய அனுகுமுறையாக அறிவு சார்ந்த உயர்போட்டித் தன்மைமிக்க சமூக சந்தைப் பொருளாதார மாதிரியை பின்பற்றுதல்.***
2. ***உட்கட்டமைப்பின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அரசதனியார் பங்குடமை (PPP) உபாயத்தைப் பின்பற்றுதல்.***

   ***கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக்குள் (Colombo port city Development) கொழும்பு சர்வதேச நிதி நிலையத்தை (Colombo International Financial Centre) அமைத்தல்.***
3. ***அதிகாரப்பரப்பிலான தடைகளை குறைப்பதற்கான சீர்திருத்தங்கள் நல்லாட்சியை (Good Governance) ஏற்படுத்தல்.***
4. ***ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் (R&D) மற்றும் புத்தாக்கமும் அறிவு மற்றும் தொழில் நுட்பத்தினூடாக கிராம மற்றும் நகரத்திற்கு இடையிலான இடைவெளிக்கு பாலம் அமைத்தல்.***
5. ***பேரண்டப்பொருளாதார உறுதிப் பாட்டை மேம்படுத்துதல்.***

இதற்கான நடவடிக்கைகள்.

A. பணவீக்க இலக்கிடல் மூலம் விலை உறுதிப்பாட்டை (நடு ஒற்றை இலக்கத்தில் 5%) (4% - 6%) பேணுதல்.

B வெளிநாட்டு வர்த்தகத்தை மேலும் திறந்து விடல். சிங்கப்பூர் மற்றும் சீனாவுடன் புதிய சுகந்திர வர்த்தக உடன்படிக்கை (FTAS) செய்தல்.

C சந்தைசார் போட்டித் தன்மையுள்ள நாணய மாற்றுவீதத்தை பேணுதல்.

D அரச நிதியைப் பலப்படுத்தல்

- ***2017 - 2020 காலப்பகுதியில் பொது முதலீட்டை மொத்த முதலீட்டில் 5% - 6% மாக பேணுதல்.***
- ***அரசிறையை அதிகரித்தல். நேர்வரிகளின் பங்கை அதிகரித்தல்.***
- ***வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறையைக் குறைத்தல்.***
- ***மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுப் படுகடன்களின் பங்கைக் குறைத்தல்.***
- ***சந்தைத் தேவைகளுக்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வியை மேம்படுதல்.***
- ***முதலீட்டாளர் நட்பு, ஏற்றுமதி நட்புச் சூழல் ஒன்றை ஏற்படுத்தல்.***
- ***தொழிற்சட்டங்களை மாற்றுதல்.***
- ***அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தல்.***
- ***சந்தைத் தேவைப்பாடுகளுக்கேற்ப மூன்றாம் நிலைக் கல்வியை மேம் படுத்தல்.***

## முடிவுரை Conclusion

மூன்று தசாப்த கால நீண்ட உள்நாட்டுப் போர் இலங்கையின் போட்டித் தன்மையைக் கடுமை யாகப் பாதித்தது. இலங்கை முன்னேற்ற மடைந்த நாடொன்றாக மாற்றிக் கொள்வதற்கான பல சந்தர்ப்பங்களை இழந்துள்ளமையால் உலகச் சந்தைகளின் போட்டித் தன்மையினை மீளப் பெற்றுக் கொள்வதனை மேலும் தாமதப்படுத்த முடியாது. அரசாங்கம் இத்தேவையினை ஏற்கனவே அங்கீகரித்துள்ள போதும் கொள்கைகள் நடை முறைப்படுத்தப்படும் வேகம் விரைவுபடுத்தப்பட வேண்டும். அனைத்து ஆர்வலர்களது ஆதரவை யும் பெற்றுக் கொள்ளக் கூடிய அனைத்தையும் உள்ளடக்கிய செயற்றிட்டம் இலங்கைக்கு தேவைப்படுகின்றது. போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கான மேற்படி வழிமுறைகள், சீர்த்திருத்தங்களைத் தக்க வைத்துக் கொள்வ தற்கும் முன்னேற்றுவதற்கும் வலுவான அரசியல் அர்ப்பணிப்பு தேவைப்படும் அதே வேளை, தேசிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பொது மக்களின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதும் அவசியமாகின்றது. இதனை அடைந்து கொள்வ தற்கு பொது மக்களின் மனோபாவத்தினை மாற்ற வேண்டியது இன்றியமையாததாகும்.

## உசாத்துணைகள் - Reference


1. 'Vision 2025 - A Country Enriched''
   Development plan (2017 - 2025)
   (04.09.2017)
2. The Global Competitiveness
   Report 2016 - 2017
   World Economic forum (2017)
3. Annual Report 2016
   Central Bank of Sri Lanka (19 April 2017)
   (English) P 30-32
   (Tamil) P 32-35


*பணம் இருந்தால் உன்னை உனக்கு தெரியாது*
*பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்குமே தெரியாது.*

# மனித தேவைகளும் விருப்பங்களும்



ம.சுரேஸ்கரன்
ஆசிரியர்
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

**மனித தேவைகள் (Need)**

நபரொருவர் வாழ்வதற்குத் தேவையான அதி குறைந்த வசதிகள் மனித தேவைகளாகும். இவற்றுள் உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம் என்பன மனிதனின் அடிப்படைத் (பௌதீக ரீதியிலான) தேவைகளாகும். சுய மரியாதை, குடும்பம் அல்லது சமூகக் குடும்ப மொன்றில் அங்கம் வகிக்கும் தேவை, அன்பினைப் பெறல் என்பன உளரீதியிலான தேவைகளாகும்.

**மனித விருப்பங்கள் (Wants)**

மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வும், திருப்தியை அதிகரித்துக் கொள்ளவும் மனிதனால் தெரிவு செய்யப்படும் பல்வேறு விதங்கள், வடிவங்கள், முறைகள் மனித விருப்பங்களாகும்.

உதாரணமாக உடைகள் மனித தேவை யாக உள்ள அதே வேளை கவுண்கள், சேலைகள், சேட்டுக்கள், காற்சட்டைகள், ரீசேட்டுக்கள் போன்றன மனித விருப்பங்களாகும்.

சுவை வேறுபாடுகளின் அடிப்படையில் விருப்பங்கள் வேறுபடும்.

**மனித தேவைகள், விருப்பங்களுக்கு இடை யிலான வேறுபாடுகள்**

- *மனித தேவைகள் வரையறுக்கப்பட்டவை ஆனால் மனித விருப்பங்கள் வரையறை யற்றவையாகும்.*
- *மனித தேவைகள் பொதுவானவை. ஆனால் மனித விருப்பங்கள் நபருக்கு நபர் வேறுபடும்.*
- *மனித தேவைகள் உயிரியல் விஞ்ஞான ரீதியாக இருப்பதுடன் மனித விருப்பங்கள் சமூக, கலாசார காரணிகளுடன் இணைந் திருக்கும்.*

**மனித விருப்பங்களை நிறைவேற்றப் பயன்படும் பொருட்கள்.**

- *பொருளாதாரமல்லாப் பண்டங்கள்/இலவசப் பண்டங்கள் (Free Goods)*
- *பொருளாதாரப்பண்டங்கள்*

**பொருளாதாரமல்லாப் பண்டங்கள்/ இலவசப் பண்டங்கள் (Free Good)**

- *பூச்சிய விலையில் பூரண நிரம்பலைக் கொண்டுள்ள பண்டங்கள் பொருளாதார மல்லாப் பண்டங்களாகும்.*
- *அமையச் செலவின்றிப் பெறப்படும் பண்டங் கள் பொருளாதாரமல்லாப் பண்டங்களாகும்.*

*செலவேதுமின்றி வரையறையற்ற அளவினை நுகர்வு செய்யும் பண்டங்கள் பொருளாதார மல்லாப் பண்டங்களாகும்.*
*நிரம்பலில் அமையச் செலவைக் கொண்டிருக் காதவை*

உ+ம் :- சூரிய ஒளி, இயற்கைக்காற்று, கடல் நீர், மழை

**பொருளாதாரமல்லா பண்டங்களின் பண்புகள்**

- *அமையச் செலவைக் கொண்டிருக்காது வளச் செலவு (உற்பத்தி செலவு) இல்லாம லிருத்தல்.*
- *பூச்சிய விலையின் கீழ் இயற்கையிலிருந்து எல்லையற்றுக்கிடைத்தல்*

- *நுகர்வில் போட்டித் தன்மை கிடையாது*
- *எவருடைய தலையீடுமின்றி இலவமாகக் கிடைத்தல்.*

## பொருளாதார பண்டங்கள் (Economic Good)

- *உற்பத்தியில் அமையச் செலவினை கொண்டுள்ள பண்டங்கள் பொருளாதாரப் பண்டங்களாகும்.*
- *நிரம்பலில் அருமைத் தன்மையைக் கொண்டுள்ள பொருள்கள் பொருளாதாரப் பண்டங்களாகும்.*

உ+ம் : கணினிகள், உடைகள், தொலைக் காட்சிப் பெட்டிகள், பாடநூல்கள்

## பொருளாதாரப் பண்டங்களின் பண்புகள்

- *அமையச் செலவைக் கொண்டிருத்தல்*
- *வளச் செலவு (உற்பத்திச் செலவு) காணப்படுதல்*
- *மனிதன் தலையீடு செய்து வளங்களை ஒன்றிணைத்து உற்பத்தி செய்தல்.*
- *நுகர்வில் போட்டித் தன்மை காணப்படுதல்.*
- *அருமைத் தன்மை காணப்படுதல்.*

## பொருளாதாரமல்லாப் பண்டம் பொருளாதார பண்டமாக மாறும்

பொருளாதாரமல்லா பண்டம் பொருளா தார பண்டத்தின் பண்புகளைப் பெறும் நிலையில் பொருளதாரப் பண்டமாக மாறும். பொருளாதார மல்லாப் பண்டம் சமூகத்தேவைகளோடு ஒப்பிடுகையில் பற்றாக்குறையின்றி ஏராளமாகக் கிடைக்கும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் சமூகத் தேவைவகளோடு ஒப்பிடும் போது பற்றாக்குறையாகக் காணப்படும். இதனால் அதனை உற்பத்தி செய்தே பெற வேண்டி ஏற்படும்.

இதனால் பொருளாதாரமல்லாப் பண்டமாக இருப்பினும் காரணிச் செலவு (உற்பத்தி செலவு) ஏற்றுப் பொருளை பெற்றுக் கொண்டால் அது பொருளாதார பண்டமாக மாறும்.

உதாரணமாக சுரங்கத் தொழிலாளர்கள் சுவாசிக்கப் பயன்படுத்தும் வளி.

பொருளாதாரமல்லாப் பண்டங்களுக்கு எல்லையற்ற நிரம்பல் உண்டெனக் கூற முடியாது. பொருளாதாரமல்லாப் பண்டங்களானவை சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடும் போது பற்றாக்குறையின்றி கிடைத்தாலும் அவற்றின் நிரம்பல் அளவுகள் எல்லைக்கு உட்பட்டவை யாகும்.

உதாரணமாக சூரிய ஒளி பகலில் மட்டுமே கிடைக்கும். ஆனால் சில நாடுகளில் வருடத்தின் சில காலங்களில் அல்லது நாளொன்றுக்கு சில மணித்தியாலங்கள் மட்டுமே சூரிய ஒளி கிடைக்கிறது.

காற்றை விசேட சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளும் பொருட்டு செலவேற்படுகிறது.

## பொருள் (good)

நேர்கணிய திருப்தியை அதாவது பயனைப் பெற்றுத் தரும் எதுவும் பொருளாகும்.

## தீய பொருள் (Bad Good)

- *எதிர்க்கணிய திருப்தியைக் கொண்டுள்ள அல்லது பயன்பாடற்ற வகையான பொருள் தீய பொருளாகும்.*
- *பூச்சிய விலையில் எதிர்க்கணியக் கேள்வியை யுடைய பொருள் தீய பொருளாகும்.*

## வளங்கள் Resources

*உற்பத்திச் செயற்பாட்டிற்குப் பயன்படுத்தக் கூடிய எல்லா உள்ளீடுகளும் வளங்களாகும்.*

## மீள உற்பத்தி செய்யக்கூடிய வளங்கள்

பயன்படுத்துவதினால் குறைந்து விடாத அல்லது இழக்கப்படாத மீண்டும் மீண்டும் உற்பத்தி செய்யக்கூடிய இயற்கை வளங்கள் மீள உற்பத்தி செய்யக் கூடிய அல்லது புதுப்பிக்கத்தக்க வளங்களாகும்.

உ+ம் : காடுகள், மீன்வளம், வனவிலங்குகள், புற்றரைகள்

## மீள் உற்பத்தி செய்ய முடியாத வளங்கள்

பயன்படுத்துவதினைப் குறைந்து விடுகின்ற அல்லது இழக்கப்படுகின்ற இயற்கையினால் மீளுருவாக்கம் பெறாத இயற்கை வளங்கள் மீள உற்பத்தி செய்ய முடியாத அல்லது புதுப்பிக்க முடியாத வளங்களாகும்.

உ+ம் :- பெற்றோலியம்

## பொருளாதாரமல்லா வளங்கள்
## Non Economic Resources

இயற்கையிலிருந்து விலையின்றிப் பெறப்படும் அமையச் செலவொன்றைக் கொண்டிராத பொருட்கள், சேவைகள் உற்பத்திக்குப் பயன்படும் அருமைத் தன்மையற்ற வளங்கள் பொருளாதார மல்லா வளங்களாகும்.

உ+ம் :- சூரிய ஒளி, காற்று, மழை

## பொருளாதார வளங்கள்
## Economic Resources

சமூகத்தின் அளவற்ற விருப்பங்களுடன் ஒப்பிடுகையில் அருமையானதாகவும் வரையறுக்கப்பட்ட நிரம்பலைக் கொண்டதுமான உற்பத்திக் காரணிகள் பொருளாதார வளங்களாகும்.

அருமைத் தன்மையின் காரணமாக பொருளாதார வளங்களுக்கு அமையச் செலவுண்டு அத்துடன் மாற்றுப் பயன்பாடு உண்டு பொருளாதார வளங்களை வகைப்படுத்தல்.

நிலம்
உழைப்பு
மூலதனம்
முயற்சியாண்மை

உற்பத்தி வளங்களின் பிரிவுகள்

நிலம்
உழைப்பு
மூலதனம்
முயற்சி

## நிலம் (Land)

இயற்கையினால் வழங்கப்பட்ட உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய வினைத்திறன் கொண்ட எல்லா இயற்கை வளங்களும் நிலமாகும்.

உ+ம் : புவியியல் எல்லை, ஆறுகள், தாவரங்கள், கனிய வளங்கள், மழைநீர், இயற்கை காடுகள், காலநிலை, நீர்வீழ்ச்சிகள்

## நிலத்தின் பண்புகள்

- *இயற்கை வளமாக இருத்தல்*
- *நிரம்பல் நெகிழ்ச்சியற்றதாக இருத்தல்*
- *அசையும் தன்மை தொடர்பாக ஒரு எல்லை காணப்படல்*
- *வினைத்திறனை உயர்த்த முடிதல்*
- *நிலத்திற்கு வழங்கப்படும் காரணிக் கொடுப்பனவு வாடகையாகும்.*

## உழைப்பு/ ஊழியம் (Labour)

பொருட்கள், சேவைகள் உற்பத்திக்கு பயன்படும் உடல், உள ரீதியான முயற்சி உழைப்பாகும்.

## உழைப்பின் பண்புகள்

- *உயிருள்ள உற்பத்திக் காரணியாக இருத்தல்*
- *அசையும் தன்மையைக் கொண்டிருத்தல்*
- *ஒரினத்தன்மை கொண்டதாக அமையாமை*
- *உழைப்பின் வினைதிறனை அதிகரிக்க முடிதல்*
- *உழைப்பை உரியவரிடமிருந்து பிரிக்க முடியாதிருத்தல்*
- *உழைப்பிற்கான காரணிக் கொடுப்பனவு சம்பளமாகும்.*

## ஊழிய நிரம்பல் Labour Supply

குறித்த ஒரு காலப்பகுதியில் பொருட்கள், சேவைகள் உற்பத்திக்காக செலவிடப்படும் ஊழிய மணி நேரத்தின் அளவு ஊழிய நிரம்பலாகும்.

## ஊழிய நிரம்பல் தங்கியிருக்கும் காரணிகள்

- *ஊழியப்படை*
- *ஊழியர் வேலை செய்யும் சராசரி நேரம் (ஊழிய மணித்தியாலய அளவு)*
- *கூலி / சம்பள மட்டம்*
- *சனத்தொகையின் அளவு*
- *சனத்தொகையின் பால் அமைப்பு*
- *சனத்தொகையின் வயதமைப்பு*

## மூலதனம் Capital (முதல்)

மனிதனால் உருவாக்கப்பட்டு உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பண்டங்கள் மூலதனமாகும்.

உ+ம் :- கட்டிடங்கள், தளபாடங்கள், பொதிகள்

## மூலதனத்தின் பண்புகள்

- *மனிதனால் உருவாக்கப்பட்ட வளமாக இருத்தல்*
- *விளைத்திறன் கொண்டிருத்தல்*
- *மீண்டும் மீண்டும் உற்பத்திக்கு பயன்படுத்த முடியும்*
- *தேய்விற்கு உட்படுதல்*
- *மூலதனத்திற்கு வழங்கும் காரணிக் கொடுப்பனவு வட்டி ஆகும்.*

## மூலதனத்தின் பல்வேறு வடிவங்கள்

### நிலையான மூலதனம்/மெய் மூலதனம்/ பௌதீக மூலதனம்

உற்பத்திக்குத் துணை செய்யும் உற்பத்தி நடவடிக்கைகளின் போது பெறுமானத் தேய்வுக் குட்படும் நீண்ட கால உபயோகங் கொண்ட நிலையான சொத்துக்கள் நிலையான மூலதன மாகும்.

ஒரு நாட்டின் உற்பத்திச் சக்தியை உயர்த்துவ தற்கு நிலையான மூலதனம் அவசியமான ஒன்றாகும்.

உ+ம் :- இயந்திர உபகரணங்கள் கருவிகள், கட்டடங்கள் என்பன

### சூழலும் மூலதனம்/தொழிற்பாட்டு மூலதனம்/ மாறும் மூலதனம்

குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் பொருளாதாரத் தில் முடிவுப் பொருட்களாக மாற்றப்படாத நிலையி லுள்ள பொருள் கையிருப்பு சூழலும் மூலதன மாகும்.

சூழலும் மூலதனம் உற்பத்தி நடவடிக்கையை இலகுபடுத்துகிறது. பொருள் இருப்புக்கள் போன்ற வற்றை சூழலும் மூலதனம் உள்ளடங்குகிறது.

### பொருளாதார பொதுப்பணி மூலதனம்

பொருள்கள் சேவைகளின் உற்பத்தியையும் பரிமாற்றத்தையும் இலகுவாக்கும் பல்வேறு மூலதனப் பொருள்கள் பொருளாதாரப் பொதுப் பணி மூலதனம் எனப்படும். இம்மூலதனமானது பொருளாதார அடிப்படைக்கட்டமைப்பு, உட் கட்டமைப்பு, கீழ்கட்டுமானம் போன்ற பல்வேறு பதங்களால் இது அழைக்கப்படுகிறது. இவ் வகையான மூலதனத்தின் பிரதான பணியா தெனில் உற்பத்தியாளருக்கு அவசியமான வசதி களை வழங்குவதாகும்.

உ+ம் :- நெடுஞ்சாலைகள், புகையிரத வீதிகள், துறைமுகம், விமான நிலையம், தொலைத் தொடர்புச் சேவைகள், நீர்ப்பாசனக் கால்வாய்கள், மின்சாரமும் சக்தி வளமும்

### சமூகப் பொதுப்பணி மூலதனம்

போசாக்கு, நோயற்றதன்மை (சுகவாழ்வு) கல்வியறிவு, வதிவிடவசதிகள் போன்ற அடிப்படை மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பயன் படுத்தப்படும் மூலதனப் பொருள்கள் சமூகப் பொதுப்பணி மூலதனம் எனப்படும்.

உ+ம் : கல்வித்துறையில் பாடசாலைக் கட்டடங் கள், உபகரணங்கள், சுகாதாரத்துறை சார்ந்த கழிவிடங்கள், கழிவகற்றும் வடிகால்கள், குழாய்கள், வதிவிடக் கட்டடங்கள்.

### இயற்கை மூலதனம்

இயற்கையினால் வழங்கப்பட்ட உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய வினைத்திறன் கொண்ட சகல இயற்கை வளங்களும் இயற்கை மூலதனமாகும்.

உ+ம் :- புவியியல் எல்லை, நதிகள், கடல்கள், கனியவளங்கள், இயற்கைக் காடுகள் என்பவை

### சமூக மூலதனம்

பொது நலனை அடைவதை நோக்கமாகக் கொண்டு மக்களால் உருவாக்கப்படுகின்ற பரஸ்பர ஒத்துழைப்புக் குழு, அமைப்புக்கள் என்பவற்றின் மூலம் உருவாக்கப்படும் மக்களுக்கிடையிலான சமூக நன்மைகள் சமூக மூலதனமாகும்.

உ+ம் :- மரண சகாய சங்கம்,விவசாய அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள்

சமூக மூலதனமானது இலங்கையின் கலாச்சாரத்தில் ஒரு பகுதியாகும். இச் சமூக ஒன்றிணைவானது சமூக விளைதிறன், அதன் நலன் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனூடாக பொருளாதார அபிவிருத்திக்கு அதன் பங்களிப்பை வழங்கும், சமூக முதல் மக்கள் பிரிந்து காணப்படும் நிலையிலிருந்து அவர்களை ஒன்றிணைப்பதனால் மக்களின் சக்தியை ஒன்று திரட்டி பொது இலக்குகளை அடைய வழி செய்கிறது.

### மனித மூலதனம்

ஊழியரிடமுள்ள சில விசேட உற்பத்தித் திறமைகள் மனித மூலதனம் எனப்படும். ஊழியத்தின் வினைத்திறனை உயர்த்த உதவும் விடயங்கள் மனித மூலதனத்திற்குள் உள்ளடக்கப்படுகின்றன.

உற்பத்தி நடவடிக்கையுடன் தொடர்புடைய விஞ்ஞான தொழில்நுட்ப அல்லது வினையாற்றல் சார் முகாமைத்துவப் பயிற்சி, உற்பத்தி நடவடிக்கையுடன் இணைந்த அனுபவம், அறிவு ஆகியவை யெல்லாம் மனித மூலதனத்தினுள் உள்ளடக்கப்படும். இப் பண்புகள் ஊழியத்தின் தரத்தினையே குறிப்பிடுகின்றன.

உ+ம் : ஊழியரிடமுள்ள அறிவு, திறமை, நிபுணத்துவம், பயிற்சி, அனுபவம் என்பவை

### முயற்சியாண்மை

பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதன் பொருட்டு நிலம், உழைப்பு மற்றும் மூலதனம் ஆகிய உற்பத்தி வளங்களை ஒருங்கிணைத்து உற்பத்தியை ஒழுங்கமைக்கும் நடவடிக்கை முயற்சியாண்மை எனப்படும்.

உற்பத்தி நடவடிக்கைகளுக்கு ஊன்றுகோளாக அமைவது முயற்சியே எனலாம்.

இடரைத் தாங்கி கொள்கை ரீதியான உற்பத்தி தீர்மானங்களை மேற்கொள்வதுடன் உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் என்பவற்றை முயற்சியாண்மையாகக் காட்ட முடியும்.

### முயற்சியாளரின் பிரதான தொழிற்பாடுகள்

- *கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்தல்*
- *உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்*
- *உற்பத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்*
- *புத்துருவாக்கம்/புதிய உற்பத்தி*
- *இடரை எதிர்கொள்ளல்/ நட்ட அச்சங்களை ஏற்கத் தயாராக இருத்தல். (இலாப நட்டத்திற்கு முகம் கொடுத்தல்)*

### முயற்சியாண்மையின் பண்புகள்

- *மனித வளமாக இருத்தல்*
- *ஆரம்பிப்பதற்கான சக்தி/ தொடங்கும் வல்லமை*
- *சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் இயலுமை*
- *தலைமைத்துவப் பண்பு*
- *எதிர்கால நோக்கு*
- *தன்னம்பிக்கை*
- *பயிற்சி வழங்க முடியுமாயிருத்தல்.*

## அருமை (Scarcity)

சமூகத்தின் எல்லையற்ற விருப்பங்களோடு ஒப்பிடுமிடத்து அவற்றை நிறைவு செய்து கொள்வதற்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள வரையறுக்கப்பட்ட வளங்கள் பற்றாக்குறையாகக் காணப்படுதலே அருமை எனப்படும்.

இது அனைத்து சமூகங்களினதும் அடிப்படைப் பிரச்சினை ஆகும். இப் பிரச்சினையால் கருதப்படுவது யாதெனில் மனித தேவைகள் எல்லையற்றனவாக உள்ளன. இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் வளங்கள் ஒப்பீட்டு ரீதியில் வரையறைக்கு உட்பட்டன வாயுள்ளன என்பதாகும்.

அருமைத் தன்மைப் பிரச்சினையானது கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு மனித தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாவிடில்

குறிப்பு :- அருமை என்பது ஒப்பீட்டுப் பிரச்சனை ஆகும். அதாவது வளங்களின் கிடைப்பனவுகளை சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிட்டே வளங்களின் அருமை கூறப்படல் வேண்டும்.

ஒரு உற்பத்திக் காரணியின் நிரம்பலையும் மற்றுமொரு உற்பத்திக் காரணியின் நிரம்பலையும் ஒப்பிட்டு வளங்களின் அருமை கூறப்படல் ஆகாது அதே போன்று ஒரு நாட்டின் வளங்களின் நிரம்பலையும் இன்னுமொரு நாட்டின் வளங்களின் நிரம்பலையும் ஒப்பிட்டு வளங்களின் அருமை கூறப்படல் ஆகாது.

## மாற்றுப் பயன்பாடு (Alternative Uses) மாற்றுயோகம்/ பலபயன்பாடு

உற்பத்தி வளங்களை குறித்த ஒரு தேவைக்காக மட்டுமன்றிப் பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என்பதே வளங்களின் மாற்றுப் பயன்பாடாகும்.

ஒரு பண்டத்தின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் வளத்தினை அப்பண்டத்தின் உற்பத்தியில் இருந்து நகர்த்தி வேறு பண்டங்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதனை இது குறிக்கும்.

## தெரிவு (Choice)

பல்வேறுபட்ட தேவைகளுக்கு இடையே எவ்வாறு வளங்களை சிறந்த முறையில் ஒதுக்கீடுதல் என்பதே தெரிவாகும்.

எங்கு அருமை காணப்படுகின்றதோ அங்கு தெரிவு தவிர்க்க முடியாததொன்றாக அமையும். எந்தவொரு நேரத்திலும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வளங்கள். வரையறுக்கப்பட்டன வாயுள்ளன. இதனால் தெரிவு அவசியமாகின்றது. எந்தவொரு சமூகமும் மூன்று முக்கிய தெரிவுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். என்னபொருளை செய்ய வேண்டும். எவ்வாறு உற்பத்தி செய்ய வேண்டும். யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும் என்பன தெரிவின் அடிப்படையிலேயே மேற் கொள்ளப்படுகின்றன.

## அமையச் செலவு/ சந்தர்ப்பச் செலவு (Opportunity Cost)

பொருளாதாரமொன்றின் வரையறுத்துத் தரப்பட்ட அருமையான மாற்றுப் பயனுடைய வளங்களை அதிசிறந்ததொரு தெரிவில் ஒதுக்கீடு செய்வதற்காக மாற்றுக்களில் மிகச் சிறந்த தெரிவை இழத்தல் அமையச் செலவாகும்.

அமையச் செலவினுள் நேரடி செலவும் மறைமுகச் செலவும் உள்ளடங்கும்.

அமையச் செலவு தோன்றுதற்கான பிரதான காரணங்கள்

- ***வளங்களின் அருமைத் தன்மை (வளப் பற்றாக்குறை)***
- ***வளங்களின் மாற்றுப்பயன்பாட்டுத் தன்மை***

### அமையச் செலவுகள் தோன்றும் சந்தர்ப் பங்கள்

அருமையாக உள்ள வளங்களைப் பயன் படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவை களுக்கு அதாவது சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடுமிடத்து பற்றாக்குறையாக காணப்படும் பொருட்கள் சேவைகளுக்கு அமையச் செலவு தோன்றும்.

வளங்களின் மாற்றுப் பயன்பாடு இருக்கும் சந்தர்ப்பத்தில் அமையச் செலவு தோன்றும்.

நிறைதொழில் மட்டம் நிலவும் சந்தர்ப்பத்தில் அமையச் செலவு தோன்றும்.

தனியார் பொருட்களின் நுகர்வின் போது அமையச் செலவு தோன்றும்.

### அமையச் செலவு தோன்றாத சந்தர்ப்பங்கள்

(அமையச் செலவு, பூச்சியமாக அமையும் சந்தர்ப்பங்கள்)

அருமையற்ற பொருட்கள் சேவைகளுக்கு அதாவது சமூகத்தின் தேவைகளோடு ஒப்பிடு மிடத்து பற்றாக்குறை இன்றி ஏராளமாக காணப்படும் பொருட்கள் சேவைகளுக்கு அமையச் செலவு தோன்றாது (பொருளாதாரமல்லாப் பண்டங்கள்)

உ+ம்:

- *சூரிய ஒளி, காற்று, கடல்நீர் போன்ற பொருளாதாரமல்லாப் பண்டங்கள்*
- *வளங்களின் மாற்றுப் பயன்பாடு இல்லாத சந்தர்ப்பத்தில் அதாவது ஒரேயொரு உபயோ கத்தை மாத்திரம் உடைய வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் சேவை களுக்கு அமையச் செலவு தோற்றாது.*
- *வேலையின்மை நிலவும் போது அமையச் செலவு தோன்றாது.*
- *பொதுப் பண்டங்களின் நுகர்வின் போது அமையச்செலவு தோன்றாது.*

உ+ம்: மணிக்கூட்டுக் கோபுரம், வீதி வெளிச்சம், பாலங்கள், பெருந் தெருக்கள் போன்றவற்றை நுகரும் போது

### பணச் செலவு (Explict Cost)

யாதேனும் ஒரு பொருளை அல்லது சேவையை உற்பத்தி அல்லது நுகர்வு செய்பவர் மேற் கொள்ளும் பணவடிவிலான கொடுப்பனவுகள் பணச் செலவு எனப்படும்.

பணச் செலவு நேரடிச் செலவாகும்.

### கணக்கியல் செலவு (Accounting Cost)

ஒரு பொருளினை உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனம் மேற்கொள்கின்ற பண வடிவி லான கொடுப்பனவுகள் கணக்கியல் செலவுகள் எனப் படும். கணக்கியல் செலவு வெளிப்படையான செலவுகளாகும்.

### பொருளியல் செலவு (Economic Cost)

ஒரு பொருளினை உற்பத்தி செய்யும் நிறு வனம் மேற்கொள்கின்ற பண வடிவிலான கொடுப்பனவுகளையும் அவ்வுற்பத்திக்கான அமையச் செலவுகளையும் உள்ளடக்கியது பொருளியல் செலவு எனப்படும்.

பொருளியல் செலவு = பணச் செலவு + அமையச் செலவு

### கணக்கியல் இலாபம் (Accountig Profit)

நிறுவனத்தின் மொத்த வருமானத்தில் இருந்து பணச் செலவுகளைக் கழிப்பதன் மூலம் பெறப்படுவது கணக்கியல் இலாபமாகும்.

கணக்கியல் இலாபம் = மொத்த வருமானம் - கணக்கியல் செலவு

கணக்கியல் இலாபம் = மொத்த வருமானம் - பணச் செலவு

### பொருளியல் இலாபம் (Economic Profit)

நிறுவனத்தின் மொத்த வருமானத்திலிருந்து பொருளியல் செலவுகளை (பணச் செலவினையும் அமையச் செலவினையும்) கழிப்பதன் மூலம் பெறப்படுவது பொருளியல் இலாபமாகும்.

பொருளியல் இலாபம் = மொத்தவருமானம் - பொருளியல் செலவு

பொருளியல் இலாபம் = மொத்த வருமானம் - (பணச் செலவு + அமையச் செலவு)

பொருளியல் இலாபம் = கணக்கியல் இலாபம் - அமையச் செலவு

**உசாத்துணை நூல்கள்**

பொருளியல் அறிமுகம் – பேராசிரியர் டனிஎத்தப்பத்து

# நிறைபோட்டிச் சந்தையும் இலாப சமநிலையும்
# (Perfect Competition Market and Profit equillibriums)

தர்சிகா.த
*A/L com (2017)*

## அறிமுகம்

"சந்தை" மற்றும் "தொழில்" என்பன ஒரே எண்ணக்கருவாகும்.

கொள்வனவாளர் மற்றும் விற்பனையாளரை தொடர்புபடுத்தும் ஏதேனும் ஒரே நிலைமை அல்லது பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து வழங்கும் பல நிறுவனங்களின் சேர்க்கையே சந்தை/தொழில் எனப்படும்.

சந்தை/தொழிலானது பிரதானமாக நான்கு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| நிறைபோட்டி | - | Perfect Competition |
| தனியுரிமை | - | Monopoly |
| தனியுரிமை போட்டி | - | Monopolistic Competition |
| சிலருரிமை | - | Oligopoly |

## நிறைபோட்டிச்சந்தை
## (Perfect Competition Market)

நிறைபோட்டிச்சந்தை என்றால் என்ன? என்பதற்கான விளக்கமானது, அவற்றின் பண்பு களினை அடிப்படையாகக் கொண்டு வரை விலக்கணப்படுத்த முடியும்.

எனவே நிறைபோட்டிச்சந்தை என்பது

- **ஒத்த தன்மையான உற்பத்திகள்**

100% பிரதியீடுகளினை கொண்டிருக்கும் உற்பத்திகள்

- **எண்ணற்ற கொள்வனவாளரும், விற்பனை யாளரும் காணப்படுவர்.**

மிகவும் அதிகமான நிறுவனங்கள் தமது நிரம்பல்களினை சந்தைப்படுத்த அதிகளவிலான கொள்வனவாளர்கள் அவற்றினை கொள்வனவு செய்வர்.

- **பூரண பிரவேச சுதந்திரம்**

பல்வேறு புதிய நிறுவனங்களானவை எவ்வேளையிலும் சந்தையில் நுழையவோ அல்லது வெளியேறவோ எவ்வித தடையும் காணப்படாத நிலை.

- **பூரண சந்தை தகவல்கள்**

கொள்வனவாளரும், விற்பனையாளரும் சந்தை தொடர்பான விடயங்கள் / தகவல்களை எவ்வித செலவுமின்றி பெற முடிதல்.

- **விளம்பரம் காணப்படமாட்டாது**

ஒத்த தன்மை கொண்ட பொருட்கள் நிரம்பல் செய்யப்படுதல் விளம்பரம் என்ற மேம்படுத்தல் செலவு அறவே உருவாகாது.

- **காரணி பூரண அசைவுடையது**

உற்பத்தி காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகியவைகளை ஒரு தொழிலிருந்து இன்னோரு தொழிலுக்கு இலகு வாக மாற்றமுடிதல்.


- **நிறுவனம் விலை ஏற்போனாக தொழிற்படல்**

சந்தையில் அதிகளவான நிறுவனங்கள் காணப்படுவதாலும் பூரண பிரதியீட்டுத் தன்மை கொண்ட பொருட்கள் உற்பத்தியினாலும் தனி யொரு நிறுவனமானது சந்தை விலையில் தம் செல்வாக்கினை பயன்படுத்த முடியாது. மாறாக சந்தையினால் தீர்மானிக்கப்படுகின்ற விலை யினை ஏற்றுத் தொழிற்படும் பூரண சந்தை தகவல்களை இலகுவாக செலவின்றி பெற்றுக் கொள்ள முடிவதன் காரணமாக நுகர்வோர்


சந்தை தொடர்பாக பூரண அறிவினைப் பெற்றுக் கொள்வர். எனவே நிரம்பலாளர் விலையில் தம் விருப்பத்திற்கேற்ப விலையை தீர்மானிக்க முடியாது. எனவே ஒவ்வொரு உற்பத்தி நிறுவனமும்/ உற்பத்தியாளரும் சந்தை விலையை ஏற்றுத் தொழிற்படல் வேண்டும்.

இவ்வாறான பண்புகளை அடிப்படையாகக் கொண்டதே நிறைபோட்டிச் சந்தையாகும்.

**நிறைபோட்டிச் சந்தையின் கேள்விக்கோடு**




**நிறைபோட்டிச் சந்தை நிறுவனத்தின் கேள்விக்கோடு**





**நிறைப்போட்டிச் சந்தையின் குறுங்கால இலாபச் சமநிலை**

1. சாதாரண லாபம் / பூச்சிய சிக்கன இலாபம்
2. பொருளியல் இலாபம்/ சிக்கன இலாபம்/ அசாதாரண இலாபம்
3. பொருளியல் நட்டம் / எதிர்கணிய இலாபம்.

**சாதாரண இலாபம்**


முயற்சியாளர் ஒருவர் தமது உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு எதிர்பார்க்கும் குறைந்தபட்ச வெகுமதி இதுவாகும்.

$$TR-TC=O \quad or \quad TR=TC$$





**அசாதாரண இலாபம்/ பொருளியல் இலாபம்/ சிக்கன இலாபம்**

முயற்சியாளர் தமது உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்ல எதிர் பார்க்கும் குறைந்தபட்ச வெகுமதியை விட கூடிய ளவு இலாபம் கிடைக்குமாயின் அது அசாதாரண இலாபமாகும்.





**பொருளாதார நட்டம் / எதிர்கணிய சிக்கன இலாபம்**

முயற்சியாளர் எதிர்பார்த்த இலாபத்தை விட குறைவான இலாபம் கிடைக்கப் பெறும் நிலையாகும்.




இதனால் சந்தையில் கேள்வியை விட நிரம்பல் அதிகரித்து மிகை நிரம்பல் ஏற்படும். மிகை நிரம்பல் அதிகரித்து மிகை நிரம்பல் ஏற்படும். மிகை நிரம்பல் காரணமாக சந்தை விலை குறைவடையும். இதனால் அசாதாரண இலாப மானது படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்று நீண்டகாலத்தில் சாதாரண இலபம் தோன்றும்.

நிறைபோட்டிச் சந்தையின் நீண்டகால சமனிலை சாதாரண இலாபம்




இதே வேளை குறுங்காலத்தில் நிறுவனம் பொருளாதார நட்டத்தை உழைக்கும் போது அதனை தாங்க இயலாத (TR<TVC) பிரவேச சுதந்திரம் காரணமாக பல நிறுவனங்கள் சந்தையை விட்டு வெளியேறும். இதனால் சந்தையில் கேள்வியானது நிரம்பலை விட அதிகரித்து மிகைக்கேள்வி உண்டாகும், மிகைக் கேள்வியின் காரணமாக சந்தை விலை அதிக ரித்து நட்டநிலையானது படிப்படியாக மறைந்து நீண்ட காலத்தில் சாதாரண இலா பத்தையும் உழைக்கும்.

நிறைப்போட்டிச்சந்தை நிறுவனமானது குறுங் காலத்தில் அசாதாரண இலாபத்தை உழைக்கும் போது பிரவேச சுதந்திரம் காரணமாக பல நிறுவ னங்கள் புதிதாக சந்தையினுள் நுழையும்.

உசாத்துணை நூல்கள்

சந்தைப் பொருளாதாரம் வே.கருணாகரன்

♦ Teachers' Guide

*மற்றவரைப் பற்றி உன்னிடம் குறை சொல்பவர்*
*உன்னைப் பற்றி மற்றவரிடம் குறை சொல்லமாட்டார்.என்பது என்ன நிச்சயம்*

# இலங்கையின் வறுமை நிலை பற்றிய ஓர் கண்ணோட்டம்

லக்சனா.பி
*A/L com (2017)*

வறுமை என்பது எம்மைச் சுற்றி வரும் அரக்கன் ஆவான். தமது அன்றாட தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்ற குறைந்தளவு தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை வறுமை ஆகும். உலகளாவிய ரீதியில் வறுமையானது நாட்டு மக்களின் கல்வி, சுகாதாரம், போசாக்கு, வீடமைப்பு சூழல் போன்ற வாழ்வாதாரங்களை பாதித்து தனி மனித விழுமியங்களை சிதைப்பதுடன் குடும்பங்களையும் சமூகங்களையும் சீர்குலைத்து நிற்கின்றது. குறிப்பாக நாடுகளின் சமூக நலனை மேம்படுத்த முயற்சிக்கின்ற போது முதலில் வறுமையை ஒழிப்பதற்கு தேவையான திட்டங்களை முன் வைக்க வேண்டும். அத்தோடு இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு முதலில் வறுமை என்ற எண்ணக் கருவிற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை ஒழிப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

இவ் வறுமையை இரண்டு வகைப்படுத்தலாம்.

(1) முற்றிலும் வறுமை/முழு வறுமை

முற்றிலும் வறுமை என்பது ஒரு குடும்பத்தின் வருமானம் அக்குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத அளவில் மிகக்குறைத்து இருப்பதாகும். இது குறைந்தளவு வாழ்க்கைத் தரத்திற்கு கீழான நிலையில் உள்ளவர்களைக் குறிக்கும்.

(2) ஒப்பீட்டு வறுமை/சார்பு வறுமை

இது இரு பிரிவினரின் வாழ்க்கைத் தரத்திற்கு இடையேயுள்ள ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதாகும்.

இவ் வறுமைக்கான காரணங்களாக பின்வருவன காணப்படுகின்றது.

- *அதிக மக்கள் தொகை பெருக்கம், அவர்களின் கல்வி அறிவின்மை*
- *மக்களின் குறைந்த வருமானமும், பணப் பற்றாக் குறையும்.*
- *வேலையில்லாத் திண்டாட்டம்*
- *அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு*
- *பருவகால வேறுபாடுகள்*

மாறாக வறுமையைப் பற்றி கருத்திற் கொள்ளாமல் ஆக்க பூர்வமாக அபிவிருத்தியைப் பற்றி சிந்திக்க முடியாதுள்ளது. இதனாலேயே உலக நாடுகளின் கொள்கை வகுப்பில் இது முக்கியம் வகிக்கின்றது. அத்தோடு வறுமையின் தாக் கத்தை குறைத்து சர்வதேச தேசிய மட்டத்தில் பல கொள்கைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. உற்பத்தி திறன் குறைந்து விவசாயம் என்பதிலிருந்து தொழிற்சாலை, சேவைகள், நகரமயமாக்கல், அதிகரித்த உள்ளக கேள்வி என்பவற்றை நோக்கி பொருளாதாரம் நகருவதால் தொழில் வருமானங்கள் அதிகரித்து வறுமை வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை வறுமை மதிப்பீடு கண்டறிந்துள்ளது. வறுமை ஒழித்தல், பகிரப்பட்ட செழுமையை ஊக்குவித்தல் என்பவற்றில் நிலையான தேர்ச்சிக்கான இடையூறுகளை அடையாளம் காண்பதற்கு உலக வங்கிக் குழுவானது கட்டமைப்பு சார் நாட்டு கண்டறிதல் முறையை (SCO) முன்னெடுத்து கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளில் முதலீடு செய்வதற்கென அரசாங்க ஆற்றலை பாதிக்கச்

செய்து உலக உள்நாட்டு மொத்த உற்பத்தியில் குறைந்த வரியை இலங்கை கொண்டுள்ளது. என SCD சுட்டிக்காட்டுகின்றது.

உலக வறுமை ஒழிப்பு தினம் ஒவ்வோர் ஆண்டும் October 17ம் நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. வறுமையிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் அமைப்பு 1992ம் ஆண்டு வறுமை ஒழிப்பு நாளை அதிகார பூர்வமாக ஏற்றுக் கொண்டது.

*புள்ளி விபரத்தின் அடிப்படையில்*

இலங்கையின் தலைக்குரிய வறுமை விகிதம் வருமாறு

1995/1996 - 28.8%
2009/2010 - 8.9%
2012/2013 - 6.7%

இலங்கையின் கடுமையான வறுமை விகிதமும் ஆண்டும் 2002-13%, 2012/2013ல் - 10% ஆகும்.

வறுமையிலான இக்குறிப்பிடத்தக்க வீழ்ச்சியானது குறிப்பாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடித்தொகையின் பாதிப்புள்ளாகும் பிரிவினரின் வருமான மட்டங்களை உயர்த்துவதற்கு அடுத்தடுத்து வந்து அரசுகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் வெளிப்பாடு ஆகும். அவ்வாறான நிகழ்ச்சி திட்டங்கள் வருமாறு

1. *நேரடியான நிதியியல் உதவி*
2. *வாழ்வாதார உதவி*
3. *நிகழ்ச்சி திட்டங்கள்*
4. *கிராமிய மற்றும் சமுதாயத்தை மையப்படுத்திய பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான அதிகாரமளிக்கும் நிகழ்ச்சி திட்டங்கள்*
5. *குறைந்த வருமானமுள்ள மக்களை மையப்படுத்தி பொதுவாக நெறிப்படுத்தப்பட்ட உதவித் தொகை நிகழ்ச்சித்திட்டம்*
6. *உணவு, உதவி நிகழ்ச்சிதிட்டம்*
7. *பொதுமக்கள் நலன் புரி செலவின நிகழ்ச்சித் திட்டங்கள்*
8. *சமுர்த்தி திட்டம், உணவு முத்திரை*
9. *திவி நெகும திட்டம்*
10. *இலவசக் கல்வி போன்றவையாகும்.*

மாவட்ட ரீதியான அடிப்படையில் வறுமையானது மட்டக்களப்பு மாவட்டம் 5.3% - 45.1 % கூடியளவில் வேறுபடுகின்றது. மிகக் குறைந்த வறுமையுடைய கொழும்பு மாவட்டத்தில் தெகிவளை பிரதேசமானது 0.6% - 45.1% இடைப்பட்டதாகும்.

முல்லைத்தீவு 28.8%
மன்னார் 20.1%
மட்டக்களப்பு 19.4%
மொனராகலை 20.8%
குருநாகல் 6.5%
**2009/2010ல் மட்டக்களப்பு** 20.3%
**2012/2014ல் மட்டக்களப்பு** 16.1%
2012/2013ம் ஆண்டுகளில்
அம்பாறை 11.8%
மட்டக்களப்பு 20.3%
திருகோணமலை 11.7%
இவ் வறுமை வீதமானது 3 வருடத்தின் பின்
அம்பாறை 5.4%
மட்டக்களப்பு 19.4%
திருகோணமலை 9.0%

கிழக்கு மாகாணத்தின் வறுமை நிலையானது 2009/2010ல் 14.6% 2012/2013ல் 11.27% குறைவடைந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் வறுமை நிலையானது 2012/2013 14.66% ஆகும். இதில்

முல்லைத்தீவு 28.8%
மன்னார் 20.1%
கிளிநொச்சி 12.7%
வவுனியா 3.4%
யாழ்ப்பாணம் 8.3% ஆகக் காணப்பட்டது.

இலங்கையின் தலைக்குரிய வருமானம் 2003ல் ஐக்கிய அமெரிக்க டொலர் 981 2015ல் ஐக்கிய அமெரிக்க டொலர் 3924 ஆகும். 2012/2013ல் குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின் அடிப்படையில் அவற்றின் மாதாந்த வருமானங்களின் சராசரி 45878/= உம் இடையம் 30814/= உம் ஆகும். கொழும்பு மாவட்டம் ஆகக் கூடிய மாதாந்த சராசரி குடும்ப அலகு வருமானம் 77723/= உம் முல்லைத்தீவு மாவட்டம் ஆகக் குறைந்த வருமானம் 23687/=ஐ பதிவு செய்துள்ளது.

### கினிக் குணக அடிப்படையில்

பொருளாதாரத்திலுள்ள பகிர்ந்தளிப்பு அளவை அளவிடும் இலங்கையின் குடியிருப்பாளர் வருமானத்தின் வீட்டுத்துறை வருமான மற்றும் செலவின் அடிப்படையில் 2012/2013 0.48% ஆகும். இது 2009/2010ல் முன்னைய குடும்ப அலகு வருமானம் மற்றும் செலவின் அளவீடு 0.49% காணப்பட்டது.

### உடல் உணவு போசணைக் குறைபாடு

தாராளமான உணவைக் கொண்ட உலகத்தில் பட்டினி மற்றும் குறைந்த ஊட்டச்சத்து காணப்படுதலை கடுமையான வறுமை எடுத்துரைக்கின்றது. இதில் ஊட்டச்சத்து பற்றாக்குறை வறுமைக்கான காரணம் ஆகும். இலங்கையில் குழந்தைகளின் குறைவான ஊட்டச் சத்தானது கணிசமான சுமையை எதிர்கொள்கிறது. இங்கு 5 வயதுக்கு குறைவான அனைத்து குழந்தைகளின் 13% வளர்ச்சி அறிவிக்கப்பட்டிருக்கையில் 2012 ல் 24% ஆகும்.

இலங்கையில் ஊட்டச்சத்து குறைவான பிள்ளைகள் மத்திய மலைநாடு வடமத்திய மாகாணம், கிளிநொச்சி, மொனராகலை உள்ளிட்ட உலர் வலயங்களின் சில பகுதிகளில் செறிந்து காணப்படுகின்றனர். குறைந்த பிறப்பு நிறை, குறைந்த ஊட்டச்சத்து, பணக்காரரை விட வறிய குடும்பங்களிலும் நாட்டின் எஞ்சிய பகுதிகளை விட பெருந்தோட்டங்களிலும் 3 மடங்குகள் அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையின் நலிவான செயலாற்றத்துக்கான முக்கிய காரணிகளாக வறுமையும் உணவுப் பாதுகாப்பின்மையும் விளங்குகின்றது.

1993ற்கும் 2012ம் ஆண்டிற்கும் இடையேயான அனைத்து தேசிய அளவீடுகளின் பகுப்பாய்வின் படி இலங்கையில் குறைந்த பிறப்பு நிறை, வளர்ச்சி குறைவினை மாற்றியமைக்கத்தக்க காரணியாக குடும்ப அலகு வருமானம் தொடர்ச்சியாக காணப்படுகின்றது. மிக வறுமையான குடும்ப அலகுகள் பணக்கார குடும்ப அலகுகளின் ஊட்டச்சத்து உள்ளெடுத்தலின் 2/3 பங்குகளை மட்டுமே உள்ளெடுப்பதால் நாளொன்றுக்கு குடும்பமொன்றுக்கு 2000 - 3500 கலோரிகள் கொண்ட ஊட்டச்சத்து பற்றாக்குறையை எதிர்கொள்கின்றது. வறிய குடும்பங்கள் அவர்களது வருமானத்தில் அநேகமானவற்றை உணவில் செலவழிப்பதை பரிசீலனை கொள்கையில் இவ் இடைவெளியை பூர்த்தி செய்ய இயலாதுள்ளது. இவ்வாறான வறியவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் வருமாறு

- ***வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கல்***
- ***உட்கட்டமைப்பில் அதிகரித்த அரச முதலீடு***
- ***கிராமப் பிரதேசங்களில் பொதுவான பண்டங்களின் மேம்பாடடைந்த வழங்கல்***
- ***முப்படையும் குடித்தொகையை இலக்கிடும் சமூகப் பாதுகாப்பு உபாயங்களை வடிவமைத்தல்.***

### முடிவுரை

பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியை பாதிக்க கூடிய ஒரு காரணியாக இன்று வறுமை காணப்படுகின்றது. இங்கு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பது சகல காரணிகளினதும் மேல் நோக்கிய நகர்வு ஆகும். இத்தகைய வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின் வறுமை, வேலையின்மை, வருமான சமனின்மை எனும்

பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். இவை ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை ஆகும். குறிப்பாக வறுமையை அதிகரிக்கச் செய்வதில் ஏனைய இரு காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றது. எனவே காலப்போக்கில் வறுமை ஒழிப்பு திட்டங்களை நடை முறைப் படுத்தி சரியான முறையில் வறியோரை இனங் கண்டு மேற்கொள்ளும் போது அதனூடாக வேலைவாய்ப்பு அதிகரிக்கப்பட்டு வருமான சமனின்மை கட்டுப்படுத்தப்படுவதனூடாக வறுமை குறைக்கப்பட்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி நோக்கிய நகர்வுக்கு வாய்ப்பேற்படும்.

**உசாத்துணை நூல்கள் :**


- மத்திய வங்கி ஆண்டறிக்கை
- வறுமையும் பால் நிலையும் பொதிகை
- Internet

WWW.Battinewsfirst.com
http//.eco.ieu.edu.tr.lwp - content
Genderand poverty R.df


*நீ மேலே உயரும் போது நீ யார் என்று உன் நண்பர்கள் அறிவார்கள்*
*நீ கீழே விழும் போது உண்மையான நண்பர்கள் யார் என்று நீ அறிவாய்*

# நாணயமாற்றுவீத நிர்ணயம்

ரம்சியா.பா
A/L com (2017)

## நாணய மாற்று வீத நிர்ணயம்

ஒவ்வொரு நாடும் வேறுபட்ட பணத்தினை அல்லது நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்து கின்றன. ஆகவே ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டுடன் வர்த்தகத்தில் ஈடுபட வேண்டுமாயின் ஒரு நாட்டு நாணயம் இன்னொரு நாட்டு நாணய மாக மாற்றப்பட வேண்டும். இதுவே நாணய மாற்று வீதமாகும். சர்வதேச வர்த்தகமானது வெளிநாட்டுப் பெறுமதியின் அடிப்படையில் மேற் கொள்ளப்படும். ஆகவே ஒரு நாட்டின் நாணயம் வேறொரு நாட்டின் நாணயமாக மாற்றப்பட வேண்டும். அதையே நாணயமாற்று வீதம் என்கின்றோம்.

## வரைவிலக்கணம்

யாதேனும் ஒரு நாட்டு நாணயத்தை மற்றொரு நாட்டு நாணயத்திற்காகப் பரிமாற்றிக் கொள்ளும் வீதம் நாணயமாற்று வீதமாகும். அதாவது ஒரு நாட்டு நாணயத்தின் விலையினை வேறொரு நாட்டு நாணயத்தின் பெறுமதியில் கூறுவது நாணய மாற்று வீதமாகும். இதுவே பெயரளவு நாணய மாற்று வீதமாகும்.

இதனை இருமுறையில் வரையறுக்கலாம்

1. *வெளிநாட்டு நாணய அலகு ஒன்றினை உள்நாட்டு நாணய அலகுகளின் எண்ணிக்கையில் கூறுதல். (நேரடி முறை)*

2. *உள்நாட்டு நாணய அலகொன்றை வெளி நாட்டு நாணய அலகுகளின் எண்ணிக்கை யில் கூறுதல் (மறைமுகவரி)*

## நாணய மாற்று வீத சமநிலை

வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையில் நாணயம் கொள்வனவு, விற்பனை இடம்பெறும் அரசாங்கமானது நாணயத்தினைக் கொள்வ னவு, விற்பனவு செய்வதனூடாக நாணயத்தின் விலையில் செல்வாக்குச் செலுத்த முடியும். இங்கு நாணய அதிகாரிகளின் தலையீடின்றி சுயமாக கேள்வி, நிரம்பினால் நாணய மாற்று விகிதம் நிர்ணயிக்கப்படுவதாகக் கொண்டால் இங்கு 03 பிரதான காரணங்கள் நாணயமாற்று கொள் வனவு விற்பனவு செய்வதற்குக் காரணமாகின் றன.

1. சர்வதேச வர்த்தகத்தில் பொருட்களும் சேவைகளும் பணப்பெறுமதியின் அடிப் படையில் பரிமாற்றப்படும் போது ஏற்றுமதி பணத்திற்கான கேள்வி அளவும், இறக்குமதி பணத்திற்கான நிரம்பலளவும் உருவாக் கும்.
2. மூலதன உட்பாய்ச்சல் பணத்திற்கான கேள்வியையும் மூலதன வெளிப்பாய்ச்சல் பணத்திற்கான நிரம்பலையும் உருவாக்கும்.
3. உத்தேச நோக்கில் இடம் பெறும் நிதிப் பாய்ச்சல்.

சமநிலை நாணயமாற்றுவீதம் நிர்ணயிக்கப் படும் போது எங்கு நாணயத்திற்கான கேள்வியும், நாணயத்திற்கான நிரம்பலும் சமப்படுகின்றதோ அதுவே சமநிலை நாணய வீத நிர்ணயமாகும்.

## அந்நிய செலாவணிக்கான கேள்வி

குறித்த நாடுகளுக்கிடையிலான நாணய மாற்று வீதத்திற்கும் அந்நிய செலவாணிக் கேள்விக்கும் இடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படும்.

எனவே,

"அந்நிய செலாவணிச் சந்தையில் நிலவும் பல்வேறுபட்ட நாணய மாற்று வீதங்களில் குறித்த நாடு கொள்வனவு செய்யத் தயாராக உள்ள வெளிநாட்டு நாணயத்தின் அளவு" அந்நிய செலவாணிக்கான கேள்வி ஆகும்.

இச் செலாவணிக்கான கேள்வியானது பொருட்கள், சேவைகளின் இறக்குமதி முதலீட்டு வருமான வெளிப்பாய்ச்சல், வெளிநாடுகளுக்கான மாற்றல் கொடுப்பனவு, இலங்கையில் இருந்தான உள்நாட்டுப் பிரயாணிகளின் வெளியேற்றல், கடன்கள் மற்றும் ஏனைய வெளிநாடுகளுக்கான கொடுப்பனவு போன்ற காரணிகளினால் ஏற்படுத் தப்படுகின்றது.

### அந்நிய செலவாணிக்கான நிரம்பல்

குறித்த நாடுகளுக்கிடையிலான நாணய மாற்று வீதத்திற்கும் அந்நிய செலவாணி நிரம் பலுக்கும் இடையில் நேர்க்கணியத் தொடர்பு காணப்படும்.

எனவே "அந்நிய செலாவணிச் சந்தையில் நிலவும் பல்வேறுபட்ட நாணய மாற்று வீதத்தில் குறித்த வெளிநாட்டு நாணயத்தை நிரம்பல் செய்யத் தயாராக உள்ள அளவு" அந்நிய செலவணிக்கான நிரம்பல் எனப்படும்.

இது மேலே தரப்பட்ட அந்நிய செலாவணிக் கேள்விக்கான சந்தர்ப்பத்தின் எதிரான நிலையில் ஏற்படும்.

### நாணய மாற்று வீத முறைகள்

1. நிலையான நாணய மாற்று வீதம்
2. மிதக்கும் நாணய மாற்று வீதம்
3. முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்று வீதம்

"நிலையான நாணய மாற்று வீதம்" என்பது ஒரு நாட்டின் உள்நாட்டு நாணயம் வெளிநாட்டு நாணயத்திற்குப் பரிமாற்றம் செய்யப்படும் விகிதத்தை நாணய அதிகாரிகள் எவ்வித மாற்றமுமின்றிப் பேணி வருவது ஆகும்.

இம் முறையில் நாணய மாற்று வீதம் கூடுதலாக இருக்கும். இது தங்க அளவையின் கீழ் காணப்படும் முறையாகும். 1948 சுதந்திரம் அடைந்தது முதல் 1968வரை இலங்கையில் இம்முறை மத்திய வங்கியில் கடைப்பிடிக்கப் பட்டது.

இம்முறையின் போது நாணயங்கள் மிகை மதிப்புடையவையாகவோ அல்லது குறை மதிப்பு உடையவையாகவோ இருக்கலாம். இந் நிலைமையை மத்திய வங்கியே ஈடு செய்து தொடர்ந்தும் நிலையானதாக வைத்திருக்கும்.

நிலையான நாணய மாற்று வீத முறை மற்றும் நெகிழும் நாணயமாற்று வீத முறை என்பனவற்றிலுள்ள சாதகமான பண்புகளை பயன்படுத்தி நன்மை அடையும் பொருட்டு மேற்படி இரு முறைகளினதும் கலப்பினால் உருவாக்கப் பட்டதோர் முறையாகும்.

"பெயரளவுத் தாக்கமுள்ள பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம்" என்பது ஒரு நாட்டு நாணயத்தின் விலையினை வேறொரு நாட்டு நாணயத்தின் பெறுமதியில் கூறுவது ஆகும்.

இதுவே பொதுவான நாணயமாற்று வீதம். இது ஒரு நாட்டின் பிரதானமான வெளிநாட்டு நாணய மாற்று வீதங்களின் நிறையிட்டட சராசரிப் பெறுமதியாகும்.

ஒவ்வொரு நாணய வகையும் சர்வதேச வர்த்தகத்தில் கொண்டுள்ள முக்கியத்துவத் திற்கமைய நிறையூட்டப்பட்டு பெயரளவுத்தாக்க முள்ள நாணய மாற்று வீதம் கணிப்பிடப்படுகிறது.

"மெய் நாணய மாற்று வீதம்" என்பது பெயரளவுத் தாக்கமுள்ள நாணய மாற்று வீதத் துடன் குறிப்பிட்ட நாட்டினதும் அதன் வர்த்தகப் பங்காளர் நாடுகளினதும் பண வீக்கத்தில் ஏற்படும் சார்பளவான வேறுபாடுகளை சீராக்குவதன் மூலம் பெறப்படுவது உண்மைத் தாக்கமுள்ள

நாணய மாற்று வீதம் ஆகும்.

மெய் நாணய மாற்று வீதம் =

$$\frac{\text{பெயரளவு நாணய மாற்று வீதம் X உள்நாட்டு விலைமட்டம்}}{\text{வெளிநாட்டு விலைமட்டம்}}$$

பெயரளவு பயனுறுதி வாய்த நாணய மாற்று வீதம் என்பது

உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதி தீர்மானிக்கப்படுகின்ற போது இலங்கை யானது வர்த்தகத் தொடர்பைக் கொண்டுள்ளது.

24 வர்த்தகப் பங்காளிகள், போட்டியாளர் களைக் கருத்தில் கொண்டு உள்நாட்டு நாணயத் தின் வெளிநாட்டுப் பெறுமதி தீர்மானிக்கப்படுதல். இங்கு பணவீக்க விளைவுகள் உள்வாங்கி மதிப்பிடப்படுவதனால் பேரளவு பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் எனக் கூறப்படும்.

மேலே கூறியவாறு பணவீக்க விளைவு களை நீக்கி மதிப்பீடு இடம்பெற்றால் அது மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதம் எனப் படும்.

மேலே கூறிய நாணய மாற்று வீதங்கள் மதிப்பிடப்படும் போது பின்வரும் நாணயங்களின் நிறையளிக்கப்பட்ட சராசரி அடிப்படையிலும் மதிப் பிடலாம்.

| | | |
|---|---|---|
| பிரித்தானியா | - | ஸ்ரேலிங்க பவுன் £ |
| அமெரிக்கா | - | அமெரிக்க டொலர் $ |
| ஜப்பான் | - | யென் ¥ |
| ஐரோப்பிய ஒன்றியம் | - | யூரோ € |

$$REER = \frac{Pd}{PF} \times NEER$$

NEER = Nominal Effective Exchange Rate

REER = Real Effective Exchange - Rate

உசாத்துணை நூல்கள்

- மத்திய வங்கி அறிக்கை

வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் சகஜம். வெற்றியின் போது துள்ளாமலும் தோல்வியின் போது துவளாமலும் இருப்பதே சாதனையாளர்களின் இரகசியம்

# கேள்விப் பக்க பொருளியலும் நிரம்பல் பக்கப் பொருளியலும்
# (Supply and demand side Economic)

ச.வனிஸ் டொறிஷா
*A/L com (2017)*

கேள்விப் பக்க பொருளியல் மற்றும் நிரம்பல் பக்க பொருளியல் ஆகிய இரண்டும் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை மற்றும் பிரச்சினையின் தன்மை மற்றும் அதற்கு முன்வைக்கப்பட்ட பரீட்சார்த்தம் என்பவற்றின் அடிப்படையிலேயே உருப்பெற்றது எனலாம்.


கேள்விப் பக்க பொருளியல் என்பது 1930 களில் முதலாளித்துவப் பொருளாதாரங்களில் ஏற்பட்ட மந்தம் அதன் தன்மை மற்றும் அதற்காக கெயின்சினால் முன்வைக்கப்பட்ட தீர்வு என்பதை தொடர்ந்து தோற்றம் பெற்றது எனலாம்.

நிரம்பல் பக்க பொருளியல் என்பது 1974 களில் USA யில் ஏற்பட்ட தேக்க வீக்கம் அதன் தாக்கம் அதன் தன்மை மற்றும் அதற்காக 1981 ல் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி **Ronald Reagan** என்பவரினால் முன்வைக்கப்பட்ட பரீட்சார்த்தம் என்பதை தொடர்ந்து தோற்றம் பெற்றது எனலாம்.

### பெருமந்தமும் கேள்விப் பக்கப் பொருளியலும்

1930களில் முதலாளித்துவப் பொருளாதாரங்களில் குறிப்பாக USA, UK ஆகிய நாடுகளில் பெருமந்தம் என்பது முக்கிய பிரச்சினையாக காணப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் உயர்ந்த வேலையின்மை (கிட்டத்தட்ட 25%) அதே வேலை மிகக் குறைந்த பணவீக்கம் (கிட்டத்தட்ட 2.3%) காணப்பட்டிருக்கிறது. எனவே இந்நிலைமை விருப்பமின்றிய வேலையின்மையை ஏற்படுத்தியதுடன் வெளியீட்டு வீழ்ச்சி வருமான வீழ்ச்சியையும் ஏற்படுத்தியது. பழம் பொருளியலாளர்கள் இப்பிரச்சினைக்கு உயர்ந்த கூலி மட்டுமே பிரதான காரணம் என சுட்டிக் காட்டினார்கள். ஆனால் இவர்களது விளக்கம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை.

இந்நிலையில் கெயின்ஸ் பழம் பொருளியல் சிந்தனையில் இருந்து முற்றும் வேறுபட்ட புதியதொரு பேரினப் பொருளாதார சிந்தனையை முன்வைத்தார். அதாவது செயற்படு கேள்வியில் ஏற்பட்ட பற்றாக்குறையே இவ் பெருமந்தத்துக்கான காரணம் எனக் கூறி இதன் காரணமாக பெருக்கி பின்னோக்கி செயற்படுவதாக கூறி இதன் காரணமாகவே வேலை வருமான வெளியீட்டு மட்டங்களில் வீழ்ச்சி ஏற்பட்டதாக கெயின்ஸ் வலியுறுத்தி இதற்கு தீர்வாக மொத்தக் கேள்வி முகாமைத்துவத்தின் கீழ் விரிந்த இறை நாணயக் கொள்கையைப்பயன்படுத்தி மொத்தக் கேள்வியை அதிகரித்து மொத்த வெளியீடு வருமானம் வேலை வாய்ப்பை அதிகரிக்க முடியும் என்றார். இதனை பின்வரும் வரைபடம் மூலம் விளக்கலாம்.




வரைபடத்தின் படி ஆரம்ப சமநிலை $E_1$

புள்ளியில் காணப்படுவதாக கொள்வோம். இந்நிலையில் வருமானம் $Y_1$ ஆகக் காணப்படு கிறது. இந்நிலையில் வேலையின்மை அதிக மாகவும் பணவீக்கம் மிகக் குறைவாகவும் காணப்படுகிறது எனக் கருதிக் கொள்வோம். இந்நிலை பெரும் மந்த பிரச்சினையை குறித்து நிற்கின்றது. எனவே விரிந்த இறை நாணயக் கொள்கையில் கீழ் அரச செலவீட்டினை அதிகரித்து மொத்தக் கேள்வியை அதிகரிப்பதன் மூலம் நிறை தொழில் மட்டத்தை நோக்கி நகர முடியும் என்பதே கெயின்சினது பரீட்சார்த்தம் ஆகும். வரைபடத்தின் படி அரச செலவீட்டினை G-G1 அதிகரிப்பதாக கொள்வோம். இந்நிலையில் மொத்த கேள்வி C+I+G1 என அதிகரித்து E2 புள்ளியில் சமநிலை அடைந்து வருமானம் Y1 - Yf என நிறை தொழில் மட்டத்தினை அடைந்து கொள்ளும். இங்கு வருமானத்தில் ஏற்பட்ட மாற்றம் என்பது ($\Delta Y = ke\Delta G$) என்பதற்கு சமனாக காணப்படும் என்ப தாகும். இங்கு Ke பெருக்கியாகும். $\Delta G$ என்பது அரச செலவீட்டில் ஏற்பட்ட மாற்றமாகும். இதன் கருத்து யாதெனில் அரச செலவீடு ஒரு அலகால் அதிகரித்தால் தேசிய வருமானம் பெருக்கியின் மடங்காக அதிகரிக்கும் என்பதாகும்.

இவ் விளக்கம் அன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனாலும் குறை நிலை வரவு செலவு திட்டத்திற்கான பொது வேலை திட்டங்களில் அரசு முதலிட வேண்டும் என்ற கெயின்சின் பரிகாரம் பின்பற்றப்பட்டவுடன் மொத்த கேள்வியில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டது. அத்துடன் பெரும் மந்தப் பிரச்சினையும் USA UK யில் தீர்க்கப்பட்டது.


இங்கு கூறக் கூடிய விடயம் யாதெனில் USA ,UK பொருளாதாரம் அப்பொருளாதாரத்தில் மொத்த கேள்வியில் பாரிய வீழ்ச்சி இதனால் உயர்ந்த மட்ட வேலையின்மை மற்றும் மிகக் குறைந்த பணவீக்கம் மற்றும் மொத்தக் கேள்வி முகாமைத்துவத்தின் கீழ் விரிந்த இறை நாணயக் கொள்கையை பயன்படுத்தி கெயின்சினது பரிகாரம் என அனைத்துமே இங்கு மொத்தக் கேள்வியுடன் தொடர்புபட்டு இருப்பதால் இதனை கேள்விப்பக்கப் பொருளியல் எனப்படுகிறது.

**தேக்கவீக்கமும் நிரம்பல் பக்க பொருளியலும்**

1974 களில் USA யில் தேக்கவீக்கம் என்பது முக்கிய பிரச்சினையாக காணப்பட்டது. அதாவது இக்காலப் பகுதியில் ஒரே நேரத்தில் உயர்ந்த பணவீக்கம் (கிட்டத்தட்ட 12%) உயர்ந்த வேலை யின்மை (கிட்டத்தட்ட 9%) காணப்பட்டிருக்கிறது. இங்கு பணவீக்கம் வேலையின்மை ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில் உயர்வாகக் காணப் படுவதே தேக்கவீக்கம் ஆகும். அதாவது இக்காலப் பகுதியில் எண்ணெய் விலை அதிகரிப்பினால் ஏற்பட்ட சடுதியான மொத்த நிரம்பல் வீழ்ச்சியே இப்பிரச்சினைக்கு காரணம் எனப்பட்டது. இந் நிலையில் இப்பிரச் சினைக்கு மொத்தக் கேள்வி முகாமைத்துவத்தின் கீழ் தீர்வுக்காண முடியாமல் கேள்வி பக்க பொருளியியலாளர்கள் திண்டாடி னார்கள். ஏனெனில் மொத்த கேள்வி முகாமைத் துவத்தின் கீழ் விரிந்த இறை நாணயக் கொள்கையை பயன்படுத்தி மொத்தக் கேள்வியை அதிகரித்த போது வெளியீடு அதிகரித்து வேலை யின்மை குறைந்தது. ஆனால் பணவீக்கம் மேலும் தீவிரமடைந்தது. அதே போல் சுருங்கிய இறை நாணயக் கொள்கையின் கீழ் மொத்தக் கேள்வியை குறைத்த போது பண வீக்கம் சாதக நிலையை அடைந்தது. ஆனால் வெளியீட்டு மட்டம் குறைவடைந்து வேலையின்மை மேலும் தீவிரம் அடைந்தது. எனவே இங்கு மொத்தக் கேள்வி முகாமைத்துவமானது ஏதோ ஒரு வகையில் பிரச்சினையை அதிகரிப்பதாகவே காணப்பட்டது.

எனவே தான் இந்த கேள்வி பக்கப் பொருளியல் எந்த ஒரு வகையிலும் தேக்கவீக்க பிரச்சனைக்கு தீர்வாக அமையாது என கேள்வி பக்கப் பொருளிய லாளர்கள் உணர்ந்தார்கள். இந்த சூழ்நிலையில் தோற்றம் பெற்றது தான் நிரம்பல் பக்க பொருளியல் ஆகும். அதாவது மொத்த நிரம்பல் முகாமைத் துவத்தின் கீழ் மொத்த நிரம்பலில் ஒரு அதிகரிப் பினை ஏற்படுத்துவதன் மூலம் பணவீக்கம்,

வேலை யின்மை என்ற இரண்டுக்கும் தீர்வுகாண முடியும் என வலியுறுத்தப்பட்டது. வழமை போல் இக்கருத்தும் அன்றைய சூழ்நிலையில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்நிலையில் 1981ம் ஆண்டு பதவியேற்ற அமெரிக்க ஜனாதிபதி Ronald Reagan நிரம்பல் பக்க பொருளியலில் அடிப்படை முன்மொழிவுகளை வெளியிட்டு தனது பரீட்சார்த் தத்தினை செயற்படுத்தத் தொடங்கினார். இதை தொடர்ந்து 1986 களில் மீண்டும் மொத்த நிரம்பல் அதிகரித்து பண வீக்கம் வேலையின்மை இரண்டும் சாதாரண நிலைக்கு சென்றது என்றும் அதில் றீகன் வெற்றி கண்டார் எனவும் கூறப்படு கிறது. இத் தேக்கவீக்க பிரச்சனையை பின்வரும் வரைபடம் ரீதியாக விளங்குவோம்.




வரைபடத்தின் படி ஆரம்ப சமநிலை $E_0$ புள்ளியில் காணப்படுகிறது. இந்நிலையில் மொத்த கேள்வி (AD) மொத்த நிரம்பல் As வும் சமநிலை அடைந்து $Op_2$ என்ற விலையில் $Y_1$ என்ற வெளியீட்டு மட்டம் தீர்மானிக்கப்படுகிறது எனக் கொள்வோம். இந்நிலையில் பொருளாதாரம் சாதாரண நிலையில் இருப்பதாக கொள்வோம். தற்போது எண்ணெய் விலை அதிகரிப்பு காரண மாக மொத்த நிரம்பல் வீழ்ச்சி அடையும். இதனால் மொத்த நிரம்பல் வளைகோடு $As - As_1$ என வீழ்ச்சி அடைகிறது.

இந்நிலையில் புதிய சமநிலை $E_1$ புள்ளியில் அமைந்து $Op_1$ என்ற விலையில் $Oy_0$ என்ற அளவு வருமானம் நிர்ணயிக்கிறது. இங்கு விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு பணவீக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பது வேலையின்மையில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் காட்டி நிற்கின்றது. எனவே $E_1$ சமநிலை பொருளாதாரத்தில் தேக்க வீக்கம் நிலவுவதை வெளிப்படுத்துகின்றது. எனவே மொத்த நிரம்பல் முகாமைத்துவத்தின் கீழ் மொத்த நிரம்பலினை $As_1 - As$ என அதிகரிப் பதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனப்பட்டது.

இங்கு கூறக்கூடிய விடயம் யாதெனில் USA பொருளாதாரம் அப்பொருளாதாரத்தில் மொத்த நிரம்பலில் பாரிய வீழ்ச்சி, இதனால் உயர்ந்த பணவீக்கம், உயர்ந்த வேலையின்மை மற்றும் மொத்த நிரம்பல் முகாமைத்துவத்தின் கீழ் றீகனின் பரிகாரம் என அனைத்துமே இங்கு மொத்த நிரம்பலுடன் சம்மந்தப்பட்டு இருப்பதால் இதுவெ நிரம்பல் பக்க பொருளியல் எனப்படுகிறது.

## றீகனோவியலும் நிரம்பல்பக்கப் பொருளியலும்

## Reganomics and supply side economics

1981 ஆண்டு மாசி மாதம் 18ம் திகதி யன்று அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட Ronald Reagan என்பவரினால் அன்றைய காலத்தில் முக்கிய பிரச்சனையாக இருந்த தேக்க வீக்க பிரச்சனையை தீர்ப்பதற்கு முன்வைக்கப் பட்ட பரீட்சார்த்த திட்டமே றீகனோ வியல் என்ற வரைபுத்திட்டமாகும். இத் திட்ட மானது பின்வரும் நான்கு முக்கிய நிரம்பல் பக்க முன்மொழிவுகளை கொண்டிருந்தது அவை வருமாறு

1. *வரிவீதக் குறைப்பு (Reducing the tax rate)*
2. *பணப் பெறுமதியை நிலையாக பேணுதல் (Maintaining the value of the currency)*
3. *அரசாங்க சட்டதிட்டங்களில் மறுசீரமைப்பு (Reforming the goverment regulation)*
4. *பாதீட்டினை மீள் ஒழுங்கு செய்தல் (Recordering budget priorities)*

## 1. நிரம்பல்பக்க பொருளியலும் வரி வீதக் குறைப்பும்

**(Suply side economics and cut in tax)**


அதாவது தேக்க வீக்கப் பிரச்சனைக்கு தீர்வாக Reagan அதிகம் நம்பிக்கை வைத்தது வரிவீதக் குறைப்பு என்பதில் ஆகும். பொதுவாக வரிவீதக் குறைப்பென்பது ஆகக் கூடுதலாக ஒரு வருடத் துக்கு மேற்கொள்ளப்படும். ஆனால் முதல் முதலில் Reagan ஒரு நீண்ட காலத்துக்கு கிட்டத் தட்ட மூன்று வருடங்களுக்கு வரி வீதத்தினை 30 சதவீத்தால் குறைத்தார்.

Reagan னுடைய நம்பிக்கை யாதெனில் வரிவீதக் குறைப்பானது ஒவ்வொரு மனிதனுக் கும் கொடுக்கப்படும் சலுகையென்று இதன் வழி முறையில் அவர்களுடைய தொழில் துறையில் தாம் பெற்றுக் கொண்ட ஊதியத்தில் கூடிய பகுதி யினை சேமித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கும் என்றும் அத்துடன் தொழிற்சாலையின் லாபத்தின் மீதான வரிவீதக் குறைப்பு என்பது அவர்களது கையிருப்பினை அதிகரிப்பினை அதிகரிக்கச் செய்யும் என்றும் இதனால் முதலீட்டு முன்னெடுப்புக்கள் அனைத்தும் கவர்ச்சிகரமான தாக இருக்கும் என்றும் இதன் பட்சத்தில் உற்பத்தி திறனும் ஊக்குவிக்கப்பட்டு வேண்டிய அளவு தொழில் செய்ய வாய்ப்பும் அவர்களுக்கு ஏற்படும் என்பதே அவரது நம்பிக்கையாகவும் இருந்தது.

றீகனுடைய பிரதான முன்மொழிவு யாதெனில் வரிவீதக் குறைப்பானது வரி வருமானத்தை அதிகரிக்கும் என்பதாகும். அதாவது வரி வீதமானது குறைவாகக் காணப்படும் போது மக்கள் அவ் வரியை செலுத்துவதற்கு முன்வருவார்கள் என்ப தாகும். ஏனெனில் இவ் குறைந்த வரியை செலுத் துவதன் மூலம் அவர்களுடைய செலவிடத்தகு வருமானத்தில் பெரிய மாற்றங்கள் எதையும் ஏற்படுத்தாது என்பதனால் ஆகும்.

## Laffer curve

இவ்வாறு றீகனினால் முன்வைக்கப்பட்ட இக்கருத்தானது, ஏற்கனவே பேராசிரியர் laffer என்பவரினால் முன்வைக்கப்பட்ட பொருளாதாரக் கண்ணோக்கில் அமைந்த ஒரு எண்ணக் கருவாகும். இது ஒரு சாதாரண கருவூலம் அல்ல. வெட்ட வெளிச்சமாக ஆழ்ந்த கருத்தை தரும் கருவூலம் ஆகும். ஒரு சாப்பாட்டு வேலையில் சாதாரனமாக சம்பாசனையில் ஈடுபட்டுக் கொண்டி ருந்த வேளையில் அமெரிக்கப் பொருளாதாரம் பற்றிய கருத்து பரிமாற்றத்தில் இருந்து பிறந்தது எனலாம். இந்த கருத்து பரிமாற்றத்தின் போது பேராசிரியர் Laffer அங்கு கிடைக்கப் பெற்ற மேசை விரிப்பில் (napkin) வரைந்த படத்தின் விளக்கமே Laffer curve ஆகும். இதுவே றீகனோவியலின் உள்ளடக்கம் என்றும் கூறப்படு கிறது. இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.




இவ்வரைபடமானது வரி விகிதத்திற்கும் வரி வருமானத்துக்கும் இடையிலான ஈடுபாட் டினைக் காட்டுகிறது. புள்ளி Aயினை எடுப் போமாக இருந்தால் அப்புள்ளியில் வரி விகிதமும் வரிவருமானமும் பூச்சியம் ஆகும். அதே போல் C புள்ளியினை எடுப்போமாக இருந்தால் அப்புள்ளி யில் வரி விகிதம் 100% ஆனால் வரி வருமானம் பூச்சியம் ஆகும். ஏனெனில் வரிவிகிதம் 100% மாக இருக்கும் போது எவரும் வேலை செய்யவோ, சேமிக்கவோ, முதலிடவோ, செய்யும் வேலை களை ஒழுங்காக செய்யவேமாட்டார்கள். இந்த விளக்கமானது ஒரு சாதாரண கருது கோலாகவே கருதப்படுகிறது. அதாவது நேராய்வுக்கு அடிப் படையாக அமைகின்ற ஒரு தற்காலிக விளக்க மாகும். இந்த இரண்டு புள்ளியிலும் எப்போதும்

பொருளாதாரக் கொள்கைகள் காணப்படாது என்றும், மாறாக அந்த வளை கோட்டில் உள்ள ஏதாவது ஒரு புள்ளியிலேயே பொருளாதார செயற் பாடு காணப்படும் என்றார்.

இங்கு பேராசிரியர் Laffer A,B,C புள்ளிகளை இணைத்து ஒரு சமூகமான வளை கோட்டினை வரைந்தார். இவ்வரைபின் படி A புள்ளியில் இருந்து B புள்ளி வரை வரி விகிதம் அதிகரித்தால் வரிவருமானம் அதிகரிக்கும். ஆனால் B புள்ளிக்கு பின்பு ஒரு புதிய நிலை தோன்றுகின்றது அதாவது B புள்ளிக்கு பின் வரி விகிதம் அதிகரித்தால் வரி வருமானம் குறைந்து செல்லத் தொடங்கும். அதாவது உயர்ந்த வரி விகிதமானது B புள்ளியில் இருந்து வளை கோட்டின் ஊடாக C புள்ளியை நோக்கி வருமானத்தை நகர்த்தி செல்லும் என்ப தாகும். பொதுவான பார்வையில் பொருளாதார செயற்பாடு என்பது வளைகோட்டின் A-B பாதை யினூடாகவே இயங்குகின்றது என்பதாகும். எனவே தான் வரி அதிகரித்தால் வரி வருமான மும் அதிகரிக்கும் என்பதாகும். ஆனால் பேராசிரியர் Laffer வாதிடுவது என்னவென்றால் உண்மை யில் அன்றைய அமெரிக்க பொருளாதாரம் B - C பாதைக்கு ஊடாகத் தான் இயங்கிக் கொண்டிருந் தது என்றும் எனவே தான் வரி வீதத்தினை குறைத்தால் அரச வரி வருமானம் அதிகரிக்கும் எனவும் கூறப்பட்டது. இக்கருத்துடன் பல பொருளி யல் அறிஞர்களும், அரசியல் அறிஞர்களும் உடனேயே இணைத்து கொண் டார்கள்.

## 2. நிரம்பல் பக்க பொருளியலும் பணப் பெறுமதியை நிலையாக பேணுதலும் (Suply side economics and maintaining the value of currency)

றீகனின் அடுத்த இலக்கான இது விளங் குவது யாதெனில் பணப் பெறுமதியை நிலை யாகப் பேணுவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதாகும். இது கருதுவது யாதெனில் பொருளா தாரத்தில் பண நிரம்பல் வளர்ச்சி மட்டத்தை குறைக்க வேண்டும். என்பதாகும். இதன் மூலம் பணவீக்க தாக்கத்தை குறைத்துக் கொள்ள கூடிய வாய்ப்பு ஏற்படும் என்ற எண்ணப் பாங்கு விளக்கப் பட்டது. இதன் மூலம் நுகர்வோர் மத்தியிலும் முதலீட்டாளர் வர்த்தக முன்னெடுப்பாளர்கள் மத்தியிலும் திகைப்பும் திண்டாட்டமும் ஏற்பட்டுக் கொள்ளும் என்றும், இது இறுதியில் கூடிய அளவு முதலீட்டை கொண்டு வரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் முன்மொழியப்பட்டது.

## 3. அரசாங்க சட்ட திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்துதல் (Reforming Government regulation)

இது தொடர்பாக இவர் வெளியிட்ட முக்கிய முன் மொழிவு யாதெனில் தொழில்துறை மற்றும் ஏனைய துறைகளின் தேவையற்ற நடைமுறை களை நீக்கி புதிய விதமான வழிகளை கையாள வேண்டும் என்பதாகும். இதற்காக பல முகவர் களையும் ஏற்படுத்தினார். இவர்கள் மூலம் நாட்டின் சகல துறைகளிலும் பல முன்னெடுப்புக் களை மேற் கொள்ளத் திட்டமிட்டார்.

## 4. பாதீட்டினை மறு ஒழுங்கு செய்தல் (Recordering budget priorities)

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நான்கு வகை யான திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப் பட்டது.

1. *அரசாங்க செலவின் வளர்ச்சி வீதத்தினை குறைத்தல் (Reducing the growth of goverment spending)*
2. *பாதீட்டின் முதன்மை சலுகைகளை மீள் ஒழுங்கு செய்தல் (Reordering budget priorities)*
3. *தேவையற்ற எந்த வித உபயோகத்துக்கும் உதவாதசட்டதிட்டங்களை சீரமைத்தலும் அவற்றை நீக்குதலும், (reforming and eliminating unnecessary unproductive regulations)*
4. *நாணயக் கொள்கையினை பணப் பெறும தியை பேணுவதில் ஊக்குவித்தல். (Encouraging a consistent monetary policy aimed at maintaining the value of the currency) என்பனவாகும்.*

## முடிவுரை

அதாவது வெவ்வேறுபட்ட கால கட்டத்தில் வெவ்வேறுபட்ட பொருளாதார பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட வேறுபட்ட பரீட்சார்த் தங்களில் இருந்து பிறந்ததே கேள்வி மற்றும் நிரம்பல் பக்கப் பொருளியல் ஆகும்.

## Reference


- John oliver wilson 'the power economy Building an economy that words
- S.Vijayakumar 'MACRO economics theory and policy' 2008


*Only two things are infinite*
*The universe and human stupidity*
*and I'm not sure about the former*
*Albert Einstein*

# பொருளாதார முறைமைகள்
# (Economic System)

**ச.கென்றிக்கா**
*A/L com (2017)*

### அறிமுகம்

அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவன ரீதியான அமைப்பே பொருளாதார முறைமை யாகும். இவ் அடிப்படை பொருளாதார பிரச்சினை களுக்கான தீர்வுகளை அடிப்படையாக கொண்டு பொருளாதார முறைமைகள் பல்வேறு முறை களாக வகுக்கப்படுகின்றன. இக் கட்டுரையில் பொருளாதார முறைமையின் வகைகளையும் அவற்றின் இயல்புகளையும் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் தொழிற்பாடுகளையும் நோக்குதல் பொருத்தமானதாகும்.

### பொருளாதார முறைமையின் தொழிற்பாடுகள்

எப்பொருளை எந்தளவில் உற்பத்தி செய்தல்
எவ்வாறு உற்பத்தி செய்தல்
யாருக்காக உற்பத்தி செய்தல்

### அரசு பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத் துவதற்கான கொள்கை ரீதியான கருவிகள்

01. பாதீட்டு கொள்கை
    - வரிக் கொள்கை
    - செலவுக் கொள்கை

02. பாதீடு அல்லாத கொள்கை
    - *சட்டங்களையும் கட்டளைகளையும் ஏற்படுத்தல்*
    - *தனியார் மயப்படுத்தல்*
    - *சொத்துக்களை அரசுடமையாக்கல்*

### பொருளாதார முறைமையொன்றின் நிறைவு தன்மையை அளவீடு செய்வதற்கான நியமங்கள்

1. *நிறை தொழில் மட்டம்*
2. *பொருளாதார வினைத்திறன்*
3. *பொருளாதார வளர்ச்சி*
4. *விலையுறுதி பொருளாதார உறுதி*
5. *சென்மதி நிலுவை*
6. *சூழல் தரம் பேணப்படல்*
7. *பொருளாதார சுதந்திரம்*

### பொருளாதார முறைமைகளின் வகைகள்

1. *பாரம்பரிய பொருளாதார முறைமை*
2. *சந்தை பொருளாதார முறைமை*
3. *கட்டளை அல்லது மத்திய திட்டமிடல் பொருளா தார முறைமை*
4. *கலப்பு பொருளாதார முறைமை*
5. *இஸ்லாமிய பொருளாதார முறைமை*

### பாரம்பரிய பொருளாதார முறைமை

மரபுரீதியான சம்பிரதாயங்கள் மற்றும் பழக்க வழக்கங்களை குறிகாட்டியாக வைத்து செயற்படும் பொருளாதார முறைமையாகும்.

### பாரம்பரிய பொருளாதார முறைமையின் இயல்புகள்

- *சொத்துடமை முறைகள்*
- *பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மற்றும் சமய நம்பிக்கைகள்*
- *எளிய சுய தேவை பொருளாதார முறைமை*
- *அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் நிர்வாக அமைப்பினால் அல்லது சபையினால் தீர்க்கப்படல்.*

### சந்தை பொருளாதார முறைமை

தனிநபர்கள் சொத்துக்கான உடைமை செய்வதற்கான உரிமையினை வழங்கும் பொருளாதார முறைமை இதுவாகும்.

### பிரதான பண்புகள்

- *தனியார் சொத்துடமை*
- *இலாபத்தை அடிப்படையாக கொண்ட காரணிகள்*
- *விலை பொறி முறை*
- *போட்டி*
- *அரசின் தொழிற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்*

### விலையின் தொழிற்பாடுகள்

தகவல் வழங்கும் தொழிற்பாடு

பங்கீட்டு தொழிற்பாடு

தூண்டற் தொழிற்பாடு

### விலைப் பொறி முறையின் ஊடாக அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கும் முறை

எதனை எந்தளவில் உற்பத்தி செய்தல்

ஒப்பீட்டு ரீதியில் எப்பொருள் உற்பத்தியில் அதிக இலாபம் உழைக்க முடியுமோ அப்பொருள் உற்பத்திக்கே வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

எவ்வாறு உற்பத்தி செய்தல்

காரணி விலைகளின் அடிப்படையில் எத் தொழில்நுட்பம் மிகக் குறைந்த கிரயத்தை உடையதோ அத்தொழில்நுட்பம் தெரிவு செய்யப்படும்.

யாருக்காக உற்பத்தி செய்தல்

விலை செலுத்த தயாரான தரப்பினர் யாரோ அவர்களுக்கு முன்னுரிமை அளித்தே உற்பத்திகள் இடம் பெறும்.

### மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமை

மத்திய திட்டமிடல் குழுவினரால் வழங்கப்படும் கட்டளைக்கு ஏற்ப பொருளாதார தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் பொருளாதார முறைமை இதுவாகும்.

### பிரதான பண்புகள்

- *ஊழியத்தை தவிர்ந்த ஏனைய காரணிகள் அரசுடமையாக இருத்தல்*
- *திட்டமிடல் அடிப்படையில் அடிப்படை பொருளாதார பிரச்சினை தீர்க்கப்படல்.*
- *அரசு மத்திய திட்டமிடல் குழு, உற்பத்தி முயற்சியாண்மை ஊழியர்கள் நுகர்வோர்கள் உற்பத்திகளின் பிரதான சக்தியாக செயற்படல்.*

### மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமையின் அனுகூலங்கள்

- *பொது பண்டங்களின் உற்பத்திக்காக வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல்.*
- *வள கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடிவதால் உற்பத்தியினை குறித்த முறையின் கீழ் கொண்டு செல்ல முடியும்.*

### மத்திய திட்டமிடல் பொருளாதார முறையின் பிரதிகூலங்கள்

- *ஒழுங்கமைப்பு மற்றும் தொடர்புபடுத்தல் பிரச்சினைகள் ஏற்படல்*
- *தெரிவு சுதந்திரம் மற்றும் நுகர்வோர் இறைமைகள் அற்றுப் போதல்.*
- *பொருளாதார அக்கறையின் வீழ்ச்சி காரணமாக பொருளாதார அபிவிருத்தி மந்தமடைதல்.*
- *சுற்றுச் சூழல் வளங்கள் பாதிக்கப்படல்.*

### மத்திய திட்டமிடல் பொருளாதாரமுறை அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கும் முறை

எதனை எந்தளவு உற்பத்தி செய்தல்

ஒப்பீட்டு ரீதியல் எப்பொருள் உற்பத்தி சமூகத்திற்கு அதிக நன்மை தருவதாக காணப்படுகிறதோ அப் பொருள் உற்பத்திக்கே வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

எவ்வாறு உற்பத்தி செய்தல்

பொருளாதாரத்தில் எத்தொழில்நுட்பம் மிகையாக காணப்படுகின்றதோ அத் தொழில்நுட்பம் தெரிவு செய்யப்படும்

#### யாருக்காக உற்பத்தி செய்தல்

பொருளாதாரத்தில் காணப்படுகின்ற மக்களின் தேவை கருதி பொருட்கள் பங்கீடு செய்யப்படும்.

மாறாக மத்திய திட்டமிடல் பொருளாதார முறை பொருளாதாரத்தில் எத் தொழினுட்பம் மிகையாக உள்ளதோ அது தெரிவு செய்யப்படும்.

#### யாருக்காக உற்பத்தி செய்தல்

சந்தைப் பொருளாதாரமானது விலை செலுத்த தயாரான தரப்பினர் யாரோ அவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும்.

மாறாக மத்திய திட்டமிடல் பொருளாதார முறை பொருளாதாரத்தில் காணப்படும் மக்களின் தேவை கருதி பொருட்கள் பங்கீடு செய்யப்படும்.

### கலப்பு பொருளாதார முறைமை

வளங்கள் பங்கீடு செய்வதில் சந்தைப் பொருளாதார முறைமைகளையும் மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமையும் இணைந்து காணப்படுகின்ற பொருளாதார முறைமையாகும்.

### பிரதான பண்புகள்

- *தனியார் அரச முயற்சியாண்மைகள் காணப்படல்*
- *விலைப்பொறி முறையும் திட்டமிடல் முறையின் ஊடாக அருமையான வளங்கள், பங்கீடு செய்யப்படுதல்.*
- *நுகர்வோர், உற்பத்தியாளர் உற்பத்தி காரணி உடமையாளர் மற்றும் அரசு பொருளாதாரத்தின் பிரதான சக்திகளாக காணப்படுதல்.*

### கலப்பு பொருளாதாரமொன்றின் அரசின் தொழிற்பாடுகள்

- *போட்டியினை ஏற்படுத்தல்*
- *வளங்களை மீள்பங்கீடு செய்தல்*
  - *வெளி வாரி விளைவுகள்*
  - *பொது பண்டங்கள்*
- *வருமான ஏற்ற தாழ்வினை இல்லா தொழித்தல்*
- *பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்*

### கலப்பு பொருளாதார முறை அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கும் முறை

#### எதனை எந்தளவு உற்பத்தி செய்தல்

சந்தைப் பொருளாதார முறை விலைப் பொறிமுறை அடிப்படையில் எப்பொருள் உற்பத்தி அதிக இலாபம் தருகின்றதோ அப்பொருள் உற்பத்திகளை தெரிவு செய்யும்.

மாறாக மத்திய திட்டமிடல் பொருளாதார முறை எப் பொருள் உற்பத்தி சமூகத்திற்கு அதிக நன்மை தருவதாக காணப்படுகின்றதோ அப்பொருள்களை உற்பத்தி செய்யும்.

#### எவ்வாறு உற்பத்தி செய்தல்

சந்தை பொருளாதார முறை காரணி விலைகளின் அடிப்படையில் எத்தொழில்நுட்பம் குறைந்த கிரயத்தில் உள்ளதோ அத்தொழில் நுட்பம் தெரிவு செய்யப்படும்.

### இஸ்லாமிய பொருளாதார முறைமை

திருக்குர் ஆன் மற்றும் சுன்னா என்பவற்றில் இருந்து செயற்பட்டு நேரத்திற்கும் இடத்திற்கும் பொருத்தமாக பிரயோகிக்கப்படுகின்ற இஸ்லாமிய நாட்டின் பொருளாதார கொள்கைகளும் ஆளுகின்ற இஸ்லாமிய சொத்துக்களும் இஸ்லாமிய பொருளாதாரம் என அழைக்கப்படுகிறது.

#### சொத்துடமை

இப் பொருளாதார முறையில் சொர்க்கத்திலும் உலகத்திலும் உள்ள சொத்துக்களுக்கு அதிபதியாக இறைவனே கருதப்படுகிறார்.

#### தனியுடமை

ஒரு மனிதனானவன் எவ்வளவுஉற்பத்தி காரணிகளையும் தனக்கு சொந்தமாக வைத்திருக்க முடியும். ஆனால் அவன் உடமை கொண்டிருக்கும் சொத்துக்கள் அனைத்தும் மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படுத்தாதவாறு சேர்க்கப்படல் வேண்டும்.

**பொதுவுடமை**

இங்கு மிகவும் அத்தியாவசியமான பொருட்கள் சேவைகளின் உரிமை அரசிற்கேயாகும்.

**செல்வப்பங்கீடு**

இப் பொருளாதாரத்தில் தமது தேவைக்கு மேலதிகமாக சொத்துக்களை வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட ஒரு வீத "சகாவை" செலுத்த வேண்டும்.

**சகாவின் முக்கியத்துவம்**

வழிபாட்டு சாதனமாக பயன்படும்
நியாயத்துவத்தை ஏற்படுத்தும்
சமூக மோசடிகளை கட்டுப்படுத்தும்

**இஸ்லாமிய பொருளாதாரம் தடை செய்யும் விடயங்கள்**

வட்டிக்கு கடன் கொடுத்தல்
தனியுரிமை
சூதாட்டம், அதிஷ்டலாப சீட்டெடுப்பு

**முடிவுரை**

இந்த வகையில் பொருளாதார முறைமைகளின் இயல்புகளை, அனுகூலங்கள், பிரதிகூலங்கள் பொருளாதார முறைமையின் செயலாற்றம் அளவீடு செய்வதற்கான நியமங்கள் என்பன சிறப்பாக நோக்கப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

- பொருளாதார முறைமைகள்
  வே.கருணாகரன்
- பொருளியல் அறிமுகம்
  பேராசிரியர் டனி எத்தப்பத்து

*செலவுக்கு வழி சொல்லும் நண்பர்களுக்கு*
*வரவுக்கு வழி சொல்லத்தெரியாது.*

# மனிதனை மாற்றிய வணிகம்

தே.அல்பாஜினி
*A/L Com 2017*

தேவை விருப்பம் இணைந்தது வணிகம்
கேள்வி, உற்பத்தி இணைந்தது வணிகம்
தேவைக்கு ஏற்ப கேள்வி வணிகம்
தேவை கடந்த விருப்பம் வணிகம்

உற்பத்திகளின் உச்சம் வணிகம்
வினைத்திறனான பரிமாற்றம் வணிகம்
நுகர்வு, பங்கு, சேவை, ஆதன நிதி
சந்தை வணிகம் என சகலமும் வணிகம்

சந்தை முதல் கணனி வரை இலத்திரனியல் வணிகம்
உள், வெளிநாடு வரை பூகோள வணிகம்
பல நாடுகளை இணைக்கும் அதி நவீன வணிகம்
சமூக வலைத்தளங்களில் Face book வணிகம்

ஆராய்ச்சிகள், அபிவிருத்திகள் என
வளர்ச்சி கண்டது வணிகம்
வாழ்வாதாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும்
அடிப்படையானவை வணிகம்

பண்ட பரிமாற்றமும்
பாதியிலே பணப்பயன்பாடும் - இன்று
பாவனையில் Digital தொழிநுட்பமும் சேர்ந்து
பாசாங்கு காட்டும் விந்தையான வணிகம் இது

தொழில்நுட்பமும் வியந்திடும் இலத்திரனியலும் சேர்ந்து
கைகொட்டி சிரித்திடும் பற்பல விந்தை
மனிதனுக்காய் மனிதனை மாற்றிய வணிகம்
மாறிவரும் உலகிற்கு வித்திட்ட வணிகம் - இது தான்
மனிதனை மாற்றிய வணிகம்

# வணிகக்கல்வி

# நிதானமாய் பயணிப்போம்!

**மேரி டானியா.அ**
*A/L 2017 /Com*

வளர்ந்து கொண்டே செல்லுகின்ற எம் கணனி யுகத்திலே வணிகத்தின் விந்தைக்குள் முடங்கிக்கிடக்கின்ற நாம் ஏதோ ஒரு வகையில் வணிகத்தின் போக்கிலே ஓயாது சென்று கொண்டுதான் இருக்கின்றோம். ஆம், ஓட ஓட தூரம் குறையாது என்பதை போல இன்று நாமும் பயணித்து கொண்டு தான் இருக்கின்றோம். ஆனால் முடியும் இடம் தெரிவதே இல்லை. பயணம், இதன் பொருள் என்ன என்பது பற்றி சிந்தித்தால் "போக்குவரத்து" என்று பொருள் பெறும்.

போக்குவரத்து என்றவுடனே என்ன? என்று எண்ணம் தோன்றும். அதாவது பயணி களையும் சுமைகளையும் (பொருட்கள்) ஓரிடத்தி லிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்வ தற்கு பயன்படுத்தப்படும் சேவை போக்குவரத்து எனப்படும். இப்போக்குவரத்து ஒரு சில வழி முறைகளை தன்வசம் வைத்துள்ளது. போக்கு வரத்தானது புராதன காலந்தொட்டு இந் நவீன காலம் வரை எம்மிடையே பின்னிப் பிணைந்த ஒன்றாக காணப்படுகின்றது. மக்கள் தங்கள் சுமைகளை கைகளாலும் தலையாலும் தோள் களிலும் சுமந்து சென்ற முறைகள் புராதன காலத்திலிருந்து நடைமுறையில் இருந்தன. அதன் பின்னர் அம்மக்கள் சுமைகளை இழுத்து செல்லல், பிராணிகளின் முதுகுகளில் ஏற்றிச் செல்லல் போன்ற முறைகளை பயன்படுத்தி வந்தனர்.

இன்றைய தொழினுட்ப சேவை வளர்ச்சி காரணமாக அண்மை காலங்களில் நவீன போக்குவரத்து சாதனங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. போக்குவரத்தானது வியாபார நடவடிக்கை, கைத்தொழில், விவசாய வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது. இவ்வாறான போக்கு வரத்தின் வழிமுறைகள் நாட்டின் உற்பத்தி போன்ற பாரிய சேவைகளை உள்ளூர் சந்தை களுக்கு விநியோகித்து தேசிய உற்பத்தியினை அதிகரித்து மக்களின் வாழ்க்கை தரம் உயர பல வழிகளிலும் துணைபுரிகின்றது. ஆகவே தான் இச்சேவை துணைநிலை சேவைகளுக்குள் ஒன்றாக கருதப்படுகின்றது.

இவ்வாறு உதவும் போக்குவரத்தின் வழிமுறைகளை பின்பற்ற தவறுவதால் பல்வேறு பட்ட நெருக்கடிகளை சந்திக்க நேரிடலாம். அதாவது நாம் குறிக்கப்பட்ட வேகத்தை மீறி போக்குவரத்தில் ஈடுபடும் போது விபத்துக்களும் வேகத்தை குறைத்து பயணிக்கையில் பயண தாமதங்களும் ஏற்படும். மேலும் சீரற்ற உற்பத்தி நடவடிக்கையும் இவ்வழிமுறை தவறுவதால் ஏற்படும். அது மட்டுமன்றி உரிய இடத்திற்கு உரிய நேரத்தில் செல்வது கடினம். இதனால் அன்றைய வியாபாரம் தடைப்படும். இது ஒரு நிறுவனத்தின் பாரிய நட்டத்தை ஏற்படுத்த கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தும்.

குடிபோதையில் வாகனத்தை செலுத்துதல், போதை வஸ்துக்களை பயன்படுத்தி கொண்டு போக்குவரத்தில் ஈடுபடுதல், ஆசனப்பட்டி அணி யாமை, தலைக்கவசம் அணியாமை, புகைப்பரி சோதனை செய்யாமை, சாரதி அனுமதி பத்திரம் பெறாமை (Liscense) மற்றும் குறிக்கப்பட்ட

LIBRARY
DATE:

வேகத்துக்குள் வண்டியை செலுத்தாமை போன்ற முறை தவறி போக்குவரத்தில் ஈடுபடுவதால் "தன் வினை தன்னை சுடும்" என்பது போல இதனால் ஏற்படும் விபத்துக்கள், பயண தாமதங்களுக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டி ஏற்படும்.

மேலும் இன்றைய அவசரமான உலகிலே மக்களின் பயணங்களை பாதுகாக்கவென அரசு பல்வேறு சட்டங்களை விதிக்கின்றது. மஞ்சட் கோட்டு வழியே பயணிக்க வேண்டும். சமிக்ஞை விதிகளை பின்பற்ற வேண்டும். நெருக்கடியான போக்குவரத்தின் போது வீதி தொடர்பான காவல் துறையினரின் (Trafic Police) சைகை குறியீடு களைக்கொண்டு போக்குவரத்தில் ஈடுபட வேண்டும். வாகனங்கள் மற்றும் நடைசாரிகள் குறிக்கப்பட்ட வழியே பயணத்தை தொடர வேண்டும். வீதிகள் வழியே பல்வேறுபட்ட பதாதைகள் போன்றன தொங்கவிடுமிடத்து அவற்றை கொண்டு தகவலை அறிந்து பயணிக்க வேண்டும்.

எனவே, போக்குவரத்து வழிமுறைகளை பின்பற்றுவதால் நமக்குரிய நன்மை தனங்கள் நம்மிடையே வந்து சேரும். மாறாக அவற்றை பின்பற்ற தவறுவதால் மேற்கூறப்பட்டது. போன்று பாரிய நட்டங்களையும் இழப்புக்களையும் சம்பாதிக்க நேரிடும். ஆகவே தான் நாம் கால் போன போக்கிலே போகாது போக்குவரத்து வழி முறைகளை பின்பற்றி மாறி வரும் உலகில் அதன் ஓட்டத்துக்கு ஏற்ப நாமும் எந்தவித தவறுமின்றி பயணிக்க முற்பட வேண்டும்.

வணிகத்தின் விந்தைக்குள்ளே நாமும் ஓட வேண்டுமே தவிர இடையில் விலகவோ அல்லது நிறுத்தி விடவோ கூடாது. போக்குவரத்து என்ற வுடன் தெரு போக்குவரத்து தவிர நீர், வான், குழாய் வழி, புகையிரத வழி என்பவற்றையும் நோக்கலாம். இவ்வாறு நோக்கின் ஓர் பரந்துபட்ட விடயமாக இப்போக்குவரத்து முறை போய் கொண்டே செல்லும். ஒவ்வொரு போக்குவரத்து வழிமுறையிலும் காணப்படும் விரைவு, பாதுகாப்பு, செலவு/கிரயம், கொள்ளளவு, தாராள தன்மை, தரமும் நியம சர்வதேச அங்கீகாரமும், சட்டமுறை பயன்பாடு போன்ற பண்புகளுக்கமைய போக்கு வரத்து முறையை தெரிவு செய்ய வேண்டும். அடிப்படையில் நாம் போக்குவரத்து முறையை தெரிவு செய்கையில் முறையான தொரு தெரிவு தவறற்ற ஓர் முறையாக கருதலாம். ஆகவே நல்லதொரு அம்சங்களையும் பண்புகளையும் கொண்ட தொரு முறையை தெரிவு செய்வோம்.

**"முறையான தொரு போக்குவரத்து முறை**
**முழுமையான பயணம் வரை இட்டு செல்லும்"**

நன்றி

**-சுய ஆக்கம்**

*எல்லோருக்கும் பிடிக்க வேண்டும் என்று பொய்யாக வாழ்வதை விட சிலருக்கு மட்டும் பிடித்தால் போதும் என்று உண்மையாக வாழ்வது மேல்*

# உற்பத்தி பொருளின் வாழ்க்கை வட்டம்
# (Product Life Cycle)

**கனுஷா.அ**
*A/L Com 2017*

புதிய பண்டம் ஒன்றை சந்தைக்கு அறிமுகம் செய்து குறிப்பிட்ட காலம் கடந்த பின்னர் அப்பண்டத்தின் வாழ்க்கை வட்டம் பற்றி ஆய்வு செய்தல் முக்கியமான ஒன்றாகும். சாதாரணமாக உற்பத்தி பொருளின் வாழ்க்கை வட்டம் 5 கட்டத்தினை கொண்டதாக காணப்படும்.

1. *அபிவிருத்தி கட்டம்*
2. *அறிமுக கட்டம்*
3. *வளர்ச்சிக் கட்டம்*
4. *முதிர்ச்சிக் கட்டம்*
5. *வீழ்ச்சிக் கட்டம்*

## அபிவிருத்திக் கட்டம்

பொருள் அபிவிருத்தி கட்டம் என்பது புதிய பண்டம் பற்றிய எண்ணம் மனதில் தோன்றுதலுடன் ஆரம்பமாகின்றது. இக்கட்டத்தில் விற்பனை காணப்படாது. இலாபம் அற்றதாக காணப்படும். விற்பனை பொருள் தொடர்பான எண்ணம் மட்டுமே தோன்றியிருக்கும்.

## அறிமுகக் கட்டம்

இது பொருளினைச் சந்தையில் அறிமுகம் செய்யும் கட்டமாகும். இதன் போது விற்பனை மெதுவாக அதிகரிப்பதோடு இலாப எல்லை காணப்படாது இதற்கு காரணம் விற்பனை வருமானத்தை காட்டிலும் விற்பனைக் கிரயம் அதிகமாக காணப்படுவதனாலாகும். விலையிடலின் போது நெகிழும் விலைமுறையை அல்லது சந்தைச் சாரம் உறிஞ்சல் விலை முறையைப் பயன்படுத்துவார். இக்கட்டத்தில் உற்பத்தியாளரால் எடுக்கப்படும் உபாயங்கள்

1. *மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்*
2. *மாதிரிகளை வழங்குதல்*
3. *மக்கள் விருப்பு பெற்ற பொது சன ஊடகங்கள் ஊடே விளம்பரங்களை மேற் கொள்ளல்*
4. *தெரிவு செய்யப்பட்ட நம்பிக்கைக்குரிய விநியோகஸ்தர் ஊடாக பொருட்களை அறிமுகம் செய்து வைத்தல் என்பவற்றைக் கூறலாம்.*

## 03. வளர்ச்சிக் கட்டம்

இக் கட்டத்தில் விற்பனை உயர்வடையும் கிரயம் சாதாரணமாக குறைவான மட்டத்தில் காணப்படும். ஆகவே உயர்வான இலாப எல்லை காணப்படும். இக் கட்டத்தில் அடிப்படைப் பண்டத்தில் புதிய அம்சங்களைச் சேர்ப்பதால் விற்பனையை அதிகரிக்க முடியும். இக் கட்டத்தில் உற்பத்தியாளரால் மேற்கொள்ளப்படும் உபாயங்களாக

1. *பொருளின் தரத்தினை தொடர்ச்சியாக உயர்த்திச் செல்லல்*
2. *புதிய புதிய பண்புகளை பொருளில் அறிமுகம் செய்தல்*
3. *நடுவர்களை விரிவுபடுத்தல்*
4. *விலைகளை குறைப்புச் செய்தல்*
5. *விநியோக மார்க்கங்களில் மாற்றம் செய்தல்*

போன்வற்றை குறிப்பிடலாம்.

## முதிர்ச்சிக் கட்டம்

இக்கட்டத்தில் விற்பனை அதிகரிப்பு மெதுவாக குறைவடையும். எதிர்பார்த்த வாடிக்கை

யாளர்கள் கொள்வனவு செய்து முடித்திருத்தல் இதற்கான காரணமாக அமையும். அதே போல போட்டிப் பொருள்களும் சந்தையில் காணப்படும். அத்தோடு குறிப்பிட்ட பொருள் மீது நுகர்வோர் தெவிட்டல் நிலையை அடைந்திருத்தல் போன்ற காரணங்களால் விற்பனை விருத்தி தடைப்பட்டு நிற்கும். இதன் போது விற்பனை மெதுவாக குறைவடைய இலாப எல்லையும் அதற்கமைய குறைவடைந்து செல்லும்.

முதிர்ச்சி கட்டத்தில் உற்பத்தியாளரால் மேற் கொள்ளும் உபாயங்கள்

1. *சந்தையை புதுப்பித்தல்*
2. *உற்பத்தி கலவையில் மாற்றத்தை செய்தல்*
3. *விலைகளை திடீர் குறைப்பு செய்தல்*
4. *மேம்படுத்தல் முறைகளை மாற்றியமைத்தல்*
5. *விநியோக முறைகளை மாற்றியமைத்தல்*


## வீழ்ச்சிக் கட்டம்

முதிர்ச்சி கட்டத்தில் காணப்பட்ட விற்பனை வீழ்ச்சி தீவிரமடையும் கட்டம் இதுவாகும். அதாவது படிப்படியாக விற்பனை வீழ்ச்சியடையும். அதனடிப்படையில் இலாபமும் வீழ்ச்சியடையும். இக்கட்டத்தில் விலையினை குறைத்தல், விநியோக வழிமுறையைத் தேடுதல், இலாப மற்ற சந்தைத் துண்டங்களிலிருந்து விலகுதல் பொருத்தமாகும். கிரயத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.

இக்கட்டத்தில் உற்பத்தியாளர் எடுக்கும் உபாயங்களாக

1. ***மூலதனத்தினை முடியுமான வரை காசாக மாற்றி வியாபாரத்தினை முடிவுக்கு கொண்டு வந்து சந்தையில் இருந்து வெளியேறுதல்.***
2. ***மூலதனத்தினை வெளியே எடுத்து மாற்று வழி ஒன்றில் முதலிடுதல்.***
3. ***மூலதனத்தினை வரையறுத்து சந்தையில் தொடர்ந்து இருக்க முயற்சித்தல் என்ப வற்றை குறிப்பிட முடியும்.***

   1. அபிவிருத்திக் கட்டம்
   2. அறிமுக கட்டம்
   3. வளர்ச்சிக் கட்டம்
   4. முதிர்ச்சிக் கட்டம்
   5. வீழ்ச்சிக்கட்டம்





**உசாத்துணை நூல்கள்**

1. வணிகக் கல்வி 1 கலாநிதி A.சிவனேசராசா
2. வணிகக் கல்வி 1 கலாநிதி ஜகத் பண்டாரநாயக்க
3. பிலிப் கொட்லர் 13 Edition

# இருப்புக்கட்டுப்பாடு

செலோன் பியூலா.ம
*A/L Com 2017*

மிகைஇருப்பு இல்லாமலும் குறை இருப்பு இல்லாமலும் நிறுவனமொன்று சீராக இருப்பு மட்டத்தினைப் பேணுதல் இருப்புக்கட்டுப்பாடு ஆகும்.

### CIMA பின்வருமாறு வரையறுக்கிறது

தரம், கிரயம், முதன்மைக்காலம் என்பவற்றின் அடிப்படையில் இருப்பு மட்டங்களின் சிறப்பான ஒழுங்குபடுத்தல் இருப்புக்கட்டுப்பாடு ஆகும்.

### வேறு விதமாகக் கூறுமிடத்து

பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களை உரிய முறையில் ஏற்றல், ஒழுங்கு முறையில் களஞ்சியப் படுத்தல், உற்பத்திக்கு உரிய நேரத்தில் வழங்கல், உத்தம மட்டத்தில் இருப்பைப் பேணல் இருப்புத் தொடர்பான அறிக்கைகள் பேணல் ஆகிய செயற்பாடுகள் இருப்புக்கட்டுப்பாடாகும்.

### இருப்பு கட்டுப்பாட்டின் நோக்கங்கள்

- *உற்பத்தி தடைப்படாமலிருப்பதற்கு பொருட் களை தடையின்றி வழங்குதல்.*
- *உற்பத்தியின் தரத்தைப் பேண தரமான பொருட்களை உற்பத்திக்கு வழங்குதல் .*
- *தொழிற்படு மூலதனம் வீணாக இருப்பில் தேங்காது தடுத்தல்*
- *இருப்புத் தொடர்பான தகவல்களை முகாமைக்கு வழங்கல்*
- *குறைந்த கிரயத்தில் உற்பத்தியை மேற் கொள்ள உதவும்*
- *இருப்பு இருக்குமிடத்தைத் துரிதமாகக் கண்டறிய உதவுதல்*
- *தீ, களவு, ஏனைய அழிவுகளிலிருந்து பண்டங் களை பாதுகாத்தல்.*
- *இருப்பின் அளவைச் சரியாகக் கணிப்பிட்டு விலையிட உதவுதல்.*

### மிகை இருப்பு காணப்படின்

- *இருப்பு பராமரிக்கும் செலவு அதிகரிக்கும் .*
- *பழுதடைதல், ஆவியாதல், பழமையாதல் போன்ற நட்டங்கள் ஏற்படும்.*
- *சிக்கனம் பேணப்படமாட்டாது.*
- *விலை வீழ்ச்சி ஏற்படுமாயின் பெருமளவு நட்டம் ஏற்படும்.*
- *தேவையற்ற மூலதன முடக்கம் ஏற்படும்.*

### பற்றாக்குறையான இருப்பு காணப்படின்

- *உற்பத்தி தடைப்படும்*
- *நன்மதிப்பு இழக்கப்படும்*
- *வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்படும்.*
- *கட்டளைக்கிரயம் அதிகரிக்கும்.*

### இருப்பு கட்டுப்பாட்டு முறைகள் / நுட்பங்கள்

- *இருப்பு மட்டம் பேணும் முறை*
- *A B C பகுப்பாய்வு*
- *உரிய நேரத் தந்தி ரோபாய முறை*
- *இரட்டை கொள்கலன் முறை*
- *விகித ஆய்வு முறை*
- *கணனி முறை*

### இருப்பு முரண்பாடுகள் (Stock discrepancies)

இருப்பு செவ்வையின் போது களஞ்சிய பேரேட்டில் காணப்பட்ட இருப்பும் பௌதீக இருப்பும் சமப்படாது காணப்படுதல் இருப்பு முரண் பாடு ஆகும்.

## இருப்பு முரண்பாட்டிற்கான காரணங்கள்

- ***ஆவணங்கள் இல்லாது பொருள் திருப்பப் படுதல்***
- ***வேண்டுதலிலும் பார்க்க வேறுபட்ட அலகில் பொருள் அனுப்பப்படுதல்.***
- ***களஞ்சிய பேரேட்டில் தவறுகள் ஏற்பட்டிருத்தல்.***
- ***களஞ்சியப் பேரேட்டில் பழுதடைந்த/ அழிந்த/ ஆவியான பொருட்கள் பதிவுறாமல் காணப் படுதல்.***
- ***இருப்பு களவாடப்படிருத்தல்.***

## பொருளாதாரக் கட்டளைக் கணியம் / சிக்கன கட்டளை தொகை / மறுகட்டளையிடும் தொகை

**Economic Ordering quantity (EOQ)**

இருப்புப் பாதுகாப்புக் கிரயமும், கட்டளைக் கிரயமும் சேர்ந்த கிரயம் குறைவாகவுள்ள நிலையில் எத்தனை அலகைக் கொள்வனவு செய்ய முடியுமோ அவ்வெண்ணிக்கை சிக்கனக் கட்டளைத் தொகையாகும்.

இது பாதுகாப்புக் கிரயமும், கட்டளைக் கிரயமும் சமமாக உள்ள நிலையில் காணப்படும். இங்கு இருப்பு கட்டளைக்கிரயமும் பாதுகாப்புக் கிரயமும் ஒன்றுக்கொன்று எதிரானவை. அதாவது அதிக அலகைக் கொள்வனவு செய்யும் போது கட்டளைக் கிரயம் குறைவடையும். ஆனால் பாதுகாப்புக்கிரயம் அதிகரிக்கும். மாறாக குறைந்த அலகைக் கொள்வனவு செய்யும் போது பாது காப்புக்கிரயம் குறைவடையும் ஆனால் கட்டளைக் கிரயம் அதிகரிக்கும்.

## EOQ மதிப்பிடும் முறைகள்

சமன்பாட்டு முறை

அட்டவணை முறை

வரைபடமுறை

## சமன்பாட்டு முறை

வருடக்கேள்வு, கட்டளைக்கிரயம், பாது காப்புக் கிரயம் போன்றவற்றை ஒரு சமன்பாட்டில் இடுவதன் மூலம் சிக்கன கட்டளைத் தொகை கணிப்பிடுவது சமன்பாட்டு முறை ஆகும்.

$$EOQ = \sqrt{\frac{2\ DCO}{Cc}}$$

EOQ = Eonomic ordering Quantity
சிக்கனக் கட்டளைத் தொகை

D = Demand Perannum
வருடக்கேள்வி

CO = Ordering Cost Per order
ஒரு கட்டளைக்கான கட்டளை கிரயம்

Cc = Carrying Cost Per item Per annum
ஓர் அலகு பொருளை ஓர் வருடம் பாதுகாக்க ஏற்படும் கிரயம்.

**இருப்பு பாதுகாப்பு**

**கிரயம் = சராசரி இருப்பு x பாதுகாப்பு கிரயம்**

$$= \frac{Q}{2} xCc$$

**கட்டளைக்**

$$\text{கிரயம்} = \frac{\text{கட்டளைகளின்}}{\text{எண்ணிக்கை}} \times \frac{\text{ஒரு கட்டளைக்கான}}{\text{பாதுகாப்புக் கிரயம்}}$$

$$= \frac{\text{வருடக்கேள்வி}}{\text{கட்டளைத்தொகை}} \times \text{ஒருகட்டளைக்கிரயம்}$$

$$\frac{Q}{2} x\ Cc = \frac{D}{Q} x\ Co$$

$$Q^2\ x\ Cc = 2D\ x\ Co$$

$$Q^2 = \frac{2D\ x\ Co}{Cc}$$

$$EOQ = \sqrt{\frac{2DCo}{Cc}}$$

## அட்டவணை முறை

மொத்தக்கிரயம், பாதுகாப்புக்கிரயம், கட்டளைக்கிரயங்களை ஒரு அட்டவணையில் குறிப்பதன் மூலம் சிக்கனக் கட்டளைத்தொகை கணிப்பிடுவது அட்டவணை முறையாகும்.

## வரைபடமுறை

மொத்தக்கிரயம், பாதுகாப்புக்கிரயம், கட்டளைக்கிரயங்களை ஒரு வரைபடத்தில் குறிப்பதன் மூலம் சிக்கனக் கட்டளைத் தொகை கணிப்பிடுவது வரைபடமுறையாகும்.

**உசாத்துணை**

Fundamentals of Managment Accounting - D.Sam

# வணிகத்திட்டம்

மேரி சுலக்சி.சா
*A/L Com 2017*

எந்தவொரு வணிகத்திற்கும் காணப்பட வேண்டிய முக்கிய அம்சம் வணிகத்திட்டம் ஆகும். ஏனெனில் திட்டம் என்ற ஒன்று இல்லையேல் நாம் எதனையும் உச்ச விளைதிறனுடன் சாதிக்க முடியாது.

வணிகத்திட்டமொன்றின் முதலாம் படி நிலையாக நாம் வணிக எண்ணம் /வணிக கருத்து என்னும் பதத்தை பயன்படுத்த முடியும் ஏனெனில் நாம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமானால் அது தொடர்பான எண்ணம் எம் மனதில் தோன்ற வேண்டும். அதன்படி வணிக எண்ணம் என்பது "ஒரு தனிநபர் / அமைப்பு ஒன்றின் தேவையையும் விருப்பத்தையும் நிறைவேற்றுவது தொடர்பாக முயற்சியாளனுள் உருவாகின்ற மனநிலை ஆகும்.

தனியனே எண்ணம் என்ற ஒன்று மட்டும் இருந்தால் போதாது. வணிக எண்ணம் தொடர்பான தீர்மானம் எடுக்க வேண்டும். இதற்கு நாம் 02 வழிமுறைகளை பயன்படுத்த முடியும்

### 01 . பேரினப் பகுப்பாய்வு

வணிக கருத்துக்கள் சகலவற்றிலும் பொருத்தமான வணிக கருத்தினை இனங்காண்பதற்கு சகல வணிக கருத்தையும் மதீப்பீட்டிற்கு உட்படுத்தல் இதுவாகும்.

இது புறக்காரணி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்

### 02. சிற்றினப் பகுப்பாய்வு

பேரின பகுப்பாய்வு மூலம் இனங் காணப்பட்ட வணிக கருத்துக்களில் முயற்சியாளருக்கு மிக பொருத்தமான கருத்தை தெரிவு செய்வதற்காக அந்த வணிக கருத்துக்களை சிற்றின பகுப்பாய்வுக்கு உட்படுத்தல் இதுவாகும்.

இது அகச்சூழல் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

வணிகத்திட்டம் ஒன்றை தயாரிக்கும் போது நாம் பல்வேறு பகுதிகள் தொடர்பாக எமது கவனத்தை செலுத்த வேண்டும். அவையாவன.

### 01. நிறைவேற்று சுருக்கம்

வணிகத்திட்டம் ஒன்றில் உள்ளடக்கிய அடிப்படை விடயங்களை பொழிப்பாக்கி காட்டும் பகுதியாகும். இதன் அடிப்படை நோக்கம் "வெளியக பிரிவினர் வணிகம் தொடர்பாக மேலதிக விடங்களை தேடியறிந்து கொள்வதற்கு தூண்டுவதாகும்.

### 02. வணிக விபரணம்

இதில் வணிகத்தின் இலக்கு, தன்மை, உரிமையாளர் பற்றிய விபரம், நிறுவன கட்டமைப்பு ஆகியவற்றை எடுத்து காட்டும் பகுதி ஆகும். இதில் உள்ளடங்குபவை "நிறுவன பெயர், முகவரி, குறிக்கோள், நோக்கம், தோற்றுவிப்பாளர் நிறுவன கட்டமைப்பு முறை, பணிப்பாளர் சபை, அமைப்பு முறை என்பவற்றை கூற முடியும்.

## 03. சந்தைப்படுத்தல் திட்டம்

சந்தைப்படுத்தல், தந்திரரோபாயம், சந்தை விநியோகம், விற்பனை போன்றவற்றை உள்ள டக்கிய பகுதி இதுவாகும். இதனுள் உள்ளடங்கும் பிரிவுகளாக :

- ❖ *தொழிற்சாலை சந்தை பகுப்பாய்வு*
- ❖ *இலக்கு சந்தை*
- ❖ *போட்டி நிலமைகளின் பகுப்பாய்வு*
- ❖ *திட்டமிடப்பட்ட விற்பனை*
- ❖ *விற்பனை எதிர்வு கூறல்*
- ❖ *சந்தைப்படுத்தல் செலவு என்பவற்றை கூற முடியும்.*

## 04. செயற்பாட்டு திட்டம்

உற்பத்தி நடைமுறை, உற்பத்திக்கான இயந்திரம், தேவையான உற்பத்தி மட்ட தொழிற் சாலையை நிறுவுதல், உற்பத்தியின் போது பின்பற்றப்படுகின்ற தேசிய, சர்வதேச நியமங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பகுதி ஆகும். இதில் உள்ளடங்குபவை

- ❖ *உற்பத்தி திட்டம்*
- ❖ *இயந்திர உபகரண தேவை*
- ❖ *மூலப் பொருள் தேவை*
- ❖ *ஊழியர் தேவை*
- ❖ *உற்பத்தி பொது மேந்தலை கிரயம்*
- ❖ *மொத்த உற்பத்தி கிரயம் என்பன வாகும்.*

## 05. மனித வள திட்டமிடல்

மனித வள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தெரிவு, பயிற்சி போன்றவற்றை அடிப்படையாக கொண்ட பகுதி ஆகும். இதில் உள்ளடங்கும் தகவல்களாக

- ❖ *அமைப்பு முறையும் அமைப்பு வரைபடமும்*
- ❖ *பதவிகளும் பொறுப்புக்களும்*
- ❖ *மனித வளங்களுக்கான வருடாந்த செலவு*

என்பவற்றை குறிப்பிட முடியும்.

## 06. நிதித்திட்டம்

நிதிமூலம், காசுபாய்ச்சல் கூற்று நிதி நிலமைக்கூற்று மற்றும் வணிகம் ஒன்றில் உள்ளடக்கப்படும் சகல மதிப்பிடப்பட்ட நிதித் தகவல்களையும் உள்ளடக்கிய பகுதி ஆகும்.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு தயாரிக்கும் போதே வணிகத்திட்டம் முழுமை அடைகிறது.

வணிகத்திட்டம் ஒரு வணிகத்தின் மிக முக்கிய ஒரு விடயமாக காணப்படுகின்ற போதும் பல வணிகங்கள் வணிகத்திட்டத்தை தயாரிப்பது இல்லை.

வணிகமொன்றில் வணிகத்திட்டம் தயாரிக் கப்படும் சந்தர்ப்பங்கள் பல உள்ளன. அவற்றுள் சில

- ❖ *புதிய வணிகத்தை ஆரம்பிக்கும் போது*
- ❖ *வணிகம் கொள்வனவு செய்யும் போது*
- ❖ *வணிகம் நவீனமயப்படுத்தும் போது*
- ❖ *வணிகத்தை ஒன்றிணைப்பதற்கு என்பன வாகும்.*

இவ் வணிக திட்டம் தயாரிப்பதற்கென சில படிமுறை காணப்படுகின்றன.

- ❖ *வணிக எண்ணங்களை அமைத்தல்*
- ❖ *வணிக சந்தர்ப்பங்களை இனங்கானல்*
- ❖ *வணிகத்திட்டத்தை தயாரித்தல்.*

இவ்வாறான வணிகத்திட்டம் ஒன்றை தயாரிப்பதன் மூலம் வணிகர்கள் பல்வேறு நன்மைகளை அடைந்து கொள்ளமுடியும். அவற்றில்

1. *வணிக கருமங்களை இலகுவாக கொண்டு நடாத்த முடியும்.*
2. *வணிகம் தொடர்பாக அக்கறையுடைய தரப்பினருக்கு அது தொடர்பான சிறந்த தெளிவொன்றைப் பெற்று கொடுக்க முடியும்.*
3. *வணிகத்திற்கு தேவையான நிதி வசதி களை பெற்று கொள்ளமுடியும்.*
4. *முகாமை நடவடிக்கைகளுக்கு வசதி அளிக்க முடியும்.*

5. ***மிகச்சிறந்த தீர்மானத்தை மேற் கொள்ள முடியும்.***

6. ***ஊழியர், முகாமையாளர்களை ஊக்கப் படுத்த முடியும் என்பன பிரதானமானவை யாகும்.***

எனவே நாம் வணிகத் திட்டம் ஒன்றை தயாரிப்பது வணிகம் ஒன்றின் தூர நோக்குடைய வெற்றிக்கு அடித்தளமாக அமைகின்றது. மனித வாழ்க்கையோடு அன்றாடம் வணிகமானது பின்னிப்பிணைந்து பிரிக்க முடியாத பிணைப் பொன்றாக காணப்படுகின்றது. எனவே எமது வாழ்க்கையை திட்டமிட்டு எமது இலக்குகளை அடைந்து கொள்வது போல வணிகத்தையும் திட்டமிட்டு வணிகத்திட்டமொான்றின் ஊடாக எமது வணிக நடவடிக்கையை மேற்கொள்ளுவோ மாயின் குறித்த காலத்திலேயே எமது வணி கத்தின் நோக்கையும், இலக்கையும் எம்மால் அடைந்து கொள்ள முடியும்.

**உசாத்துணைகள்**

- அறிவுத் தேடல்
- ஆசிரியர் கைநூல்

*உறுதியாக இருந்தால் சகாராப் பாலைவனத்திலும் சந்தனம் பயிரிடலாம்.*

# வணிகங்களுக்கான சமூக பொறுப்புக்களும் வணிக விழுமியங்களும்
# (Social Responsibility of Business and ethics)

**மேரி டானியா.அ**
*A/L Com 2017*

வணிகமானது வணிக தீர்மானங்களை மேற்கொள்கின்ற போது அக்கறை செலுத்தும் தரப்பினருடைய குறிக்கோள்களை கருத்தில் கொண்டு அல்லது வணிகமானது உடமையாளர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர், சமூகம் ஆகியோருக்கு தீங்கு ஏற்படாத வகையில் செயற்படும் முறை வணிகங்களின் சமூக பொறுப்பு எனப்படும்.

இவ்வாறு மேலும் சில தேர்ந்தெடுத்த வரைவிலக்கணங்களையும் சமூக பொறுப்பு என்ற எண்ணக்கருவுக்கு சூட்டலாம்.

☞ World business council for sustainable development

முழுச்சமூகம், பிரதேச சமூகம், ஊழியர், ஊழியர் குடும்பத்தின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யவும் வணிக ஒழுக்கங்களும் தொடர்ந்து செயற்படல் வணிக பொறுப் பாகும்.

☞ Miloton Fridman


வணிகங்களுக்கு ஒரேயொரு சமூகப் பொறுப்பு மட்டுமே உள்ளது. ஏமாற்றுதல், மோசடி செய்தல், சமூக விரோத செயல்களில் ஈடுபடுதலின்றி திறந்த போட்டி சந்தையின் விதிக்கமைவாக செயற்பட்டு இலாபத்தை அதிகரித்து கொள்ளும் முறையில் வளங்களை பயன்படுத்தி கருமங்களில் ஈடுபடுதல் வணிகங்களின் சமூக பொறுப்பாகும்.

### சமூக பொறுப்பின் பரிணாம வளர்ச்சி கட்டம்

பொருள் சார்ந்த பரிணாமம் → பரந்த பரிணாமம் → நவீன பரிணாமம்

சமூக பொறுப்பானது 04 வகையாக வகைப்படுத்தப்படுகின்றது. அவையாவன

1. ஊழியர் தொடர்பான சமூகப் பொறுப்பு
2. வாடிக்கையாளர் தொடர்பான சமூகப் பொறுப்பு
3. சமூகம் தொடர்பான சமூகப்பொறுப்பு
4. உடமையாளர் தொடர்பான சமூகப் பொறுப்பு



## ☞ சமூக பொறுப்பு தொடர்பான சர்வதேச நியம தரங்கள்

- ⇒ AA1000 - கணக்களி தன்மை
- ⇒ SA 5000 - சமூக கணக்களி தன்மை தரம்
- ⇒ ISO 8000 - தொழிலாளர் OR ஊழியர் பாதுகாப்பு முகாமைத்துவ தரம்
- ⇒ ISO 14001 - சூழல் முகாமைத்துவம்
- ⇒ FISE 04 - Good Index (நல்ல தரம்)

| |
|---|
| சமூக பாதுகாப்பிற்காக அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ள வரியின் பெயர் "சமூக பாதுகாப்பு தீர்வை" |

## இவ்வாறாக வணிக விழுமியம் என்ற எண்ணக்கருவை நோக்கும் பொழுது

"வணிக விழுமியம் என்பது, வணிகங்கள் தம்முடன் சேவையாற்றும் சகல தரப்பினர்களுக்கும் நல்லது இடம்பெறக் கூடிய வகையில் நல்லது, தீயது தொடர்பான அவதானத்துடன் செயற்படல் வேண்டும் என்பதாகும்."

இவ் வணிக விழுமியம் தொடர்பான 3R எண்ணக்கருக்களாக,

1. Respect - மதிப்பளித்தல்
2. Responsibility - பொறுப்பு கூறல்
3. Result - விளைவு

என்பவற்றை குறிப்பிடலாம்.

வணிகங்களால் பின்பற்றப்படும் வணிக விழுமியங்களின் வகைகளாக,

- ❖ *உற்பத்தி துறை சார்ந்த ஒழுக்க நெறி*
- ❖ *சந்தைப்படுத்தல் சார்ந்த ஒழுக்கநெறி*
- ❖ *கணக்கீடு நிதி சார்ந்த ஒழுக்கநெறி*
- ❖ *மனிதவளம் சார்ந்த ஒழுக்க நெறி*
- ❖ *விவேக சொத்து சார்ந்த ஒழுக்கநெறி*

மேலும் தற்கால வணிகர்கள் வணிக ஒழுக்க நெறி தொடர்பாக ஒழுக்க கோவையை பிரசுரித்து அதனை தனது உரிமையாளர், முகாமையாளர், ஊழியர் பின்பற்ற வழிகாட்டல் வழங்கி தயாரிக்கப் படும் கூற்று வணிக ஒழுக்க கோவை எனப்படும்.

வணிக ஒழுக்க கோவையை தயாரிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.

1. *வணிகம்*
2. *வாடிக்கையாளர்*
3. *ஊழியர்*
4. *முகாமையாளர்*
5. *சமூக கலாச்சாரம்*
6. *அமைப்பு கலாச்சாரம்*
7. *நடைமுறை சாத்தியம்*
8. *போட்டியாளர்*

மேற்கூறப்பட்ட விடயங்களின் அடிப்படை யில் சமூக பொறுப்புக்களை பூர்த்தி செய்வதன் மூலமாக வணிகம் பெறக்கூடிய நன்மைகள்

1. *ஊழியர்களை கவரலாம்*
2. *நன்மதிப்பு உயரும்*
3. *இலாபத்தை உயர்வடைய செய்யலாம்*
4. *முதலீட்டாளர்களை கவரலாம்*

இவ்வாறாக வணிகங்கள் தமது வணிக செயற்பாடுகள் தொடர்பிலும் அதனால் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பிலும் காணப்படு கின்ற வணிகங்களின் தனிப்பட்ட பொறுப்பு/ பங்களிப்பே சமூக பொறுப்பு ஆகும்.

உசாத்துணை நூல்கள்

- ♦ ஆசிரியர் வழிகாட்டி
- ♦ இணையம்

*முதலில் உன்னை அறிந்து மற்றவர்களை எடைபோடு*

# வங்கிகளின் தொழில் நுட்ப வளர்ச்சி

**பிரியா.அ**
*A/L Com 2017*

இன்றைய காலம் கணனி யுகம் எனக் கொள்ளக் கூடியவாறு மாற்றம் பெற்றுள்ளது. எல்லா வகையான நடவடிக்கைகளிலும் கணனிப் பயன்பாடு அறிமுகப்படுத்தப்பட்டு வருவதைக் காண முடிகிறது. வளர்ச்சி அடைந்த நாடுகள் கணனி இல்லாமல் எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ள முடியாது என்ற நிலமை வந்து விட்டது. இலங்கை ஒரு வளர்முக நாடென்பதால் கணனிப் பயன்பாட்டை எல்லாத் துறையிலும் புகுத்த முன்னேற்றமடைந்துள்ளது. இலங்கை யின் தற்போதைய அரசாங்கம் கடைப்பிடித்து வரும் தாராளப் பொருளாதார கொள்கையை கணனி மிகவேகமாக வங்கித் துறையில் அறிமுகப்படுத்த காரணமாக அமைந்துள்ளது. மேலும் தன்னியக்க அட்டைகளும் வலைப் பின்னல்களும் வங்கியின் தொழில் நுட்ப வளர்ச்சி யின் படிகளே ஆகும்.

### வங்கிகளும் கணனியும்

நமது நாடான இலங்கையில் பல வகையான வங்கிகளும் பல நாடுகளைச் சேர்ந்த வங்கிகளும் இயங்கி வருகின்றன. குறிப்பாக வர்த்தக வங்கி, சேமிப்பு வங்கி, அபிவிருத்தி வங்கி, கிராமிய வங்கி, வியாபாரிகள் வங்கி என பலவகைப்பட்ட வங்கிகள் உருவாக்கப்பட்டு இலங்கையில் பணச் சந்தை நடவடிக்கைகளையும் மூலதனச் சந்தை நடவடிக்கைகளையும் வளர்ச்சியடையச் செய்துள் ளன. இலங்கையில் 13 உள்நாட்டு வர்த்தக வங்கிகளும் 12 வெளிநாட்டு வர்த்தக வங்கிகளும் இயங்கி வருகின்றன. எமது நாட்டில் The Hongkong and shanghai வங்கியே கணனி பிரயோகத்தை முதலில் புகுத்திய வங்கியாக காணப்படுகின்றது.

கணனியானது ஒவ்வொரு நடவடிக்கை யிலும் தவறவிடக்கூடிய மனிதனை விட மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. கணனி தொழில் நுட்பத்தின் மூலம் வைப்புக்களை ஏற்றல், பணத்தை வழங்குதல் வாடிக்கையாளரிடம் கணக்கு புத்தகங்களில் பதிதல் போன்ற நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. இத்தகைய கணனி பயன்பாட்டால் காலதாமதமற்ற கொடுக்கல் வாங்கல்கள் வங்கிகளில் நடை பெறுவதுடன் வாடிக்கையாளர்களும் அதிக நேரத்தை செல வழிக்க வேண்டி இருப்பதில்லை.

### தன்னியக்க தீர்ப்பனவு நிலையம்

காசோலைத் தீர்க்கும் வேலைகளைத் துரிதப்படுத்தும் நோக்கிலே 1987ம் ஆண்டில் தன்னியக்க தீர்ப்பனவு நிலையம் இலங்கை மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்டது. MICR காசோலை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலமாகவே தன்னியக்க தீர்ப்பனவு நிலையத்தில் நடைபெற்று வரும் தீர்க்கும் வேலைகள் இன்று நாளுக்கு இரண்டு முறை நடைபெறுவதனை காணமுடிகிறது. கொழும்பிலுள்ள எல்லா வர்த்தக வங்கிகளின் கிளைகளும் கணனி மயப்படுத்தப்பட்டிருப்பத னால் கணனி பயன்பாடு வங்கி துறையில் பெருமளவிற்கு உள்ளது.

### பண அட்டை

தேவையான நேரங்களில் காசை தன்னி யக்க இயந்திரம் மூலம் பெற்றுக் கொள்ளப்படக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட பிளாஸ்ரிக் அட்டைகள் பண அட்டைகள் ஆகும். இலங்கை யில் இயங்கி வரும் பல்வேறு வர்த்தக வங்கி

களும் வித்தியாசமான பெயருடன் பண அட்டை களை கொண்டு வந்துள்ளன. அவையாவன.

**Bank ATM card**

| | |
|---|---|
| Commercal Bank | CAT card |
| Peoples Bank | PET Card |
| Sampath Bank | SET Card |
| National Saving Bank | NET Card |
| Seylan Bank | Seylan flection Card |
| Hatton National Bank | Cahline Card |
| Bank of ceylon | BOC Card |

ATM Card மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய வங்கிச் சேவைகளான பணத்தை மீளப்பெறல், பணத்தினை வைப்பில் இடல், மீதிகளை அறிதல், வங்கிக் கூற்றினை பெற்றுக் கொள்ளல், பணத் தினை வேறு கணக்கிற்கு மாற்றும் கொடுப்பனவு களை மேற்கொள்ளல் போன்றவையாகும்.

இவற்றின் மூலம் 24 Hours நேரமும் பணத்தை எடுத்துக் கொள்ள முடியும். அவ்வாறு முழு நாளும் பணம் எடுக்கும் வசதியை வங்கி நடவடிக்கையாளா் பெற்றுக் கொள்ள வசதி அளித்த தும் கணனிப் பயன்பாடே ஆகும்.

### வங்கிக் கிளைகளுக்கிடையிலான வலைப் பின்னல்

ஒரு வங்கியின் சகல கிளைகளையும் உள்ளடக்கி (Net work) கணனி மூலம் ஏற்படுத்தப் பட்ட வலைப்பின்னல் இதுவாகும்.

### வங்கிகளுக்கிடையிலான வலைப்பின்னல்

பல்வேறு வங்கிகளை ஒன்றிணைத்து கணனி மூலம் ஏற்படுத்தப்பட்ட வங்கி வலைப் பின்னல் இதுவாகும்.

விஞ்ஞான வளர்ச்சியின் விளையவாக வர்த்தகத்தின் பிரதான துணைச் சேவைகளில் ஒன்றான வங்கித்துறை சிறப்பாக செயற்பட கணனியின் அறிமுகம் வழிவகுத்துள்ளது. வெளிநாட்டு வர்த்தக வங்கிகளின் வருகை வங்கிகளுக்கிடையே போட்டியை ஏற்படுத்தி யுள்ளது. இந் நிலையில் ஒவ்வொரு வர்த்தக வங்கியும் தனது சேவையைச் சிறப்பாக ஆற்று வதற்கு கணனி பயன்பாட்டை அறிமுகப்படுத்தி யுள்ளது. எனவே எதிர்காலத்தில் இலங்கை யில் வங்கிகளில் பல்வேறு நடவடிக்கைகளுக்கு கணனி ஏராளமான சேவைகளை வழங்கும்.

**உசாத்துணை நூல்கள்**


- பணக் கொடுக்கல் வாங்கல் வங்கிகள் மற்றும் பொருளாதாரம்
- பிசமரசிறி 2011 பக்கம் 141 - 147


*ஒரு நொடி துணிந்தால் இறந்து விடலாம்*
*ஆனால் ஒவ்வொரு நொடியும் துணிந்தால் ஜெயித்து விடலாம்.*

# உலக வங்கி அறிமுகக் குறிப்பு

**லாவண்யா.சி**
*A/L Com 2017*

| | | |
|---|---|---|
| உருவாக்கப்பட்டது | – | July 1944 |
| வகை | – | பன்னாட்டு அமைப்பு |
| சட்டநிலை | – | ஒப்பந்தம் |
| நோக்கம் | – | கடன்கொடுத்தல் (பொருளியல் மேம்பாடு தீவிர வறுமை ஒழித்தல்) |
| அமைவிடம் | – | வாசிங்டன் சிட்டி |
| உறுப்பினர் | – | 188 நாடுகள் |
| தலைவர் | – | ஜிம் யோங்கிம் |
| மைய அமைப்பு | – | இயக்குனர் மேலாண்மை குழு |
| வலைத்தளம் | – | Word bank.org |

உலக வங்கி என்பது வளரும் நாடுகளின் முதலீட்டு திட்டங்களிற்கு கடன்கள் வழங்கும் ஓர் பன்னாட்டு நிதி நிறுவனமாகும். உலக வங்கியின் அலுவல் முறை நோக்கம் "வறுமையைக் குறைப்பது" ஆகும். இதன் அனைத்து முடிவு களும் வெளி முதலீடு, பன்னாட்டு வணிகம் ஆகிய வற்றை முன்னேற்றுவதிலும் முதலீட்டு நிதியை அமைத்து தருவதிலும் ஈடுபாடு கொண்டவையாக இருக்க வேண்டும்.

உலக வங்கியும் உலக வங்கி குழுமத்தின் பிற அங்கத்தவ நிறுவனங்களும் ஐக்கிய அமெரிக் காவின் தலைநகரான வாஷிங்டன் சிட்டியில் தங்கள் தலைமை அலுவலகத்தை அமைத் துள்ளன.

தனி நிறுவனமான அனைத்துலக நாணய நிதியத்தையும் சேர்த்து உலக வங்கி குழுமம், சில சமயங்களில் "பிரெட்டன் பூட்ஸ் நிறுவனங்கள்" என அழைக்கப்படும். உலக வங்கியின் தலைவர் எப்பொழுதும் ஓர் அமெரிக்கராக இருப்பதும் அனைத்துலக நாணய நிதியத்தின் தலைவர் ஐரோப்பியராக இருப்பதும் வழக்கம்.

உலக வங்கிக் குழுமம் ஐந்து பன்னாட்டு அமைப்புக்களை கொண்ட ஓர் குழுமம் ஆகும். இது உலகளவில் பெரிய நிதி நிறுவனம். இதன் முதன்மை நோக்கம் வறுமையான நாடுகளிற்கு கடன் அமைத்து கொடுப்பது ஆகும்.

இதில் அங்கமேற்கும் அமைப்புக்களாவன

- ❖ ***பன்னாட்டு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி(IBRD)***
- ❖ ***பன்னாட்டு மேம்பாட்டு சங்கம்(IDA)***
- ❖ ***பன்னாட்டு நிதிக் கழகம்(IFC)***
- ❖ ***பல தரப்பு முதலீட்டு பொறுப்புறுதி முகாமை (MIGA)***
- ❖ ***பன்னாட்டு முதலீட்டு பிணக்குகள் தீர்வு மையம்(ICSIQ)***

## பொறுப்புக்கள், பணிகள்

உலக வங்கி மனித வள மேம்பாடு (கல்வி, சுகாதாரம்) வேளாண்மை மற்றும் கிராமிய வளர்ச்சி (பாசனங்கள், சிற்றூர் சேவைகள்) சுற்றுச் சூழல் பாதுகாப்பு (மாசுக் கட்டுப்பாட்டு அமைப்புக்களை நிறுவுதல்) கட்டமைப்பு (சாலைகள், நகர்ப்புற புத்துயிராக்கம், மின்துறை) அரசாண்மை (ஊழல் எதிர்ப்பு, சட்டபூர்வ அமைப்புக்கள் மேம்படுத்தல்) போன்றவற்றில் வளரும் நாடுகளிற்கு உதவி புரியுமாறு குவிந்த செயற்பாடுகளை கொண்டுள்ளது.

இவற்றிற்காக உலக வங்கி உறுப்பினர் நாடுகளிற்கு முன்னுரிமை வட்டியில் கடன் வழங்குகின்றது. மிக வறிய நாடுகளிற்கு உதவி மானியங்கள் வழங்குகின்றன.

## தகவல் பெறும் உரிமை

முன்பை விட அதிக தகவல்களை பொது மக்கள் பெறும் படி சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. தயாரிக்கப்படவுள்ள திட்டங்கள், செயற்பாட்டிலுள்ள திட்டங்கள், கூட்டங்கள், செயற்பாடுகள் குறித்த தகவல்களை கேட்டுப் பெறலாம். சில சந்தர்ப்பங்களில் நிதி தொடர்பான தகவல்கள் பொதுமக்களிற்கு அறிவிக்கப்படலாம். விலக்கப்பட்ட சிலவற்றை தவிர பிற அனைத்து தகவல்களையும் அறிந்து கொள்ளலாம்.

The World Bank

**தகவல்**

- Wikipedia.com
- The World Bank Legal Review

*சொற்களின் வலிமை அதை உச்சரிப்பதில் மட்டுமல்ல*
*சில இடங்களில் அதை உச்சரிக்காமல் இருப்பதில்தான் இருக்கிறது.*

# Online Banking And Tele Banking
# வலையமைப்பினூடாக வங்கிச் சேவையும், தொலை வங்கிச் சேவையும்

சௌமியா.லூ
*A/L Com 2017*

இன்றைய நவீன உலகில் வாழ்வியலின் ஒவ்வொரு கட்டத்திலும் கணனியின் வலைப் பின்னல் ஊடான தொடர்பாடல் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. Word Wide Web இன் தொடர் பாடலில் நாம் இணைந்திருப்பின் எண்ணற்ற பொருட்கள், சேவைகள், பொழுதுபோக்கு தொடர் பான எமது செயற்பாடுகள் யாவும் விரல் நுனி களுக்கு மாற்றம் கண்டுள்ளதாக அமைந்து விடும். வணிக சூழலில் வங்கிசேவை, பணப் பரிமாற்றம் வேலைவாய்ப்பு போன்ற சேவைகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

**வலையமைப்பு வங்கிச்சேவையின் நன்மைகள்.**

1) *பொதுவாக பாதுகாப்பானது.*
2) *24 மணிநேர சேவையை பெறலாம்.*
3) *வங்கி செயற்பாடுகளற்று மூடப்பட்ட போதும் பணப் பரிவர்த்தனை செய்யலாம்.*
4) *வேலையாட்கள், அங்கவீனமானவர்கள், வங்கி செல்ல முடியாதவர்கள், சுகவீன மானவர்கள் மிகவும் உன்னதமான சேவையை பெறலாம்.*
5) *எந்த இடத்திலிருந்தும் சேவையை பெறலாம்.*
6) *மிக விரைவாக நேர விரயமின்றி சேவை களைப் பெற்றுக் கொள்ள முடிதல்.*
7) *பலவிதமான சேவைகளை இச் சேவையி னூடாக பெற்றுக் கொள்ள முடிதல்.*

உ+ம் : கடன்பெறல், முதலீட்டு வாய்ப்புக்களை முன்னறிதல், வட்டி வீதங்கள், அவற்றிலான பல மாற்றங்களை முன்னரே பெற்றுக் கொள்ள முடிதல்.

**வலையமைப்பு வங்கி சேவையின் தீமைகள்.**

1) *எப்போதும் பாதுகாப்பானது அன்று. மோசடிகள், திருட்டுக்கள், ஏற்பட வாய்ப் புண்டு, ஆள்அடையாள தகவல்கள் களவாடப் பட்டால் அவற்றை மீளமைப்பு திருத்தம் செய்ய அதிக நாட்களும், அதிக செலவும் ஏற்படும்.*
2) *சேமிப்புக்களை இழக்க நேரிடும். அதாவது வங்கியின் நிதி நிலைமையினை FDIC காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். இல்லை யேல் வங்கி முறிவடையும் சந்தர்ப்பத்தில் சேமிப்புக்களை இழக்க நேரிடல்.*
3) *நேரடி வங்கிச் சேவையில் இடம்பெறும் வாடிக்கையாளர் சேவை மனித நேயத் தொடர்பில் (Face to Face) நேருக்கு நேர் உரையாடல் மேற்கொள்ள முடியாமை.*
4) *எல்லா வலையமைப்பினூடாகவும் வங்கி சேவையை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியாது.*
5) *செயற்பாடுகளுக்கான ஆதாரங்கள் உறுதிப் படுத்தப்படாமை.*

## Tele Banking System
### தொலை வங்கிச் சேவை

தொலை வங்கிச்சேவை என்பது வாடிக்கை யாளர் ஒருவர் வங்கிக்கு செல்லாமலேயே கைத்தொலைபேசி மூலம் வரையறுக்கப்பட்ட அளவு வங்கிச் சேவையை பெறக் கூடிய ஒரு முறையாகும். இச்சேவையை நாம் பயன்படுத்தி கொள்வதற்கு Smart Phone. Tablet போன்ற கைத் தொலை சாதனங்களை பயன்படுத்தி கொள்ள லாம்.

**தொலை வங்கிச் சேவையை பெற்றுக் கொள்ளும் முறைமை**

1) நாம் சேவையை பெற்றுக் கொள்ளவிருக்கும் வங்கியில் முதலில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

2) பதிவு செய்து கொண்டதும் வங்கியினால் வாடிக்கையாளர் இலக்கம் (Customer no) இரகசிய இலக்கம் (PassWord) என்பன வழங்கப்படும். இரகசிய இலக்கம் ஊடாக வாடிக்கையாளர்களை சரியாக இனங்கண்டு கொள்வதற்காக வேறுபட்ட பெயர்களில் வழங்கப்படும்.

3) நாம் சேவையை பெற்றுக் கொள்ள வங்கிக்கு அழைப்பை ஏற்படுத்திய பின் வாடிக்கை யாளர் இலக்கம், இரகசிய இலக்கம் என்ப வற்றை பதிவு செய்ய வேண்டும். பதிவினை மேற் கொண்டதும் பெரும்பாலான வங்கி களில் தன்னியக்கமான முறையில் பதிலளிக் கப்படும். (Automated phone Answering system) அல்லது குரல் அடையாளம் மூலம் (Voice recognition copability) சேவை மேற்கொள்ளப்படும்.

4) பாதுகாப்பை உறுதிப்படுத்தி கொள்ளும் பொருட்டு இரகசிய இலக்கம், வாடிக்கை யாளர் இலக்கம் என்பவற்றை நம்பத்தகுந்த வகையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

**தொலை வங்கிச் சேவையின் நன்மைகள்**

1) வலைப்பின்னலூடான வசதி தேவையற்றது. ரெலிகொம் (Telecom) ஊடான தொலைத் தொடர்பு போதுமானது.

2) அதிகமான பணப்பரிமாற்ற செயற்பாடுகளை பாதுகாப்பாகவும் சௌகரியமாகவும் மேற் கொள்ளலாம்.
   - கணக்கின் நிலுவைகளை அறியலாம்.
   - காசோலை பற்றிய விபரங்களை அறியலாம்.
   - மாதாந்த கட்டணங்களை செலுத்தலாம். E.g. மின்சாரம், காப்புறுதி, வாடகை
   - முதலீடுகளை நிர்வகித்து கொள்ள முடிதல்.
   - ATM மூலமான வைப்புக்களை அறிந்து கொள்ள முடிதல்.

3) வலையமைப்பு ஊடான வங்கி சேவையை விடப் பாதுகாப்பானது.

**தொலை வங்கிச் சேவையின் குறைபாடுகள்**

1) பொய்யான குறுஞ்செய்தி (SMS) தகவல் களையும் பெற்றுக் கொள்ள முடிதல்.

2) முறைகேடுகளும் ஏற்பட வாய்ப்புண்டு.

3) PIN களவாடப்படும் சந்தர்ப்பமுண்டு அதாவது கைத்தொலைபேசி தொலைந்தால், PIN (Personal ID No) ஐ எடுத்து தகவல்கள் களவாடப்படல்.

4) நவீன Smart Phone, Tablet போன்ற சாதனங்களே இச்சேவையை பெற்றுக் கொள்ள மிகவும் பொருத்தமானவை. பழைய மாதிரிகளை ஒத்த கைத்தொலை பேசி களிலே இச்சேவையை பயன்படுத்த முடியாது.

இவ்வாறாக வலையமைப்பினூடாக வங்கி சேவையும் தொலை வங்கிச் சேவை யினதும் சேவைகளைப் பெற்று எமது அன்றாட வாழ்வை இலகுபடுத்துவோம்.

**உசாத்துணை**


- Htts://en.Wikipedia.org/Wiki/ Telephone Banking.
- Htts://en.Wikipedia.org/Wiki/ online Banking.
- WWW.Finweb.com/Banking credit/Online banking Advantage and Disadvantage.

# காப்புறுதிச் சேவையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

**ஜீ.சுவீஷனா**
*A/L Com 2017*

காப்புறுதி என்பது ஒரு இழப்பு அல்லது இடர் ஏற்படக்கூடிய சூழலிலிருந்து பாதுகாப்பதற்கான முன்னேற்பாட்டின் படி வழங்கப்படும் நிதியாகும் வியாபார துணை நிலைச்சேவையில் காப்புறுதி யானது முதன்மை வகிக்கின்றது.

காப்பீடு ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் எமக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் பல. பாதுகாப்பு அற்ற நிச்சயமற்ற எதிர்காலத்திற்கு நிலையான பாதுகாப்பு ஒன்றை காப்புறுதி ஏற்படுத்தும். தமக்கு மாத்திரமின்றி தமது மனைவி குழந்தைகளுக்கும் மற்றும் தங்கி வாழ்வோருக்கும் அதன் பலன்களைப் பெற முடியும் என்பது எந்தக் காப்பீட்டினதும் பொதுவான தன்மையாகவே உள்ளது.

காப்புறுதிச் சேவையினை, எண்ணற்ற நிறுவனங்கள் வழங்குகின்ற பொழுதும், முற்றிலும் அரசுடமையானதும், நீண்ட கால அனுபவத்தினையும், அதிகூடிய சொத்தையும், அனுபவம் மிக்க அறிவுசார் ஆளணியினரையும் அதிகூடிய கிளைகளையும், அனைத்து இலங்கையர்க்கும் காப்புறுதி என்ற தொனிப்பொருளையும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கொண்டிருப்பதனால் காப்புறுதிச் சேவையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பற்றி நோக்குவோமாக.

இலங்கைப் பாராளுமன்ற சட்ட இலக்கம் 02 இன் மூலம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனம் ஆனது 1961 இல் தேசியமயப்படுத்தப் பட்டது. 1993.02.03 ல் இது பொதுக்கம்பனியாக மாற்றப்பட்டது. இலங்கை முழுவதும். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது ஆயுள் பொது காப்புறுதிகளில் 60% ஆன பங்கினை வகிக் கின்றது. இதன் சொத்து மதிப்பு 100 பில்லியன் ஆகும். இது 18 பிராந்திய அலுவலகர்களின் ஊடாகவும், 126 கிளை அலுவலகங்கள் ஊடாக வும் தமது சேவையினை விஸ்தரித்து உள்ளது. தனது கிளை ஒன்றினை மாலை தீவிலும் நிறுவி யுள்ளது. 3000ற்கு மேற்பட்ட அலுவலக உத்தியோகத்தர்களையும் 8000 வெளியக உத்தியோகத்தர்களையும் தனது சேவையினை ஆற்றுவதற்கு என தன்னுடன் இணைத்துள்ளது. உயிர் இழப்பு மற்றும் சொத்து இழப்புக்கான இழப்பீட்டினை நிதி மூலத்தினால் ஈடுசெய்தல் இதன் பிரதான பணி ஆகும்.

### தூரநோக்கு (Vision)

மக்களின் சொத்து, சேமிப்பு மீதான அபாயத் திற்கு எதிராக காப்புறுதி ஊடாக ஒவ்வொரு தனி நபருக்குமான பாதுகாப்பை வழங்குதல்.

### பணி (Mission)

இலங்கை மக்கள் 2010 இல் இருந்து வருடம் முழுவதும் காப்புறுதி ஊடாக நன்மை பெறுவதற்கான சேவை வழங்குதல்.

### இலக்கு (Goals)

- *சந்தை பங்கினை அதிகரிப்பதற்கு.*
- *மக்களிடையேயான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.*
- *செயற்பாடு, வினைத்திறனை அதிகரித்தல்.*
- *வாடிக்கையாளருக்கான சேவை வழங் கலில் மேலதிக முன்னேற்றம்.*
- *செலவீனத்தைக் குறைத்தல்.*

**செயற்பாடுகள் (Objectives)**

- ❖ *மக்களிடையே நெருக்கமான கூட்டுறவு மற்றும் தொடர்புகளை அதிகரித்தல்.*
- ❖ *காப்புறுதி, கூட்டுத்தாபனத்தின் நடவடிக் கைக்கு விழிப்புணர்வினை அதிகரிப்பதால் நிறுவனத் தினை நிர்வகித்தல்.*
- ❖ *காப்புறுதித் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு, தகவலை விரிவுபடுத்தல்.*
- ❖ *புதிய காப்புறுதித்திட்டத்தினை உருவாக் குதல்.*
- ❖ *பின்தங்கிய பிரதேசத்திக்குக் காப்புறுதிச் சேவையை விரிவுபடுத்தல்.*
- ❖ *மக்களிடையே ஊக்குவிப்பினை ஏற்படுத்து வதன் வாயிலானத் தனிப்பட்ட நல்வாய்ப் புக்களை ஏற்படுத்தல்.*
- ❖ *ஒழுங்கான கலந்துரையாடல்களை ஒழுங்கு படுத்தல்.*

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சிறந்த பலன்களை வழங்கக் கூடிய காப்புறுதித் திட்டங் கள் பலவற்றை திட்டமிட்டுள்ளது. அந்த வகையில்

- ❖ *Srilanka insurance life ஆயுள் காப்புறுதித் திட்டத்தினை வாடிக்கையாளர்களின் பல சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் சிறுவர் காப்புறுதி, ஓய்வுதியத்திட்டம், முற்கொடுப் பனவுத் திட்டம் என பெற்றுக் கொள்ள முடியும்.*
- ❖ *Srilanka insurance வழங்கும் நிகரற்ற மோட்டர் வாகனக் காப்புறுதியே Motor Plus தற்போது 100% அரசாங்கத்தின் மேற் பார்வையில் சம்பூர்ணமாகவுள்ளதுடன் தொழில் நிபுணத்துவம் மிக்க அனுபவத் தாலும் காப்புறுதியாளர்களை மேலும் சிறப் பாக பாதுகாக்கிறது.*
- ❖ *இலங்கை வர்த்தக சமூகத்திற்கான பூரண மான வியாபாரக்காப்புறுதித் திட்டம் (Business club)*
- ❖ *வீட்டு உரிமையாளருக்காக வழங்கப்படும் வீட்டுக்காப்புறுதி திட்டம்.*
- ❖ *தனியார்துறை, அரசதுறை மற்றும் தனி நபருக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம்.*
- ❖ *விடுமுறை யாத்திரை சுற்றுலா மற்றும் வெளிநாட்டுக் கல்விக்காக விமானப் பயணத் தினை மேற்கொள்ளும் தனிநபர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு வழங்கப்படும் சுற்றுலாப் பயணக் காப்புறுதித் திட்டம்.*
- ❖ *மீன் பிடிப்படகுகள், பாரியசரக்கு கப்பல்கள் என்பவற்றை உள்ளடக்கிய கடலபாயக் காப்புறுதித்திட்டம்.*

காப்புறுதி ஆயுள் காப்புறுதி, அபாயக் காப்புறுதி என இரு வகையான சேவைகளை வழங்குகின்றது. ஆயுள் காப்புறுதி என்பது உயிருக்கு எதிராக அல்லது ஆயுளுக்கு எதிராக செய்யப்படும் காப்புறுதி ஆகும். இக்காப்புறுதி யினைச் செய்பவர்கள் உயிர் இழப்பு, உடல் அபாயங்களின் இழப்புக்களைப் பண ரீதியில் ஈடுசெய்து கொள்ள முடியும். காப்புறுதி ஒப்பந்தக் காலத்தினுள் இழப்பு ஏற்படின் ஒப்பந்தப் பெறுமதி யினைப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த காலத் தினுள் இழப்பு ஏற்படாது விடின் ஒப்பந்தக் கால முடிவில் ஒப்பந்தப் பெறுமதியுடன் இலாபப் பங்கினையும் பெற்றுக் கொள்ளலாம்.

பின்வருவோர் ஆயுள் காப்புறுதி செய்வ தற்கு உரிமை உடையவர்கள்.

- ❖ *18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது ஆயு ளுக்கு எதிராகவும்*
- ❖ *கணவன் மனைவிக்கு எதிராகவும்*
- ❖ *மனைவி கணவனக்கு எதிராகவும்*
- ❖ *தங்கி வாழ்வோர் தங்கி வாழ்வோருக்கு எதிராகவும்.*
- ❖ *முதலாளி தொழிலாளிக்கு*

மரணத்தோடு கடமை முடிந்து விட்ட தென்ற நிலையை மாற்றி அதன் பின்னரும் எதிர் காலத்தை பிரகாசமாக்க உயர்த்தும் காப்புறுதித் திட்டங்கள்.

- ❖ *காப்புறுதித் திட்டத்தில் இணைந்தபின் மரணம் சம்பவிக்கும் பட்சத்தில் காப்பீடு செய்த முழுத் தொகையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.*

- ***காப்புறுதித் திட்டத்தில் இணைந்து மூன்று மாதங்கள் கடந்த பின் உரியவர்களுக்கு இயலாமை ஏதும் ஏற்படும் போது முழுமை யாக அவரைக் காப்புறுதி நிறுவனம் கையேற்று தொடர்ந்து அதற்கான அனுகூலங்களை வழங்கும்.***
- ***காப்புறுதித் திட்டத்தில் இணைந்த பின் எதிர் பாராத விபத்துக்கள் சம்பவிக்கும் பட்சத்தில் மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் செலுத்த வேண்டிய மாதாந்த தொகையும், இழப்பீடும் வழங்கப்படும்.***
- ***வருட இறுதியில் அரச வரிகள் அறவிடப் படும் போது இக்காப்புறுதித் திட்டத்தை உள்ளடக்கி வரிவிலக்கினை பெற்றுக் கொள்ள முடியும்.***
- ***வீடு நிர்மாணித்தலின் போது இக் காப்புறுதித் திட்டத்தை அனைத்து வங்கிக ளிலும் பிணையாகப் பயன்படுத்தப்படும் அங்கிகாரம் உள்ளது.***
- ***இக்காப்புறுதித் திட்டம் முழுமையாகப் பயன் படுத்தப்படும் அங்கிகளும் உள்ளது.***
- ***இக்காப்புறுதித் திட்டம் முழுமையாக நிறை வேறும் காலத்தில் செலுத்திய தொகையை முழுமையாக பெறுவதோடு, அதற்கான இலாபப்பங்கும் வழங்கப்படும்.***

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தின் ஆயுள் காப்புறுதியினைத் தெரிவு செய்யும் போது ஏறத்தாழ 50 வகையான கணக்குகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் மக்களிடையே வெவ்வேறு வகையான தேவை களைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைந் துள்ளன. மிகப்பிரசித்தி பெற்ற ஆயுள் காப்புறுதி வகைகள் பின்வருமாறு.

### 01. யச இசுரு.

குடும்பத்தில் அனைவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியபடி கட்டுப்பணம் செலுத்தும் அதே வேளை வருமானம் ஒன்றையும் பெறக் கூடிய காப்புறுதித் திட்டம் இதுவாகும். 18 வயதிலிருந்து 60 வயது வரையான எவரும் இக்காப்புறுதித் திட்டத்தை மேற்கொள்ளலாம். ஒப்பந்த காலம் 10 ஆண்டுகள் தொடக்கம் 20 ஆண்டுகள் வரை ஆகும். தவணைப் பணத்தினை மாதம் தோறும் அல்லது காலாண்டு தோறும் அல்லது அரை ஆண்டு தோறும் அல்லது ஆண்டு தோறும் செலுத்திக் கொள்ளலாம். காப்புறுதி முதலீட்டாளர் கள் எதிர் பாராத விதமான மரணத்தை தழுவி னால் இடையிடையே வழங்கிய கொடுப்பனவு களையும் கருத்தில் கொள்ளாது முழுக் காப்புறுதித் தொகையும் அதற்குரிய இலாபப் பங்கும் பின்னு ருத்தாளிக்கு வழங்கப்படும். காப்புறுதியின் அனுகூலங்களைப் பெற காப்புறுதி ஒப்பந்த காலம் முடிவுறும் வரை பொறுத்திருக்கத் தேவை யில்லை. காப்புறுதி ஒப்பந்த காலம் முடிவுறுவ தற்கு முன்னர் காப்புறுதி ஒப்பந்த தொகையில் 50% வரை முன் அனுகூலம் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு முழுக்காப்புறுதி ஒப்பந்த தொகையில் ஒரு பகுதி ஒப்பந்தக்கால முடிவுக்கு முன்னர் வழங்கப்பட்டாலும் இலாபப்பங்கு முழுக் காப் புறுதித் தொகைக்கும் கணக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படுவதனால் முதிர்வின் போது பெருந் தொகையான இலாப பங்கினை பெற்றுக் கொள்ள முடியும்.

### 02. ஜனதிரி

மக்களின் வாழ்க்கையின் உயர் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, மக்களுக்கு அதி கூடிய அனு கூலங்களைத் தரும் காப்புறுதி திட்டம் இதுவாகும். 18 வயதிலிருந்து 60 வயது வரையான எவரும் இக்காப்புறுதித் திட்டத்தை மேற்கொள்ளலாம். ஒப்பந்த காலம் 10 ஆண்டுகள் தொடக்கம் 40 ஆண்டுகள் வரை ஆகும். தவணைப்பணத் தினை மாதம் தோறும்/ காலாண்டு தோறும்/ அரை ஆண்டு தோறும் செலுத்திக் கொள்ளலாம். காப்புறுதிக்காரர் இறக்க நேரிட்டால் அவரது துணைவருக்கும் பிள்ளைகளுக்கும் காப்புறுதித் தொகை மற்றும் இலாபப் பங்கும் இவ் வேளையே வழங்கப்படும். ஏதாவது காரணத்தால் தவணைக் கட்டணம் செலுத்தத்தாமதமானால் கட்டணத்தை செலுத்துவதற்கான நியமித்த திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை அதன் காப்புறுதி

நடவடிக்கைகள் செல்லு படியாகும். எனவே அக்கால தவணைக்குள் காப்புறுதி தாரருக்கு இறப்பு நேரிட்டால் அதற்குரிய பொறுப்புக்களையும் காப்புறுதி நிறுவனமே எற்றுக்கொள்ளும் தவணை முதிர்வு காலத்தில் முழுக் காப்புறுதித் தொகை 100% கிடைப்பதுடன் முழுக் காப்புறுதித் தொகைக்கும் முதலாவது வருடத்திலிருந்து ஒவ்வொரு வருடத்திற்கும் இலாபப்பங்கு தொகைக் கும் சேர்க்கப்படும் விவசாயிகள், மீனவர்கள் போன்ற நிரந்தர வருமானம் இல்லாதவர் களுக்காக இலங்கையில் மிகக் குறைந்த கட்டுப் பணம் உள்ள காப்புறுதித் திட்டம் இதுவாகும். மற்றக் காப்புறுதித் திட்டம் போல் விரும்பிய தொகைக்குக் காப்புறுதி செய்ய முடியாது. மானிய காப்புறுதிதிட்டம் என்ற படியால் ஆகக் கூடிய ஒப்பந்தத் தொகை 500, 000 ஆக உள்ளது.

## 03. மிளிமுத்து

குழந்தைகளுக்காக மேற்கொள்ளும் திட்டங் களை நடைமுறைப்படுத்த காப்புறுதித் தொகை யின் 140% மான பாரிய தொகையை வழங்கும் ஆயுள் காப்புறுதித் திட்டம் இதுவாகும். குழந்தை பிறந்து ஒரு மாதத்திலிருந்து 15 வயது வரையுள்ள பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்கள் இக் காப்புறுதித் திட்டத்தை மேற்கொள்ளலாம். ஒப்பந்தக் காலம் 5 ஆண்டுகள் தொடக்கம் 40 ஆண்டுகள் வரை (பிள்ளைகளின் வயதின் மீது) ஆகும். தவணைப்பணத்தினை மாதம் தோறும்/காலாண்டு தோறும்/ அரை ஆண்டு தோறும்/ ஆண்டு தோறும் செலுத்துக் கொள்ளலாம். ஒரே ஒரு கட்டுப்பணத்தின் மூலம் தாய், தந்தை இருவருக்கும் காப்பீடு கிடைக்கும். தாயின் அல்லது தந்தையின் மரணம் சம்பவித் தால் உடனடியாக அவ்வப்போது செலுத்திய கட்டுப்பணத்தைக் கவனத்தில் கொள்ளாது முழுக்காப்புறுதி தொகையை இரு மடங்காக்கி அப் பொழுதே வழங்கப்படும். அது மட்டுமல்ல காப்புறுதி ஒப்பந்தத் தொகையின் 140% மும் அதற்குரிய இலாபப்பங்கும் குறித்த காலத்தில் நான்கு கட்டங்களாக பிள்ளைகளுக்கு வழங்கப் படும். குழந்தைகளின் பாதுகாப்பிற்காக "ஆரோக்கியா வைத்தியசாலை காப்பீடு மற்றும் "ஜீவகபாரதூர மான" சுகவீனக் காப்பீடு குழந்தைக்கு ஒரு வயதாகும் போதிலிருந்து பெற்றுக் கொள்ளும் வாய்ப்புண்டு. குழந்தைகாப்பீட்டுக்கு மிகச்சிறிய தொகையே பெற்றோருக்கு செலவாகும்.

## 04. பிரகுண காப்புறுதி

காப்புறுதி செய்வோரின் ஒப்பந்தத் தொகையை இரு மடங்காக்கிப் பெற்றுக் கொள்வதற்கான ஆயுள் காப்புறுதித் திட்டம் இதுவாகும். 18 வயதிலிருந்து 60 வயது வரையான எவரும் இக்காப்புறுதித் திட்டத்தை மேற்கொள்ளலாம். ஒப்பந்தக் காலம் 10 ஆண்டுகள் தொடக்கம் 40 ஆண்டுகள் ஆகும். தவணைப்பணத்தினை மாதந் தோறும் /காலாண்டு தோறும்/ அரை ஆண்டு தோறும்/ ஆண்டு தோறும் செலுத்திக் கொள்ள லாம்.

தவணை தவணையாக செலுத்தும் கட்டுப் பணம் மாறாது போது அனுகூலமானது வருடந்தம் 5% ஆல் அதிகரித்துச் செல்லும். எதிர்பாராத தருணத்தில் காப்புறுதி செய்தவரின் மரணம் சம்பவித்தால் காப்புறுதித் தொகையுடன் அது வரை 5% ஆல் அதிகரித்த மேலதிகத் தொகையும் இரு மடங்காக பின்னுருத்தாளிக்கு கிடைக்கும். செலுத்தப்படும் கட்டுப்பணம் சிறு தொகை ஆயினும் காலமெல்லாம் போனஸ் கிடைப்பது முழுக் காப்புறுதித் தொகைக்கு ஆகும்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தின் வெவ்வேறுபட்ட ஆயுள் காப்புறுதியினைத் தொடர்ந்து பொதுக் காப்புறுதியில் விபத்துக் காப்புறுதி, கடலபாயக் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி, கள்ளர் பயக்காப்புறுதி, நம்பிக்கை பொறுப்புக் காப்புறுதி எனப்பலப் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமான சிலவற்றை நோக்குவோம்.

வாகனக் காப்பீட்டை நோக்குகையில் வாகனங்களுக்கு சொந்தமானவர்கள் மட்டுமே வாகனங்களுக்கு எதிராக காப்புறுதி செய்து

கொள்ள முடியும். மாறாக வாகனங்களை வாடகைக்கோ, குத்தகைக்கோ பெற்றுப் பயன் படுத்துபவர்கள் அவ் வாகனத்திற்கு எதிராகக் காப்புறுதி செய்து கொள்ள முடியாது.

வாகனங்கள் சம்பந்தமாக எட்டு வகையான காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டாலும் அவற்றில் பூரண காப்புறுதியும், மூன்றாம் நபர் காப்புறுதியுமே மிகப் பிரபல்யம் பெற்று விளங்கு கின்றது.

- ❖ *வாகனக் காப்பீடு ஒன்றை பெறும் போது 24 மணித்தியாலத்துக்குள் நாட்டின் எக்காலப் பகுதியிலும் மோட்டார் வாகனக் காப்பீடு ஒன்றை பெறும் வசதி.*
- ❖ *உங்களது புதிய வாகனத்திற்கு உற்பத்தி யாளர்களினால் வழங்கப்படும் உத்தரவாத மானது Srilanka insurance மோட்டார் பிளஸ் உடன் காப்புறுதி செய்யும் போது மேலும் நீடிக்கப்படும்.*
- ❖ *வாகனத்திற்காக வாடிக்கையாளர் வகைப் படுத்தல் மூலம் சிறந்த காப்புறுதி மற்றும் பல அனுகூலங்கள்.*
- ❖ *நாடளாவிய ரீதியிலான கிளை வலை யமைப்பு, அஞ்சல் நிலையங்கள் மற்றும் குறிப்பிட்ட வங்கிகளின் மூலமாகவும் காப்புறுதியைப் பெறும் வசதி.*

விபத்துக்குள்ளாகுதல் மற்றும் செயலிழந்த நிலை ஏற்படின்

- ❖ *விபத்துக்களை முறையிடுவதற்காக 24 மணிநேர சேவை.*
- ❖ *நாடளாவிய ரீதியில் தகுதி வாய்ந்த தொழில் நுட்பக்குழுவினரின் மூலம் அவ்விடத்தி லேயே வாகனத்தின் சேதத் தினை வேக மாக கணிப்பீடு செய்தல்.*
- ❖ *விபத்து நடந்த இடத்தில் அவசர முதலுத விச் சேவை.*
- ❖ *24 மணிநேர உதவிச் சேவை.*

நீங்கள் காப்பீடு ஒன்றைக் கொண்டுள்ள வராக அல்லது புதிதாகக் காப்பீடு ஒன்றைப் பெற்றுக் கொள்ள உள்ளவராகவோ இருப்பின் நீங்கள் கீழுள்ள விடயங்களை அறிந்திருக்க வேண்டும்.

1. *நிறுவனத்தின் நிதித்திரவத்தன்மை பற்றி அறியுங்கள். காப்புறுதி ஒன்றைத் தெரிவு செய்ய முன்னர் காப்புறுதி நிறுவனத்தின் நிதிதிரவத் தன்மை அல்லது பலம் பற்றி விசாரித்து அறிய வேண்டும்.*
2. *நிறுவன வசமுள்ள சொத்துக்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.*
3. *நிறுவனத்தின் ஆயுள் காப்புறுதி நிதியம் பற்றி அறிதல் வேண்டும்.*
4. *காப்புறுதி, நிறுவனம் முதலாவது ஆண்டு தொடக்கமே இலாபப்பங்கு, வழங்குமா என அறியவேண்டும்.*
5. *இலாபப்பங்கு கணிப்பிடப்படுவது எவ்வாறு என அறிய வேண்டும். காலத்துக்கு காலம் புதிய புதிய காப்புறுதி வகைகள் பல நிறுவனத்தால் அறிமுகப்படுவதோடு அதன் மூலம் கிடைக்கும் நன்மையும் அதிகரிக்கும். காப்புறுதி சேவையை எடுத்துக் கொண்டால் ஆயுள், மோட்டார் வாகனம், கடன், வீடுகள் கடைகள், என்ற அடிப்படையில் சகல மக்க ளும் காப்புறுதி சேவையை உள்வாங் குகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.*

**உசாத்துணை நூல்கள்**


- ♦ திரு.ந.மோகநேசன் (வணிகக்கல்வி)
- ♦ கலாநிதி லலித் பீ.சமரக்கோன்


*வெற்றி என்பது நிரந்தரமல்ல*
*தோல்வி என்பது முடிவல்ல*

# மனித வள முகாமைத்துவமும் அதன் பணிகளும்

**துஷாந்தினி.தே**
*A/L Com 2017*

நிறுவன அமைப்பொன்றில் காணப்படக் கூடிய வளங்களாக பௌதீக வளம், நிதி வளம், மனித வளம் என்பவற்றை குறிப்பிடுவர். இவ் வளங்களை கொண்டே நிறுவனங்கள் தமது இலக்குகளை அடைய முயல்கின்றனர். எனினும் நிதி வளமும், பௌதீக வளமும் பயன்படுத்த பெறுமானம் இழப்பிற்குட்படுபவையாகும். ஆனால் மனித வளம் பயன்படுத்த பெறுமான அதிகரிப் பிற்கு உட்படும் ஓர் வளமாகும். இத்தகைய மனித வளத்தை முன்னர் பின்வரும் பெயர்களால் அழைத்ததுண்டு.

*ஆளணி முகாமைத்துவம்*
*ஊழிய முகாமைத்துவம்*
*மனித சக்தி முகாமைத்துவம்*
*மக்கள் முகாமைத்துவம்*

என்றெல்லாம் அழைக்கப்பட்டதாயினும் இன்று மனித வளத்தின் பெறுமதி உணரப்பட்டு "மனித வள முகாமைத்துவம்" என அழைக்கப் படுவதுண்டு. இத்தகைய மனித வள முகாமைத் துவத்தினை பின்வருமாறு வரை விலக்கணப் படுத்தலாம்.

வணிக அமைப்பின் நோக்கத்தை இலகு வாகவும், வினைத்திறனாகவும் அடைய மனித வளத்தை பயன்படுத்தி மேற்கொள்ளும் அனைத்து செயற்பாடும் "மனித வள முகாமைத்துவமாகும்."

**மனித வள முகாமைத்துவத்தின் பிரதான நோக்கம்**

அமைப்பின் வெற்றிக்கு உச்ச பங்களிப்புடன் பொருத்தமானதரமான, திருப்தியான ஊழியப் படையை உருவாக்குவதும் அவர்களை தொடர்ந்து தக்க வைத்திருப்பதுமாகும்.

**மனித வளத்தின் சிறப்பு நோக்கம்**

1. *தொழிலுக்கு உரிய நேரத்தில் ஊழியரை சேர்த்தல்*
2. *ஊழிய கிரயத்தை கட்டுப்படுத்தல்*
3. *ஊழிய அபிவிருத்தி ஏற்படல்*
4. *ஊழிய வினைத்திறன் அபிவிருத்தி செய்தல்*
5. *ஊழியர் நலன்புரிச் சேவைகளை பூர்த்தி செய்தல்.*

**மனித வளத்தின் சிறப்பியல்புகள்**

- *உயிருள்ளதும் உணர்வுள்ளதுமான வளம்*
- *சிந்திக்கவும், துலங்கவும் ஆற்றலுள்ள வளம்*
- *புதிது புனையும் ஆற்றல் கொண்ட வளம்*
- *ஒழுங்கமைக்கும் ஆற்றலுள்ள வளம்*
- *எதிர் விளைவு காட்டக்கூடிய வளம்*

**மனித வள முகாமைத்துவம் முக்கியம் பெறக் காரணங்கள்**

1. *சரியான நேரத்தில் குறிப்பிட்ட வேலையை செய்து முடிக்க பொருத்தமான ஊழியரை தெரிவு செய்வதற்கு.*
2. *எதிர்காலத்தில் தேவைப்படும் ஊழியரை முன்கூட்டியே நிலை நிறுத்த.*
3. *திரட்டப்படும் ஊழியரை அபிவிருத்தி செய்ய*
4. *ஊழிய உற்பத்தி திறனை அபிவிருத்தி செய்ய.*
5. *ஊழியருக்கு ஏற்படும் கிரயங்களை நிர்வகிக்க.*

## மனித வள முகாமைத்துவம் முகம் கொடுக் கும் சவால்கள்

- ❖ *உலகமயமான or வேகமான சூழல் மாற்றம்*
- ❖ *நிறுவனங்களில் காணப்படும் போட்டி நிலை*
- ❖ *ஊழிய புரள்வு அதிகரித்தல்*
- ❖ *ஊழிய வினைத்திறன் குறைதல்*
- ❖ *தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடல்.*

## மனித வள முகாமைத்துவத்தின் பிரதான பணிகள்

**தொழில் உருவாக்கம்**

அமைப்பினதும், நிறுவனத்தினதும் திருப்தியை ஏற்படுத்தக் கூடிய வகையில் தொழில் தொடர்பான கருமாங்கள், கடமைகள், பொறுப்புக்களை தயாரித் தல் தொழில் உருவாக்கமாகும்.

**தொழில் பகுப்பாய்வு**

வேலை பற்றிய விபரங்களை அவ்வேலை வெற்றிகரமாக நிறைவேற்ற தேவைப்படும் ஊழிய ரிடம் காணப்பட வேண்டிய தகைமைகளை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஆய்வே இது வாகும். இதன் மூலம் வேலை விபரணம், வேலை நியமம் என்பன தயாரிக்கப்படும்.

**மனிதவளத்திட்டமிடல்**

நிறுவனமொன்று தனது நோக்கங்களையும் குறிக்கோள் என்பவற்றை அடைவதற்குரிய எதிர்கால ஊழிய கேள்வியினை தீர்மானித்தலும் அக் கேள்வியை பூர்த்தி செய்ய பொருத்தமான உபாயங்களை தீர்மானிப்பதாகும்.

**ஆட்சேர்ப்பு**

நிறுவன்ங்கள் தமது வேலைக்கு தகுதியான வர்களை தேடிக் கொள்ளும் நடவடிக்கை இது வாகும். இது அகமூலம், புறமூலம் முறைகளில் ஆட்சேர்க்கப்படுகிறது.

**தெரிவு செய்தல்**

ஆட்சேர்த்தல் செய்முறையினை தொடர்ந்து கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களிலிருந்து மிகப் பொருத்தமான விண்ணப்பதாரியை இனம் காணும் செயற்பாடாகும்.

**இணைத்துக் கொள்ளல்**

வெற்றிடமுள்ள தொழிலுக்கு தெரிவு செய்த ஊழியரை நியமிக்கும் செயற்பாடாகும். இதன் போது நிறுவனம் நியமக் கடிதத்தை விண்ணப்ப தாரிக்கு அனுப்பும் இதுவே இம்முறையாகும்.

**தொழில் அறிமுகம்**

நிறுவனத்தின் தூரநோக்கு, இலட்சிய நோக்கு, குறிக்கோள், சட்டம், மரபுகளை அறியச் செய்தல் இதுவாகும். இவ் அறிமுகம் 02 வழிகளில் இடம்பெறும்

1. *சாதாரண அறிமுகம்*
2. *விசேட அறிமுகம்*

**பயிற்சியும் அபிவிருத்தியும்**

இத்தகைய பயிற்சியை பின்வருமாறு குறிப் பிடுவர் "செயல்திறன் மதிப்பீட்டிற்கு பணியாளரின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேலோங்க செய்யும் நடைமுறை" பயிற்சியாகும்.

மாறாக அபிவிருத்தி என்பது "முகாமைத்துவ பணியாளரின் நிகழ்கால நிலைமையை விட எதிர்கால செயற்பாட்டை விருத்தி செய்ய எடுக்கும் நடவடிக்கை" அபிவிருத்தியாகும்.

**கொடுப்பனவு முகாமைத்துவம்**

சம்பள முறையை உருவாக்கலும் அதனை நடைமுறைப்படுத்தலும் பேணிச் செல்லும் நடவடிக்கையும் இதுவாகும். இதற்குள் சம்பளம், மேலதிக கொடுப்பனவு, ஓய்வுகால கொடுப்பனவு யாவும் உள்ளடங்கும்.

**செயல் திறன் மதிப்பீடு**

ஊழியர் தமது வேலையை வினைத் திறனாக நிறைவேற்றும் அளவை நிறுவனம் மதிப்பீடு செய்யும் கருமம் இதுவாகும்.

**ஊழிய அசைவு**

ஊழியர் வேலையில் சேர்த்து கொள்ளப்பட்ட முதல் இளைப்பாறும் வரை நிறுவனத்தில் ஏற்படும் மாற்றங்கள் இதுவாகும்.

**ஊழியர் நலன்புரிச் சேவைகள்**

ஊழியருக்கு கிடைக்கும் சம்பளம், ஊக்குவிப் புக்கு மேலதிகமாக கிடைக்கும் சகல வசதிகளும், சேவைகளும் இதுவாகும்.

**ஊழியர் தொழில் உறவு**

தொழில் கொள்வோர் ஊழியர் ஆகிய இருவருக்கிடையிலும் காணப்படும் சிறந்த or பொருத்தமற்ற உறவு இதுவாகும்.

வணிகத்தின் நோக்கை இலகுவாக அடைய மனித வள முகாமைத்துவ தொழிற்பாடு சிறப்பாக அமைதல் அவசியமாகும்.

**உசாத்துணைகள்**


- Human resource management (-Sharon Pande-)
- ஆசிரியர் கைநூல்


*தோல்வியின் அடையாளம் - தயக்கம்*
*வெற்றியின் அடையாளம்-துணிச்சல்*

# இலங்கையின் பங்குச்சந்தை
# (Stock Exchange of Srilanka)

**மேரி சோனியா.அ**
*A/L Com 2017*

பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளால் வெளியிடப்படும் சாதாரண பங்குகள், தொகுதிக் கடன் போன்ற பிணைப்பத்திரங்களின் கொள்வனவு மற்றும் விற்பனைகள் இடம்பெறும் சந்தை "பங்குச் சந்தை" எனப்படும்.

இங்கு பொதுக்கம்பனிகள் தமக்கு தேவையான மூலதனத்தை திரட்டிக் கொள்வதற்காக பங்குகளையும் தொகுதிக்கடன் பத்திரங்களையும் வெளியிடும் போது முதலீட்டாளர்கள் பங்குதரகர் நிறுவனங்களினூடாக அவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையின் பங்குச்சந்தை செயற்பாடுகளை பொறுப்பேற்று முகாமை செய்யும் அமைப்பாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை - Colombo stock Exchange (CSE) காணப்படுகின்றது. இது கொழும்பில் இலங்கை வங்கி தலைமைப் பணியகத்திற்கு அருகில் உள்ள உலக வர்த்தக மையத்தின் 4வது மாடியில் அமைந்துள்ளது. இது ஓர் பிணையில் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாகும். இதன் கிளைகள் யாழ்ப்பாணம், கண்டி, மாத்தறை, குருநாகல் ஆகிய மாவட்டங் களிலும் உள்ளது.

பட்டியல்படுத்தப்பட்ட மற்றும் பட்டியல் படுத்தப் படாத கம்பனிகளின் பங்குகள், முன்னுரிமைப் பங்கு, திறைசேரி முறி, திறைசேரி உண்டியல், அரச பிணைகள், நிதியங்கள் என்பவற்றின் ஆரம்ப வழங்கல், கொள்வனவு, விற்பனை பிரதானமாக இடம்பெறுகின்றது.

1985ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இப் பங்குச் சந்தையினது 15 பங்குதரகர் நிறுவனங் களின் பிரதிநிதிகளை கொண்டுள்ளது.

கொழும்பு பங்குச்சந்தை நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு மூன்று முறைமைகளை கையாளுகின்றது.

**மத்தியவைப்பு முறை - Central Depository System**
**தன்னியக்க வியாபார முறை - Automated Trading System**
**கடன் பத்திரங்கள் வர்த்தக முறை - Debt Securities Trading System**

கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஓர் வளர்ந்து வரும் சந்தையாக பொருளியலாளர்கள் கணிக்கின்றனர். 1979ம் ஆண்டில் இருந்து இலங்கையில் ஆளும் அரசுகளால் கடைப்பிடித்து வரும் திறந்த பொருளாதார கொள்கை, தனியார் மயமாக்கல், வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் தன்மை, வரி நடைமுறையின் கடின தன்மை குறைக்கப்பட்டமை என்பன அதன் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றன.

எனினும் நூறு வருடகால பாரம் பரியத்தை கொண்டுள்ள இப்பங்குசந்தை ஓர் திறமையற்ற சந்தையாகவும் நோக்கப்படுகின்றது. உலக சந்தையில் ஏற்படும் சரிவுகள், ஏற்றங்கள் எந்த வொரு பாதிப்பையும் ஏற்படுத்தாத தன்மை இதற்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது. இது தவிர கெடுபிடியான உள்நாட்டுப் போர், பட்டியல் படுத்தப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை குறை

தல், வட்டி வீதத்தில் ஏற்படும் தளர்ச்சி, பங்குச் சந்தை நடைமுறை பற்றிய மக்களின் அறிவின்மை, கொழும்பை மையப்படுத்திய தன்மை, சந்தையில் விடப்படாமல் குடும்பத்தினர்களுக்குள்ளே பங்கு கைக்கொள்ளப்பட்டிருப்பது என்பன வேறு காரணங்களாகும்.

## பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் போது முதலீட்டாளர்கள் கொண்டிருக்கும் நோக்கங்கள்

கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்யும் போது முதலீட்டாளர்கள் கொண்டிருக்கும் நோக்கங்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

முதலீட்டு நோக்கம்

ஊகவியாபார நோக்கம்

முதலீட்டு நோக்கம் என்பது தமது சேமிப்புக்களுக்கு பங்குலாபம் பெறக்கூடியவாறு கம்பனி பங்குகளில் முதலிடுவதான நோக்கம் ஆகும். இதன் படி இம் முதலீட்டாளர்கள் கம்பனிகளால் வழங்கப்படும் பங்குலாபங்களையே பிரதானமாக கருத்தில் கொண்டு முதலிடுபவர். இவர்கள் பொதுவாக பங்குகளை கைமாற்றம் செய்வதில்லை வருடா வருடம் கம்பனிகளால் பகிர்ந்தளிக்கப்படும் பங்கு லாபங்களையே பெற்றுக் கொண்டிருப்பர்.

ஊக வியாபார நோக்கம் என்பது பங்குகளில் எதிர்பார்க்கப்படும் விலை ஏற்றத்தை மட்டுமே நம்பி மூலதன இலாபமீட்டும் நோக்கத்தோடு அவற்றினை வாங்கிவிற்கும் நடவடிக்கையே ஆகும். இவ்வகை நோக்கத்தில் ஈடுபடும் பங்கு வர்த்தகர்கள் பங்குலாபங்களை எதிர்பார்த்து முதலிடுவதில்லை. பதிலாக தற்போதைய குறைந்த விலைக்கு பங்குகளை வாங்கி எதிர் காலத்தில் அதிகரித்த விலைக்கு விற்பதன் ஊடாக மூலதன இலாபம் பெறுவதனையே குறிக்கோளாகக் கொண்டு முதலிடுவர். எனவே இப் பங்கு வர்த்தகர்களது உரிமையாக பங்குகள் நீண்டகாலம் இருப்பதில்லை. அடிக்கடி அவற்றை கைமாற்றிக் கொண்டே இருப்பதனை காண முடியும்.

இத்தகைய ஊகவியாபாரத்தில் ஈடுபடும் பங்கு வர்த்தகர்கள் (Share Dealers) கொண்டிருக்கும் நடத்தைகள் விலங்குகளின் நடத்தைகளை ஒத்திருப்பதனால் அவர்களது ஊக வியாபாரம் பின்வருமாறு வகைப்படுத்தப் படும்.

காளைகள் சந்தை

கரடிகள் சந்தை

கலைமான்கள் சந்தை

காளைகள் சந்தை என்பது எதிர் காலத் தில் பங்குகளின் விலை ஏற்றத்தை எதிர்பார்க்கும் ஊக வணிகர்கள் இங்கு தொடர்புபடுகின்றனர். இவ்வித ஊக வணிகர்கள் எதிர்காலத்தில் விலை அதிகரிக்கும் என்ற ஊக நோக்கத்துடன் தற்போது நிலவும் விலைக்கு பங்குகளை வாங்குபவர் அல்லது பங்குகளை வாங்குவதாக ஒப்பந்தம் செய்வர். அவர் எதிர்பார்த்தவாறே பங்குகளின் விலை ஏற்றமடையின் முன்னர் செய்த ஒப்பந்தப் படி பங்குகளை வாங்கி அதிக விலைக்கு விற்று இலாபத் தினை ஈட்டுவர். காளை எப்போதும் தன் எதிரியை கொம்புகளால் மேலே தூக்கி எறிவது போல இவர்களுடைய நடவடிக்கையில் பங்குகளின் விலை ஏறிச் செல்லும் என்பர்.

கரடிகள் சந்தை என்பது எதிர் காலத்தில் பங்குகளின் விலை குறையும் என எதிர்பார்க்கும் ஊக நோக்குடன் தற்போது நிலவும் விலைக்கு பங்குகளை வழங்குபவர் அல்லது வழங்குவதாக ஒப்பந்தம் செய்வர். அவர் எதிர்பார்த்தவாறே பங்குகளின் விலை குறைவடையின் முன்னர் செய்த ஒப்பந்தப்படி பங்குகளை அதிக விலைக்கு விற்று இலாபத் தினை ஈட்டுவர். கரடி எப்போதும் மனிதர்களை கீழே இழுத்து தள்ளுவது போன்றே இவர்களுடைய நடவடிக்கையில் பங்குகளின் விலை வீழ்ச்சியடைந்து செல்லும் என்பர்.

கலைமான்கள் சந்தை என்பது, காளை கள், கரடிகள் ஆகிய இரு ஊக வியாபாரிகளும் 2ம் தர பங்குச்சந்தையுடன் தொடர்புபடுகையில், கலைமான்களோ 1ம் தர பங்குச்சந்தையுடன் தொடர்புடைய ஊக வியாபாரிகள் தொடர்புபடுகின்றனர். இதன்படி ஒரு கம்பனி புதிதாக பங்குகளை 1ம் தர

சந்தையில் வழங்கும் போது இப்பங்குகளுக்கு அதிகளவில் விண்ணப்பித்து ஒரு போலியான சந்தை யொன்றினை உருவாக்குகின்றனர். இதன்மூலம் பங்குகளுக்கு ஒரு கேள்வி நிலையை உருவாக்கி அவை கம்பனியால் பிரித்து ஒதுக்கப் படும் போது அவற்றை அதிகவிலைக்கு விற்று இலாபத்தை ஈட்டுவர். எனவே 1ம் தரச் சந்தையில் பங்கு களுக்கு விண்ணப்பித்து அவை கம்பனி களால் ஒதுக்கப் படும் போது உயர்ந்த விலைக்கு விற்பதன் மூலம் இலாபத்தை ஈட்டும் ஊக வியாபாரியே கலை மான்கள் ஆவர்.

**உசாத்துணை நூல்கள்**

- Gr.13 Commerce Teachers Guide
- Wikipidea.com

*பள்ளிக் கதவை திறக்காதவன்*
*சிறைச்சாலை கதவை மூடமாட்டான்*

# பங்குகள் - அறிமுகம்

டெவ்னியா.நெ
*A/L Com 2017*

கம்பனி மூலதனத்தின் சம அளவிலான பகுதி or அலகு பங்கு எனப்படும். பங்கு கம்பனி தொடர்பில் சட்டரீதியான உரிமையினை அதனைக் கொண்டுள்ளவர்களுக்கு வழங்குகின்றன. அவை கொண்டுள்ள உரிமைகள் மற்றும் சிறப்பியல்புகளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத் தலாம்.

*i. சாதாரண பங்குகள்*
*ii. முன்னுரிமை பங்குகள்*
*iii. பங்காணைப் பத்திரம்*
*iv. பங்குரிமைகள்*

### சாதாரண பங்குகள்

பொதுக்கம்பனி உரிமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பங்குகள் சாதாரண பங்குகளாகும். இவ்வகை பங்குகளை கொள்வனவு செய்வத னூடாக பங்குலாபத்தை பெற்றுக்கொள்ள முடிவதுடன் கம்பனிகளின் தீர்மானங்கள் நிறைவேற்றல் தொடர்பில் வாக்களிக்கும் உரிமையினையும் கொண்டிருப்பார்.

சாதாரண பங்கு மூலம் அதாவது பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் முதலீட்டாளர்கள் கம்பனியின் உரிமையாளராவதுடன் பொதுச்சபை கூட்டத்திலும் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இப் பங்குரிமையாளர்களுக்கு நிலை யான பங்குலாபம் கிடையாது. சாதாரண பங்குகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

***i. வாக்குரிமையுள்ள சாதாரணபங்கு***
***ii. வாக்குரிமையற்ற சாதாரண பங்கு (வழங்கிய பங்கில் 20% ஐ மட்டுமே வாக்கு ரிமை யற்ற பங்கை வழங்கலாம்.***

### முன்னுரிமை பங்குகள்

சாதாரண பங்குதாரர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட சிறப்பியல்புகளை உடையவர்கள் முன்னுரிமை பங்குதாரர்கள். இவர்கள் முன்னர் குறித்துரைக்கப்பட்ட பங்குலாபத்திற்கு உரித்துடையவர்கள். மேலும் கம்பனி கலைக்கப்படும் சூழ்நிலையில் சாதாரண பங்குதாரருடன் ஒப்பிடுகையில் முன்னுரிமை பங்குதாருக்கான தீர்ப்பனவு முன்னுரிமை அடிப்படையில் தீர்க்கப் படுவதனால் இத்தகைய பங்குகள் நட்ட அச்சம் குறைந்தளவில் காணப்படுகின்றன.

### பங்கு ஆணைப்பத்திரம்

குறித்த எதிர்காலத்தில் குறித்த கம்பனி யின் உரிமைத்துவத்தினை வழங்குகின்ற சட்ட ரீதியான ஆவணம் பங்காணைப் பத்திரமாகும்.

இவை குறித்த விலையில் எதிர்காலத்தில் பெறும் முகமாக நிகழ்காலத்தில் குறித்த விலையில் பருவகால வழங்கல்களுடன் இணைத்து வழங்கப் படுகின்றன.

### பங்குரிமைகள்

கம்பனிகள் மேலதிக முதல் நிதியினை திரட்டிக் கொள்ளும் நோக்கில் கம்பனியில் பங்குதாரர்களுக்கு அவர்கள் கொண்டுள்ள விகிதாசாரம் அடிப்படையில் அமைந்தால் ஒரு பங்குதாரர் 200 பங்குகளை கொண்டிருந்தால் அவர்கள் 100 பங்குகளை கழிவு விலையில் தனதாக்கி கொள்ளும் உரிமை உண்டு.

## முடிவுரை

அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை அபிவிருத்திக்கு முன்மாதிரியான நாடுகளில் முதன்மையானது. ஆகவே நாம் அனைவரும் பங்குகள் பற்றிய விளக்கங்களை கொண்டிருத்தல் அவசியம்.

இவ் விளக்க குறிப்பீட்டின் ஊடாக குறிப் பாக பங்குகள் தொடர்பான அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆகவே நாம் அனை வரும் இது பற்றிய போதிய விளக்கத்தினை கொண்டிருத்தல் அவசியமாகும்.

இதனுள் உரிமை மற்றும் சிறப்பியல்பின் அடிப்படையில் பங்குகள் வகைப்படுத்தப்பட்டு அவை பற்றிய சிறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளது. ஆகவே இதன் மூலம் சிறு ஆற்றலை பெற முடியும்.

**உசாத்துணைகள்**

- வணிகக்கல்வி - ஜகத்பண்டார நாயக்கா
- இலங்கையின் நிதிச்சந்தை - பேராசிரியர் லலித்சமரக்கோன்
- www.cse.com
- stock Market Guidance

### மத்திய வங்கியின் துணை நில் வைப்பு வீதம் (SDFR)

- பணச் சந்தையில் மிகையான திரவத் தன்மை உள்ள போது அதனை தனக்குள் உறிஞ்சும் முகமாக மத்திய வங்கி குறுங்காலப் பிணைகளை வணிக வங்கிகளுக்கு வழங்கி அங்கிருந்து மேலதிகமான நிதியை தனக்குள் எடுக்கும் போது வழங்குகின்ற வட்டி வீதத்தை துணை நில் வைப்பு என்பர்.

- இவ் வீதம் வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தையில் வட்டி வீதத்தின் கீழ் எல்லையைத் தீர்மானிக்கும்.

### மத்திய வங்கியின் துணைநில் கடன் வழங்கல் வீதம் (SLFR)

- பணச்சந்தையில் திரவப்பற்றாக்குறை உள்ள போது அதை நீக்கும் முகமாக மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு நிதியை பாய்ச்சும் போது அறவிடப்படுகின்ற வட்டி வீதத்தை துணை நில் கடன் வழங்கல் வீதம் என்பர்.

- இது வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தையின் வட்டி வீதத்தில் மேல் எல்லையைத் தீர்மானிக்கும்

# மத்திய வங்கியின் குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும்

**மிதுனா.இ**
*A/L Com 2017*

## அறிமுகம்

1949ம் ஆண்டின் 58ம் இலக்க நாணய விதிச்சட்டத்தின் படி நாணய ஆணையாளர் சபையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதனத்துடன் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டு 1950ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதியன்று தொழிற்படத் தொடங்கியது. சுதந்திர இலங்கையின் முதலாவது நிதியமைச்சரும், முதலாவது நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியுமான மறைந்த J.R ஜெயவர்த்தன அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டின் நிதியியல் முறைமையின் உச்ச நிறுவனமாக விளங்கும் மத்திய வங்கி நாணயக் கொள்கையை வடிவமைத்து அமுல்ப்படுத்தும் அதிகாரம் கொண்டதாகவும் விளங்குகின்றது. நாணய சபை பின்வரும் 05 உறுப்பினர்களை கொண்டுள்ளது.

1. ஆளுநர்
2. நிதி அமைச்சரின் செயலாளர்
3. 03 நிறைவேற்று அல்லா உறுப்பினர்

மாற்றமுற்றுச் செல்கின்ற பொருளாதார சூழலுக்கு ஏற்ப மத்திய வங்கியின் நோக்கமும், தொழிற்பாடுகளும் ஆரம்பம் தொடக்கம் விரிவடைந்து வந்திருக்கின்றது. இவ்வகையில் இக் கட்டுரை இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள் தொழிற்பாடுகள் பற்றி விளக்குகின்றது.

## இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்

2002ம் ஆண்டில் நாணய விதிச் சட்டம் திருத்தியமைக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி பின்வரும் குறிக்கோள்களை அடிப்படையாக கொண்டு இயங்கி வந்தது.

1. ***உள்நாட்டு நாணயப் பெறுமதியை உறுதியாக பேணுவது.***
2. ***செலவாணி வீத உறுதிப்பாட்டை பேணுதல்.***
3. ***உற்பத்தி மூல வளங்களின் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தல்.***

இக்குறிக்கோள்கள் சில முரண்பாடுகளை கொண்டவையாகவும், ஒன்றுடன் மற்றொன்று இணங்காமையாலும் மத்திய வங்கியின் பிரதான இலக்கு விலை உறுதிப்பாடாக இருக்க வேண்டும் என உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டமையாலும் உலக பொருளாதாரங்களின் அனுபவங்களின் படி பொருளாதார நெருக்கடிகளை தடுப்பதற்கு நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு இன்றியமையாதது என்பதாலும் 2002 இல் நாணய விதிச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் குறிக்கோள்களாக பின்வரும் இரண்டு வரையறை செய்யப்பட்டது.

1. ***பொருளாதார உறுதிப்பாடு மற்றும் விலை உறுதிப்பாடு ஆகியவற்றை பேணுதல்.***
2. ***நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை பேணுதல்.***

இவ்விரு குறிக்கோள்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக உள்ளதை அவதானிக்க முடியும். ஏனெனில் விலை உறுதிப்பாட்டினை பேணுவதற்கு நிதியிடை நிறுவனங்களினூடாகவே நாணயக் கொள்கை நடை முறைப்படுத்துவதால் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவது மிக பிரதானமானதாகும். இங்கு விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல்

முறைமையின் உறுதிப்பாடு ஆகியவற்றை விரிவாக நோக்கு வோம்.

## விலை உறுதி

விலை உறுதிப்பாடு என்பது பணவீக்கம்/ பணச் சுருக்கத்தை தவிர்த்தலை/மிகவும் குறை தலை குறிக்கும். எனவே விலை உறுதிப்பாடானது நாணயத்தின் பெறுமதியை பாதுகாக்கின்றது. இது நாணய கொள்கையின் மிகப் பிரதானமான தொரு நோக்கமாகும்.

இவ் விலை உறுதிப்பாடானது உள்நாட்டு விலை உறுதிப்பாட்டையும் வெளிநாட்டு விலைக ளோடு தொடர்புடைய வெளிநாட்டு விலை உறுதிப் பாட்டையும் உள்ளடக்குகின்றது. இவ்விரு விலை மட்டங்களிற்குமிடையே பரஸ்பர தொடர்புண்டு.

இதன் படி உள்நாட்டில் விலைகள் அதிகரிப் பதன் காரணமாக ரூபாவின் உள்நாட்டு பெறுமதி குறைவடைவதுடன் அதன் விளைவாக நாணயத் தின் வெளிப் பெறுமதி வீழ்ச்சியுற்று வெளிநாட்டு விலை உறுதிப்பாடும் பாதிப்படைகின்றது. அவ் வாறே வெளிநாட்டு விலை உறுதிப்பாட்டின்மை/ ரூபாவின் வெளிப் பெறுமதி வீழ்ச்சி யடைவதாலும் நாணயத்தின் உள்நாட்டு பெறுமதி வீழ்ச்சியடைவ தற்கு காரணமாக அமைகின்றது. எனவே ஏனையவை மாறாத நிலையில் நாணயத்தின் வெளிப் பெறுமதிக்கும் உட் பெறுமதிக்கும் இடையில் எதிர்கணிய தொடர்பு நிலவுகின்றது எனலாம்.

## நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு

நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு என்பது நிதியியல் முறைமையின் வினைத்திறன் மிக்க தொழிற்பாடுகளையும் நாணயம், வங்கித் தொழில் மற்றும் சென்மதி நிலுவை என்பவற்றின் நெருக்கடிகளற்ற நிலைமையையும் குறிக்கும்.

ஒரு நாட்டின் நிதியியல் உறுதிப்பாட்டுக்கு பின்வருவன அவசியமாகும்.

1. *உறுதியானபேரண்ட பொருளாதார சூழல்*
2. *வினைத்திறன் மிக்க ஒழுங்கு முறைப் படுத்தல் கட்டமைப்பு*
3. *வலுவான நிதியியல் நிறுவனங்கள்*
4. *பாதுகாப்பானதும் வலுவானதுமான கொடுப்பனவு உட்கட்டமைப்பு*

ஒரு பொருளாதாரத்தின் நிதியியல் முறைமை யின் உறுதியின்மைக்கு பின்வருவன காரண மாக அமையலாம்.

1. *வங்கிகள் முறிவடைகின்றமை*
2. *மிகைச் சொத்து விலை ஏற்றஇறக்கங்கள்*
3. *சந்தையில் திரவத் தன்மை சீர் குலைவு/ திரவத் தன்மை நெருக்கடி.*
4. *கொடுப்பனவு முறைகளுக்கு ஏற்படும் தடங்கல்கள்*

சந்தைகள் மற்றும் நிதியியல் நிறுவனங் களைக் கண்காணித்தல், கொடுப்பனவு முறை களை மேற்பார்வை செய்தல் மற்றும் நெருக்கடி களுக்கு தீர்வு காணல் என்பவற்றினூடாக ஒட்டு மொத்த நிதியியல் முறைமைக்கும் ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களை கண்டறிவதும், குறைப்பதும் தடுப்பதும் ஆகிய செயற்பாடுகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு மிகவும் இன்றியமையாதனவாகும். எனவே தான் இதன் முக்கியத்துவம் கருதி மத்திய வங்கியின் முறைமையின் உறுதிப்பாடு நோக்கப் படுகிறது.

## மத்திய வங்கியின் தொழிற்பாடுகள்

இலங்கை மத்திய வங்கியானது தனது மரபு ரீதியான தொழிற்பாடுகளாக பின்வருவன வற்றை கொண்டுள்ளது.

## 01. நாணய வெளியீட்டினை மேற்கொள்ளல்

அரசின் சார்பில் சட்டபண வெளியீட்டை மேற்கொள்ளும் ஒரு தனி உரிமை நிறுவனம் இலங்கை மத்திய வங்கியாகும். மத்திய வங்கி யின் நாணய வெளியீடானது நம்பிக்கை அடிப் படையில் மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது இம்முறையின் படி மத்திய வங்கியானது தன்னிட முள்ள சொத்துக்களை அடிப்படையாக கொண்டு நாணய வெளியீட்டை மேற்கொள்கிறது. அதாவது மத்திய வங்கியின் உள்நாட்டு வெளிநாட்டு சொத்துக்கள் அதிகரித்தால் நாணய வெளியீடு

அதிகரிப்பதாகவும் மாறாக மத்திய வங்கியின் உள்நாட்டு வெளிநாட்டு சொத்துக்கள் குறை வடைந்தால் நாணய வெளியீடும் குறைவதாக காணப்படும்.

தற்போது நாணய வெளியீட்டில் ஆகக் கூடிய எல்லை எதுவும் விதிக்கப்படவில்லை நாணய வெளியீடானது முக்கியமாக கொடுக்கல் வாங் கலில் பணத்திற்காக கேள்வியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

## 02. வங்கிகளின் வங்கியாகத் தொழிற்படல்

வங்கிகளின் வங்கி என்ற வகையில் மத்திய வங்கியானது வணிக வங்கி ஒன்றை ஆரம்பிக்க அனுமதி வழங்குவதுடன் பின்வரும் தொழிற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

1. *மத்திய வங்கியானதுநடைமுறைக்கணக்கு வசதிகளை வணிக வங்கிகளுக்கு வழங்கு வதுடன் வணிக வங்கிகளை வாடிக்கை யாளர்களின் வைப்பில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை ஒதுக்காக ஏற்று வணிக வங்கி களின் பேரில் வைப்பு செய்தல்.*
2. *வணிக வங்கிகளுக்கு தேவையான போது கடன்வழங்குதல்*
3. *இறுதிக்கடன் ஈவோனாக தொழிற்படல், வணிக வங்கிகள் முறிவடைவடைய கூடிய திரவ நிதி நெருக்கடிகளை நெருங்கும் போது அவற்றிற்கு கடன்களை வழங்கி உதவி செய்யும். இவ்வாறு வணிக வங்கி களுக்கு நிதி நெருக்கடி நிலையில் மத்திய வங்கி கடன் வழங்கி தொடர்ந்து வணிக வங்கிகள் இயங்க உதவியதனை இறுதிக் கடன் ஈவோன் எனலாம்.*
4. *வணிக வங்கிகளுக்கிடையிலான கொடுக் கல் வாங்களை தீர்த்து வைக்கின்ற ஒரு நிர்வாகமாக தொழிற்படல்.*

## 03. அரசாங்கத்தின் வங்கியாகத் தொழிற் படல்

அரசாங்க வங்கியானது அரசாங்கத்தின் சார்பில் சேவைகளினை வழங்குவதனால் இது அரசாங்கத்தின் வங்கி எனஅழைக்கப்பட்டது. எனவே அரசின் வங்கி என்ற வகையில் மத்திய வங்கியானது பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுகின்றது.

1. *அரசின் பொருளாதார நிதி ஆலோசகராக விளங்குதல்.*
2. *அரச நிதி கொடுக்கல் வாங்கல்களை பரிசிலித்தலும் அரச நிறுவனங்களின் கணக்குகளை பரிசோதனை செய்தலும் அவற்றிற்கு வங்கி தொழில் வசதிகளை வழங்குதல்*
3. *அரசிற்கு தேவையான பொது கடன் வழங் குதல்*

   *Eg. பாதீட்டுப் பற்றாக்குறைக்கு கடன் வழங்குதல்*
4. *அரசிற்கு தேவையான கடன்களை வேறு மூலதாரங்களில் இருந்து பெற்றுக் கொடுத் தல்.*

   *Eg: தினசேரி உண்டியல்களை வெளியீடு செய்தலும் அவற்றின் விற்பனைகளில் ஈடுபடலும்.*
5. *அரசின்சார்பில் வெளிநாட்டு ஒப்பந்தங் களில் ஈடுபடல்.*

   *Eg: (Imf, உலகவங்கி, வெளிநாட்டு அரசாங்கங்கள் ஆகியவற்றுடனான நடவடிக்கைகளில் அரசை பிரதிநிதித் துவப் படுத்தல்)*
6. *அரச பொதுக்கடனை வழங்குவதற்கும் தீர்ப்பனவு செய்வதற்கும் முகாமைப்படுத்து வதற்கும் பொறுப்பாகவுள்ளது.*

## தேசிய நாணயக் கொள்கையினை நடை முறைப்படுத்தல்.

❖ பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப் பாட்டை ஏற்படுத்துதல்.

❖ நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை ஏற்படுத்தல் ஆகிய மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடையும் நோக்குடன் பணநிரம்பல், கடன் நிரம்பல், கடன் பெறும் வசதி, வட்டி வீதம் ஆகியவற்றை பொருத்த மான

முறையில் நடைமுறைப்படுத்தல் நாணயக் கொள்கை எனப்படும்.

இந் நாணயக் கொள்கையானது மேற் கொள்ளப்பட வேண்டுமாயின் பின்வரும் இரண்டு கட்டுப்பாட்டு முறைகள் மத்திய வங்கியினால் பின்பற்றப்படுகின்றது.

### 1. தொகைக்கடன் கட்டுப்பாட்டு முறை

நாணயக் கொள்கையின் நோக்கங்களுக்கு அமைவாக வணிக வங்கிகளின் மொத்த ரீதியாக/ தொகை ரீதியாக கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கி மேற்கொள்ளும் நடவடிக்கையை தொகைக் கடன் கட்டுப்பாட்டு முறை குறிக்கும். தொகைக் கடன் கட்டுப்பாட்டு முறையில் பின்வரும் கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

### 2. வங்கி வீதம்

மத்திய வங்கியினால் வணிக வங்கி களுக்கு வழங்கப்படுகின்ற கடன்களுக்கு அறவிடப்படு கின்ற வட்டி வீதமே வங்கி வீதம் ஆகும். இதனை மத்திய வங்கி உயர்த்தும் போது வணிக வங்கி களும் தம்மால் வழங்கப்படும் கடன்களுக் கான வட்டி வீதத்தை உயர்த்தி கொள்வதால் பொது மக்கள் வணிக வங்கிகளிடமிருந்து கடனெடுக்கும் ஆற்றலை குறைத்து பணநிரம்பலை குறைக்க செய்வதன் ஊடாக பணநிரம்பலை கட்டுப்படுத்த முற்படுவதே இதுவாகும்.

### 3. காசு ஒதுக்கு வீதம்

வணிக வங்கிகளை பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் வைப்புக்களில் ஓர் குறிப்பிட்ட வீதத்தை மத்திய வங்கியில் வைப்பிலிடுதல் வேண்டும். இதுவே காசொதுக்கு வீதம் எனப் படும். இவ் ஒதுக்கு வீதத்தை மத்திய வங்கி உயர்த்தும் போது வணிக வங்கியின் திரவத் தன்மை குறைவடைந்து அவற்றின் கடன் வழங் கும் ஆற்றலும் குறைவடையும் இதனால் பண நிரம்பலை குறைத்து பணவீக்கத்தை கட்டுப் படுத்தி விட முடியும்.

### 4. திறந்த சந்தை நடவடிக்கை

மத்திய வங்கி அரசாங்கத்திற்கு நிதி தேவைப்படும் நேரங்களில் திறைசேரி உண்டி யல்கள், திறைசேரி முறிகள், அரசாங்க ஆவணங் கள், பிணைகள், கடன் பத்திரங்கள் போன்ற வற்றை வணிக வங்கிகள் ஊடாக விற்பனை செய்வதான நடவடிக்கையே பகிரங்க சந்தை நடவடிக்கை ஆகும். இதன் போது பொது மக்க ளிடம் இருக்கும் பணம் மத்திய வங்கியினை நோக்கி திருப்பப்படுகின்றது. இதனால் பண நிரம்பலை குறைத்து பணவீக்கத்தை கட்டுப் படுத்த முடியும்.

### 5. தெரிவுகட்டுப்பாட்டு முறை

மத்திய வங்கியினால் பணநிரம்பலை கட்டுப்படுத்த எடுக்கப்படும் தொகைக் கடன் கட்டுப்பாட்டினால் நாட்டின் அனைத்து துறை களுக்குமான கடன் வழங்கல்கள் பாதிக்கப்படு கின்றன. இதனால் அவசியமான சாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, மூலிகை, பயிர்ச்செய்கை, நன்னீர் மீன் வளர்ப்பு போன்ற முக்கிய துறை களுக்கு கடன் வழங்குதல் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு அவசியமற்ற துறைகளுக்கு நிதி செய்வதினை தடுக்கும் முகமாக வட்டி வீதங்களை உயர்த்தியும் பண நிரம்பலின் கட்டுப்பாடுகளை மேற்கொள்வதுமான செயற்பாடு தெரிவுக் கடன் கட்டுப்பாடு அகும்.

### ❖ மத்திய வங்கிக்கு உரிய நவீன தொழிற் பாடுகள்

மத்திய வங்கி தனது தொழிற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுகின்றது

*1. மையத் தொழிற்பாடுகள்*

*2. முகவராண்மைத் தொழிற்பாடுகள்*

### 1. மையத் தொழிற்பாடுகள்

*1. நாணயக் கொள்கையினை நடை முறைப் படுத்தல்*

*2. செலவானி வீத கொள்கையினை நடை முறைப்படுத்தல்.*

*நிதியமைச்சினால் வழங்கப்படுகின்ற*

பணிப்புரைகளுக்கு இணங்க அரசின் முகவராக, செலாவனி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி அதன் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. இச் சட்டமானது தீர்வைகளின் விதிப்பனவு மற்றும் தங்க நாணயம், கொடுப்பனவு, பிணையங்கள், படுகடன்கள், இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் தங்கம், நாணயம், கொடுப்பனவு பிணையங்கள், படுகடன்கள், இறக்குமதிகள், ஏற்றுமதிகள் மற்றும் மாற்றல்கள் அத்துடன் வெளிநாட்டு செலவானி கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்ட சொத்துக்களின் தீர்ப்பனவு தொடர்பான விடங்களில் கட்டுப்பாடுகளையும் வழுங்குகின்றது.

3. இலங்கையின் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமை செய்தல்
4. சட்டப் பணத்தை வெளியீடு செய்தலும் விநியோகித்தலும்.
5. வங்கிகள், நிதிக்கம்பனிகள் மற்றும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள் ஆகியோருக்கு உரிமம் வழங்குதல், அவர்களை ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
6. மத்திய வங்கியுடன் தீர்ப்பனவு கணக்குகளைக் கொண்டு நிதியியல் நிறுவனங்களுக்கு தீர்ப்பனவு மற்றும் தீர்த்தல் வசதிகளை வழங்குதல்
7. அரசாங்கத்தின் பொருளாதார மதியுரைஞராகவும் வங்கியாளராகவும் இறைமுகாமையாளராகவும் தொழிற்படுதல்.

## 02. முகவராண்மைத் தொழிற்பாடு

01. பொதுப்படுகடனை முகாமை செய்தல் அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியானது அரசாங்கத்தின் கடன் கொடுக்கல் வாங்கல்கள் அவற்றிற்குரிய வட்டி கொடுக்கல் வாங்கல்கள் போன்றவற்றினை ஒழுங்குபடுத்தக் கூடிய தொழிற்பாடாகும். அரசாங்கதுறை மேற் கொள்ளுகின்ற வரவு செலவு திட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்படக் கூடிய பற்றாக்குறைக்கான நிதியீட்டத்திற்குரிய கடன்களின் ஒழுங் கமைப்பினை இது குறிக்கும்.

02. வெளிநாட்டுச் செலாவானியை முகாமை செய்தல் உள்நாட்டு நாணயக் கொடுக்கல் வாங்களினை முகாமை செய்தலினை இது குறிக்கும்.

03. பேரண்ட நிதி மற்றும் கிராமிய கொடுகடன் திட்டங்களின் உச்ச முகவராண்மையாகத் தொழிற்படல்.
வறிய கிராமிய நிதி துறையினருக்கு உரிய மீள் நிதியீட்ட வசதிகள், பேரண்ட பொருளாதார நிதி நிறுவனங்களுக்கு நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் போன்ற வற்றினை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒழுங்குபடுத்தக்கூடிய தொழிற்பாடாகும். மத்திய வங்கியின் மானிய கொள்கையினை நடை முறைப்படுத்துவதற்கு இது உதவுகின்றது.

04. ஊழிய சேம நிதியத்தை முகாமை செய்தலும் நிர்வகித்தலும் அரசாங் கத்துறை, தனியார் துறை சேர்ந்து நடக்கின்ற நிறுவனங்களிலிருந்தும் இளைப்பாறிய நபர்களுக்கு செலுத்திக்கொள்ள வேண்டி சட்ட ரீதியான கொடுப்பனவே ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு ஆகும்.
ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பானது மத்திய வங்கியின் மூலமே அதன் உடைமையாளர்களுக்கு மத்தியில் வழங்க வேண்டி காணப்படுவதால் ஒழுங்கான முறையில் குறிப்பிட்ட நபர்களுக்கு மத்தியில் செலுத்துதல் வேண்டும் என்பதே மத்திய வங்கியின் இத் தொழிற்பாடாகும்.

**உசாத்துணைகள்**

- www.cbsl.gov.lk
- http://www.bis.org.cbanks

# கணக்கீடு

# மேந்தலை

சுஜானா.சு
*A/L Com 2017*

செலவுகளானவை பொதுவாக நேர் செலவு, நேரில் செலவு என வகைப்படுத்திக் கொள்ளப்படுகின்றது. இதில் நேர் செலவுகளானவை உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபடக் கூடியவையாகவும், கிரய அலகுகளுடன் நேடியாகத் தொடர்புபடக் கூடியவையாகவும், உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப விகிதாசார ரீதியாக மாற்றமடையக் கூடியவையாகவும் காணப்படுகின்றன.

மாறாக நேரில் செலவுகளானவை உற்பத்தியுடன் நேரடியாக தொடர்புபடாதவையாகவும், கிரய அலகுகளுடன் நேரடியாக தொடர்புபடுத்த முடியாதவையாகவும், உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப விகிதாசார ரீதியாக மாற்றமடையாதவையாகவும் காணப்படு கின்றது.

இங்கு நேரில் செலவுகளானவை மேந்தலை என அழைக்கப்படுகின்றது. இம் மேந்தலைகளானவை உற்பத்திப்பகுதியுடன் தொடர்புபடக் கூடியவையாகவும், அவற்றை உற்பத்தி மேந்தலை /தொழிற்சாலை மேந்தலை எனவும் உற்பத்தி பகுதியுடன் தொடர்புபடாதவை உற்பத்தி சாரா மேந்தலை எனவும் பாகுபடுத்தப்பட்டு நோக்கப்படுகின்றது.

இதில் உற்பத்தி மேந்தலை உற்பத்திக் கிரய கணிப்புக்குள் உள்ளடங்கப்படும். உற்பத்தி சாரா மேந்தலைகள், நிர்வாக மேந்தலை அதாவது அலுவலக மேந்தலை எனவும் விற்பனை மேந்தலை அதாவது அலுவலக மேந்தலை எனவும் விற்பனை மேந்தலை அல்லது சந்தைப்படுத்தல் மேந்தலை எனவும் பாகுபடுத்தப்படுகின்றது.

**மேந்தலை செலவுகளின் வகைகள்**

I. **உற்பத்தி மேந்தலை**
II. **உற்பத்தி சாரா மேந்தலை**

**மேந்தலை செலவுகளின் வகைகள்**

I. **உற்பத்தி மேந்தலை**
II. **நிர்வாக மேந்தலை**
III. **விற்பனை மேந்தலை**

**மேந்தலை செலவுகளின் வகைகள்**

I. **மாறும் மேந்தலை**
II. **நிலையான மேந்தலை**

**மேந்தலை செலவுகளின் வகைகள்**

I. **நேரில் மூலப் பொருள்**
II. **நேரில் கூலி**
III. **நேரில் பிற செலவு**

என பலவாறு வகைப்படுத்தலாம்.

**மேந்தலைகளை உற்பத்திப் பொருட்களுக்கு சாட்டுதல் செய்வதற்கான ஒழுங்குகள்.**

I. **மேந்தலை திரட்டுதல்**
II. **மேந்தலை ஒதுக்குதல்**
III. **மேந்தலை பகிர்தல்**
IV. **மேந்தலை மீள்பகிர்வு.**
V. **மேந்தலை உறிஞ்சுதல்.**

## மேந்தலை திரட்டுதல்

குறிப்பிட்ட உற்பத்தி செயற்பாட்டுடன் தொடர்புபட்டு ஏற்பட்டு கொள்ளுகின்ற மேந்தலைகளை ஒன்றாக்கிக் கொள்ளுகின்ற ஓர் செயற்பாடு மேந்தலை திரட்டுதல் ஆகும்.

## மேந்தலை ஒதுக்குதல்

குறிப்பிட்ட உற்பத்திச் செயற்பாட்டின் போது ஏற்பட்டுக் கொள்ளுகின்ற மேந்தலை செலவுகளானவை எக்கிரய நிலையத்திற்கு ஏற்பட்

டுள்ளது என நேரடியாக வேறுபடுத்தி அறிந்து கொள்ளக் கூடிய வேளையில் அவ் மேந்தலைச் செலவினை அக்குறிப்பிட்ட கிரய நிலையத்திற்கே நேரடியாக சாட்டுதல் செய்து கொள்வதனைக் குறித்து நிற்பது மேந்தலை ஒதுக்குதல் ஆகும்.

### மேந்தலை பகிர்தல்

குறிப்பிட்ட உற்பத்தி செயற்பாட்டின் போது ஏற்பட்டுக் கொள்ளுகின்ற மேந்தலைச் செலவு களானவை எக்கிரய நிலையத்திற்கு ஏற்பட்டுள் ளது என நேரடியாக வேறுபடுத்தி அறிந்து கொள்ள முடியாத வேளையில் அவ் மேந்தலை செலவினை ஏற்றுக் கொள்ளக் கூடிய மிகப் பொருத்தமான பகிர்ந்தளிப்பு முறையில் எல்லா கிரய நிலையங் களுக்குமிடையில் பகிர்ந்து சாட்டுதல் செய்து கொள்வதனை குறித்து நிற்பது இதுவாகும்.

உ - ம்

| | |
|---|---|
| கட்டிட வாடகை | – தளப்பரப்பு அடிப்படை |
| பொறி காப்புறுதி | – பொறி உபகரண புத்தகப் பெறுமதி |
| வேலையாளர் காப்புறுதி | – வேலையாளர் எண்ணிக்கை |

### மேந்தலை மீள்பகிர்வு

குறிப்பிட்ட உற்பத்தி நிறுவனங்களில் உ/தி திணைக்களங்கள், சேவைத் திணைக் களங்கள் என இருவகையான திணைக்களங்கள் பொது வாக காணப்படுகின்றன. உற்பத்தி திணைக் களங்களே நேரடியாக பொருள் வெளியீட்டுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. சேவைத் திணைக்களங்களானவை நேரடியாகப் பொருள் வெளியீட்டுடன் தொடர்புபடுவதில்லை.

சேவைத்திணைக்களங்களால் எந்த விதமான பொருள் வெளியீடு இடம் பெறாத காரணத்தாலும் பொருள் வெளியீட்டுடன் தொடர்புபடுகின்ற உ/தி திணைக்களங்களுக்கு ஏற்பட்டுள்ள மொத்த மேந் தலைச் செலவினை அறிந்து கொள்வதற்காகவும் சேவைத் திணைக்களங்களின் மேந்தலைச் செலவுகளை மீள உ/தி திணைக்களங்களுக்கு சாட்டுதல் செய்து கொள்ளப்படுவதனை மேந்தலை மீள்பகிர்வு என்பர்.

### மேந்தலை உறிஞ்சுதல்

உற்பத்தி கிரய நிலையங்களுக்கு ஏற்படக் கூடிய மேந்தலைச் செலவுகளை அதனூடாக உற்பத்தி செய்யப்படுகின்ற எல்லா உற்பத்தி அலகுகளுக்குமிடையில் சாட்டுதல் செய்து கொள்ளப்படுவதனைக் குறித்து நிற்பது மேந்தலை உறிஞ்சுதல் என்பர்.

### மேந்தலை உறிஞ்சுதல் முறைகள்

**1. உற்பத்தி அலகுமுறை**

$$\frac{\text{திட்டமிடப்பட்ட அல்லது பாதீடு செய்யப்பட்ட மொத்த மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட உற்பத்தி அலகுகள்.}}$$

**2.இயந்திர மணிவீத முறை**

$$\frac{\text{திட்டமிடப்பட்ட அல்லது பாதீடு செய்யப்பட்ட மொத்த மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட இயந்திர மணித்தியாலம்.}}$$

**3. ஊழிய மணி வீதமுறை**

$$\frac{\text{திட்டமிடப்பட்ட அல்லது பாதீடு செய்யப்பட்ட மொத்த மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட ஊழிய மணித்தியாலம்}}$$

மேந்தலை ஒதுக்குதல், பகிர்தல் என்ப வற்றின் முக்கியத்துவம் என்னவெனின் குறிப் பிட்ட உற்பத்தி, சேவை திணைக்களத்திற்குரிய மொத்த மேந்தலைச் செலவின் பெறுமதியினை அறிந்து கொள்ளல்.

மேந்தலை மீள்பகிர்வின் முக்கியத்துவம் என்னவெனின் குறிப்பிட்ட உற்பத்தி திணைக்கள திற்குரிய மேந்தலைச் செலவு எவ்வாறு என்ப தனை அறிந்து கொள்ளல்.

மேந்தலை உறிஞ்சுதலின் முக்கியத் துவம் என்னவெனின் உற்பத்தி செய்யப்படவுள்ள ஒரு அலகுக்கான மேந்தலைச் செலவு பெறுமதி எவ்வாறு என்பதனை அறிந்து கொள்ளல்.

**உசாத்துணைகள்**


- www.investopedia.com
- ஆசிரியர் வழி காட்டி
- கணக்கீடு பகுதி I - கருணதாஸ்

# கணக்கீட்டு எண்ணக்கருக்களும் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும்

**மதுசா.வ**
*A/L Com 2017*

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பயன்படுத் தப்படுகின்ற அடிப்படை கணக்குப்பதிவு, விதிகள், முறைகள், மரபுகள் என்பவற்றினையே கணக் கீட்டு எண்ணக்கரு என்பர்.

நிறுவனத்தில் அக்கறையுடையோருக்கு தகவல்களை வழங்குவதற்காக நிதிக்கூற்றுக் களை தயாரிப்பதற்கும் அவை நம்பகத்தன்மை உடையவையாக அமைவதற்கும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒரே முறையினைப் பின்பற்றி தயாரிக்க வேண்டியது அவசியமாகின்றது. எனவே கணக்கீட்டு எண்ணக்கருக்களை பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது. இவ்வாறான சில கணக்கீட்டு எண்ணக் கருக்களையும் அவை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களையும் பற்றி சற்று பார்ப்போம்.

## கணக்கீட்டு எண்ணக்கருக்கள்

**விளக்கம்**

### 1. தொழில் முழுமைக்கூறு எண்ணக்கரு

நிறுவனம் வேறு அதனை கொண்டு நடத்து கின்ற உரிமையாளர் வேறு என்ற அடிப்படையில் கணக்கீடுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கூறுகின்றது

கணக்கீட்டு பிரயோகம்

1. ***உரிமையாளர் மூலதனம்***
2. ***நிறுவனத்தலிருந்து உரிமையாளர் எடுக்கும் சொத்துக்களை நிறுவனத்திற்கு வருமதி ஒன்றாக எடுத்துக்காட்டல்.***
3. ***நிதிக்கூற்றில் வியாபாரத்தின் பெயரை குறித்துக்காட்டல்***
4. ***வணிகத்தினால் உழைத்த இலாபத்தை உரிமையாளர் உரிமையுடன் சீராக்கல்***

### 2. தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

நிறுவனம் எதிர்பார்க்கப்படும் எதிர்கால காலப்பகுதி வரைக்கும் or உத்தேசிக்கின்ற or பாதிடப்படுகின்ற வரைக்கும் தொடர்ந்தியங்குதல் என கருதப்பட வேண்டும்.

கணக்கீட்டு பிரயோகம்

1. ***சொத்து, பொறுப்புக்களை நமு.நமு அல்லா என வகைப்படுத்தல்***
2. ***பெ. தேய்வு செய்யக்கூடிய ஆதனம், பொறி உபகரணத்திற்கு பெ. தேய்வு செய்தல்***
3. ***சொத்துக்களின் சந்தை பெறுமதியினை வெளிக்காட்டாமல் இருத்தல்.***

### 3. பண அளவீட்டு எண்ணக்கரு

பணத்தினால் அளவீடு செய்யப்படும் நடவடிக்கைகள்/ விடயங்கள் மட்டுமே கணக்குளில் / நிதிக்கூற்றில் இடம் பெற வேண்டும்.

கணக்கீட்டு பிரயோகம்

1. ***நிதிக் கூற்று தயாரிக்கும் போது பணப் பெறுமதியினை நிதிக்கூற்றின் மேல் வெளிப் படுத்தல்.***
2. ***ஊழியரின் இன்முக வரவேற்பு, ஊழியரின் திறமைகள், நிதிக்கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்துவதில்லை.***

### 4. கால அளவிட்டு எண்ணக்கரு

நிதிக் கூற்றுக்களை பயன்படுத்துகின்ற நபர்களிற்கு தேவையான தகவல்களை ஒரு ஒழுங்கான கால இடைவெளியில் தயாரித்து வழங்கப்பட வேண்டுமென இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

கணக்கீட்டு பிரயோகம்

1. ***நிதிக்கூற்றின் மேல் தலையங்கப்படுத்தும் போது நிதிக்கூற்றின் காலப்பகுதி வெளிப் படுத்தல்***
2. ***நிதிக்கூற்றானது 12 மாதங்களிற்கு ஒரு தடவை தயாரிக்க வேண்டுமென அடிப்படை வழுங்கும் எண்ணக்கரு.***

## அட்டுற/நிலுவை எண்ணக்கரு

குறிப்பிட்ட ஆண்டிற்குரிய உண்மையான வருமானங்களும் செலவுகளையும் கணிக்கும் வகையில் நிதிக்கூற்று தயாரிக்க வேண்டும்.

அதாவது காசாக பெற்றது காசாக செலுத்திய துடன், கொடுக்க வேண்டியது, பெற வேண்டியது முற்பணமாக செலுத்தியது, முற்பணமாக பெற்றது தொடர்பான அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டே நிதிக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.

கணக்கீட்டு பிரயோகம்

1. ***கடன் விற்பனை, கடன் கொள்வனவு வருமான கூற்றில் வெளிப்படுத்தல்***
2. ***வியாபார வருமதியாளர், சென்மதியாளர் நிதிநிலைமை கூற்றில் சொத்தாகவும் பொறுப் பாகவும் வெளிக்காட்டல்.***
3. ***காகிதாதிக்கு செலுத்திய காசு ரூ 8000 செலுத்த வேண்டியது 4000 எனின் வருமான கூற்றின் காகிதாதி செலவாக 12000 காட்டுதல்.***

### தேறல் எண்ணக்கரு

வணிக கொடுக்கல் வாங்கல் உண்மையாக நிகழும் சந்தர்ப்பத்தில் அவற்றின் விளைவு கணக்குகளில் பதிவு செய்யப்படும்.

பொருட்கள் எக்கால பகுதியில் விற்பனை செய்யப்பட்டதோ அவை அக்கால பகுதியில் வருமானமாக காட்டப்பட்டு கணக்குகளில் வைப்பு இடம்பெற வேண்டும்.

கணக்கீட்டு பிரயோகம்

1. ***முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட விற்பனை ஒப்பந்தத்தை பொறுப்பாக வெளிக்காட்டல்.***
2. ***வருமானத்தை அடையாளப்படுத்தும் எண்ணக்கரு***
3. ***கடனிற்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனையை அக்கால பகுதியில் விற்பனை வருமானமாக இனங்கானல்.***

## இணைத்தல் எண்ணக்கரு

நிதியாண்டின் உண்மையான வருமானங் களையும் செலவுகளையும் ஒப்பீடு செய்து நிதிப் பெறுப்பேற்றை கணித்தல் வேண்டும்.

ஒரு செலவினை அச்செலவினால் ஏற்படக் கூடிய வருமானங்களுடன் ஒப்பீடு செய்து வருமான கூற்றில் வெளிப்படுத்தல் வேண்டும்.

கணக்கீட்டு பிரயோகம்

1. ***ந.மு அல்லா சொத்தின் பெ.தேய்வினை வருமான கூற்றில் செலவீனமாக காட்டல்.***
2. ***ஐயக்கடனிற்கான செலவினை வருமான கூற்றில் செலவீனமாக காட்டல்***
3. ***வருமானக் கூற்றில் விற்பனையையும் விற்பனை கிரயத்தையும் ஒப்பீடு செய்து மொத்த இலாபம் கணித்தல்.***
4. ***சரக்கிருப்பின் ஒரு பகுதியை விற்பனை கிரயமாகவும் விற்பனை செய்யாத இருப்பை ந.மு சொத்தாகவும் வெளிக்காட்டல்.***

## வரலாற்று கிரய எண்ணக்கரு

ந.மு.அல்லா சொத்து எவ்விலையில் தெரிவு செய்யப்பட்டதோ அவ்விலையில் தொடர்ந்து புத்தகங்களில் பேணப்பட வேண்டும்.

கணக்கீட்டு பிரயோகம்

1. ***நடைமுறை அல்லா சொத்தினை நிதி நிலைமை கூற்றில் கிரய பெறுமதியில் வெளிப்படுத்தல்.***
2. ***பணவீக்கத்தை கருத்தில் கொள்ளாமல் சொத்துக்களின் புதிய பெறுமதி/சந்தை பெறுமதியை கருத்தில் கொள்ளாமல் க/கு வைக்கும் முறை***
3. ***இருப்புக்களின் விற்பனை கிரயத்தை கணிக்கும் போது இறுதி இருப்பினை கிரயத்தில் கணிக்க வேண்டும்.***

## பாதுகாப்பு எண்ணக்கரு

நிறுவனங்கள் இலாபங்கள், வருமானங் களை எதிர்பார்த்து ஒரு போதும் நிதிக்கூற்று தயாரிக்கப்பட கூடாது என அடிப்படை வழங்கும் எண்ணக்கரு.

**கணக்கீட்டு பிரயோகம்**

1. ***வியாபார வருமதியாளன் மீது ஐயக் கடனிற்கு ஏற்பாடு செய்தல்.***
2. ***இருப்பினை கிரயம், தேறக்கூடிய நிகரப் பெறுமதியில் எப்பெறுமதி குறைவானதோ அப்பெறுமதியை இருப்பாக வெளிப்படுத்தல்***
3. ***விற்பனை உத்தரவாதம்***

## பொருண்மை எண்ணக்கரு

நிறுவனத்தின் தன்மைக் கேற்ப வணிக நடவடிக்கைகள் முக்கியமானதா என தீர்மானிக் கப்படும்.

குறித்த வொரு விடயம் நிதிக்கூற்றில் வெளிப் படுத்தப்படும் போது சொத்தா/ செலவீனமா என வெளிப்படுத்தல்.

**கணக்கீட்டு பிரயோகம்**

1. ***சிறிய பொருட்கள் ஒரு வருடத்திற்கு மேற் பட்ட ஆயுட்காலம் இருப்பினும் குறித்த சொத்தானது கொள்வனவு செய்த ஆண்டிலே செலவீனமாக காட்டல்.***
2. ***நிறுவன தேவைக்காக கொள்வனவு செய்யப் பட்ட கோப்புக்கள் (File) கொள்வனவு செய்த ஆண்டிலே எழுது கருவி செலவினுள் வெளிப்படுத்தப் படும்.***

## வெளிப்படுத்தல் எண்ணக்கரு

நிதிக்கூற்றுக்களை பயன்படுத்துகின்ற நபர் களின் தேவையை அதிகளவாக பூர்த்தி செய்ய கூடிய வகையில் அதிகளவான தகவலை நிதிக் கூற்றில் கொண்டிருக்க வேண்டும்.

**கணக்கீட்டு பிரயோகம்**

1. ***இருப்பு கணிப்பு விலையிடலிற்காக பயன் படுத்து கின்ற விலையிடல் முறையை நிதிக் கூற்றில் (Fifo/WAC) வெளிப்படுத்தல்.***
2. ***நிதிக் கூற்றில் குறிப்பு செய்கைகளை வெளிப் படுத்தல்.***

## கொள்கை மாறா எண்ணக்கரு

நிறுவனம் தனது செயற்பாட்டு காலப்பகுதி யில் தனது கணக்கீட்டு கொள்கையை /முறையை மாற்றாது தொடர்ந்தும் பின்பற்றல் வேண்டும்.

**கணக்கீட்டு பிரயோகம்**

1. ***ந.மு அல்லா சொத்து பெறுமானத் தேய்வை கணிக்கும் போது தொடர்ந்தும் ஒரே முறையை பின்பற்றல்.***
2. ***இருப்பு மதிப்பீட்டு கொள்கையை பின்பற்றும் போது ஒரே முறையை பின்பற்றல்.***

## தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத் துவ எண்ணக்கரு

சட்ட பூர்வமான தன்மையிலும் பார்க்க வணிக நடவடிக்கை யொன்றில் பொருளாதார விளைவு களிற்கு கூடியளவு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

அதாவது நடவடிக்கையை நிதிக்கூற்றில் காட்டும் போது அதன் வெளியான தன்மைக்கு முக்கியத்துவம் வழங்காமல் அதன் உள்ளார்நத தன்மைக்கு முக்கியத்துவம் வழங்கி கணக்கு வைப்பு இடம் பெற வேண்டும்.

இங்கு தோற்றம் என்பது சட்ட உடன்பாடா கவும் கருத்து என்பது தற்போதுள்ள நிலையை குறிக்கும்.

**கணக்கீட்டு பிரயோகம்**

1. ***குத்தகை அடிப்படையில் பெற்ற சொத்தினை நிதி நிலமை கூற்றில் சொத்தாக வெளிக் காட்டல்***
2. ***"விற்பனை இன்றேல் திருப்பி அனுப்புதல்" அடிப்படையில் பொருட்கள் வாடிக்கையாளர்/ முகவரியின் களஞ்சியத்தில் இருந்தாலும் நிறுவனம் தனது இருப்பில் சொத்தாக வெளிக் காட்டல்.***

**உசாத்துணைகள்**

- www.accountingcoah.com
- உயர் கணக்கீடு பகுதி II (கு.கலைச்செல்வன்)

# New way of Accounting through software

*Ann Sobiya.A*
*A/L Com 2017*

Accounting software functions as an accounting information system that describes a type of application software that records and processes accounting transactions, such as accounts payable, accounts receivable, general ledger, payroll and trial balance. Accounting software may be online - based or desktop based. It differs greatly in its complexity and cost.

Accounting software provides many benefits such as speed up the information retrieval process, bring efficiency in Bank reconciliation process, automatically prepare VAT or GST and provide the opportunity to see the real - time state of the company's financial position.

A best accounting software, that are affordable and easy to use.

Criteria that used to evaluate best accounting software :

- Cost
- Ease of use
- Saving time
- Mobile access
- Accountable access
- Customer service
- Service limitations

**Types of Accounting Software**

***1. Personal accounting***

Specially used by home users

***2. Low - end market***

An inexpensive application software that allows most general business accounting functions to be performed.

***3. Mid - market***

Covers a wide range of business software that may be capable of serving the needs of multiple national accountancy standards and allow accounting in multiple currencies.

***4. High - end market***

The most complex and expensive business accounting software is frequently part of an extensive suite of software.

***5. Hybrid solution***

This software is suitable for companies at multiple stages of growth.

***6. Saas accounting software***

With the advent of Faster computers and internet connections, accounting software companies have been able to create accounting software paid for on a monthly recurring charge

instead of a larger up front license fee.

**Example for best accounting softwares**

- Intuit Quick books
- Wave Accounting
- Mac:xero
- Zoho books
- Fresh books
- Account Edge Pro
- Free Agent
- Harvest
- Sage one
- Working point
- Yendo
- Kashoo

**Quick book - accounting software**

Many small to medium -sized companies simply don't have the funding to hire a professional accountant or to outsource their finances to a specialist accounting firm. Therefore, Quickbooks accounting software is an ideal solution for business owners seeking to streamline their accounts payable processess without incurring excessive costs.

Using Quick book is an effective way to improve your accounts payable process and ensure that - it runs smoothly month after month.

Tasks - Performed by Quickbook.

1. ***Every day organization***
   - organize Expenses
   - stocked for success

2. ***Cashflow***
   - Control your cash flow
   - Automate your spending

3. ***Invoicing***
   - Make your business look good
   - Get Paid instantly

4. ***Reports***
   - one - click reporting
   - Dash board overview

5. ***Authorisation of purchase orders***

6. ***Taxes***
   - Paying tax deposits

7. ***Mobile***
   - Take care of business anywhere
   - paperless receipt tracking

8. ***Payroll***
   - Enhanced payroll
   - Full service payroll

In order to maintain good relationships with other businesses and have excellent company credit ratings, use Quick books accounting software to ensure that all of your accounts are paid in good time.

Managing your company's accounts payables with Quickbooks accounting software can help speed up your accounts payable process in the following ways.

- by minimizing errors
- by reducing processing costs
- by reducing storing paper documentation.
- by, maximizing payment discounts that need to be processed done earlier than others.

- by bringing late payments and late payment fines to an end.
- by meeting the terms of legislation and reporting easily.
- by improving relationships with clients and suppliers owing to better customer service.

Quick books can help your business grow without requiring additional costs of employing an accountant or sending employees to expensive training sessions.

**Search online**

- www.quickbook.intuit.com
- Nav.lk

**References**

- 5 ways to keep your books
- intuit bank on mobile
  first game plan

> our greatest weakness lien in giving up
> The most certain way to succeed is always
> to try just one more time.
>
> Thomas A.Edison

# இருப்புக்கள்

மேரி தனுசா.அ
*A/L Com 2017*

இலங்கை கணக்கீட்டின் நியமம் இரண்டின் படி மூலப் பொருட்கள், குறை வேலைகள் முடிவுப் பொருட்களை இருப்புக்கள் என கூற முடியும். உற்பத்தி, விற்பனை நோக்கத்திற்காக நிறுவனத்தில் பேணப்படும் வகைக்குள் அடங்குபவைகளையே இருப்புக்களாக கருதமுடியும்.

இருப்புக்களை தேவையான அளவில் பேணுவதன் மூலம் உற்பத்தியை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் கேள்விகளுக்கேற்ப நிரம்பலை ஏற்படுத்துவதற்கும் முடிவதுடன் இருப்பின்மையால் ஏற்படக்கூடிய செலவுகள், நட்டங்களை குறைத்துக் கொள்ள முடியும் இதனால் நிறுவனங்கள் தமது நன்மதிப்புக்களை நிலை நாட்டிக் கொள்வதற்கும் சந்தைப் போட்டியை தொடர்ச்சியாக எதிர் கொள்வதற்கும் இயலும்.

இருப்புக்கள் தேவைக்கதிகமாக பேணப்படும் பொழுது சேதங்கள், நட்டங்கள், மேலதிக களஞ்சியப்படுத்தல் செலவுகள் ஏற்பட்டுக் கொள்ளும்.

## இருப்புக்கும் தேறிய இலாபத்திற்கும் இடையிலான தொடர்பு

இறுதி இருப்புக்கும் தேறிய இலாபத்திற்கும் இடையில் நேர்த்தொடர்பு காணப்படும். அதாவது இறுதி இருப்பு அதிகரிக்கும் பொழுது தேறிய இலாபம் அதிகரிக்கும் அதே வேளை இறுதி இருப்பு குறைவடையும் போது தேறிய இலாபம் குறைவடையும்.

## இருப்பு தொடர்பான சீராக்கங்கள்

இருப்புக்கள் எப்பொழுது விற்பனை செய்யப்படுகின்றதோ அப் பொழுதே செலவாகக் காட்டப்படும். அதாவது கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் விற்பனை செய்யப்படும் பொழுதே செலவு ஒன்றாகக் காட்டப்படும்.

இறுதி இருப்பினை பெறுமதியிடும் பொழுது கிரயம், தேறிய புத்தகப் பெறுமதி இதில் எது குறைவானதோ அது இருப்பாகக் கொள்ளப்படும். ஆனாலும் விற்பனை கிரயம் கணக்கெடுக்கும் பொழுது கிரயமே கருத்திற் கொள்ளப்படும். நிதி நிலமைக் கூற்றில் (ஐந்தொகையில்) கிரயம், தேறிய புத்தகப் பெறுமதி என்பவற்றில் குறைவான தொகை கருத்திற் கொள்ளப்படுவதுடன், கிரயத்தினை விட தேறிய புத்தகப் பெறுமதி குறைவாகக் காணப்படும் பொழுது ஏற்படும் நட்டம் ஏனைய செலவிற்குரிய விடயம் ஒன்றாக கருத்தில் கொள்ளப்படும். முன் எச்சரிக்கை எண்ணக்கரு அடிப்படையில் நட்டங் கள் சீராக்கம் செய்யப்படும்.

இறுதி இருப்பானது நிறுவனத்திலுள்ள ஏடுகளில் இருந்து ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மாறாக நேரடியாக களஞ்சியம், விற்பனை, உற்பத்தி நிலையங்களில் காணப்படும் உருப்படிகள் கணக்கெடுக்கப்பட்டு உள்வாங்கும் நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

1. இவ்வாறு கணக்கெடுப்பதனால் இருப்பெடுத்தலின் பொழுது சில தவறுகள் நிகழ்த்துவதற்கான சாத்தியக் கூறுகளுண்டு விற்பனை செய்யப்பட்டு நிறுவனத்தை விட்டு அகற்றப்படாத பண்டங்கள் உள்வாங்கப்பட்டிருந்தால் அவை இறுதி இருப்பு சீராக்கத்தின் பொழுது இருப்பில் இருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

2. கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் நிதியாண்டு தினத்திற்குள் நிறுவனத்தை வந்தடையாது காணப்படும் பொழுது அவை இறுதி இருப்பெடுத்தலின் பொழுது கவனத்திற் கொள்ளப்பட்டு இறுதி இருப்பினுள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

3. விற்பனை இன்றேல் திருப்பி அனுப்புதல் என்னும் நிபந்தனையின் கீழ் அனுப்பப்பட்ட பண்டங்களுக்கான விற்பனைத் திகதி நிதி ஆண்டுக்கு அப்பால் பிற்காலத்தில் முடிவடையும் பொழுது விற்பனையாகாத பொருட்களின் கிரயம் இறுதி இருப்பினுள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

4. தீயால் முற்றாக அழிக்கப்பட்ட நன்கொடை, அன்பளிப்பு, களவு, அபாயங்கள் ஏற்பட்ட இருப்பு நட்டங்கள் இறுதி இருப்பினுள் சேர்த்துக் கொள்ளப்படாத காரணங்களால் இவை கொள்வனவில் இருந்து முற்றாக நீக்கிக் காணப்பட்டு ஏனைய செலவில் நட்டமாகக் காட்டப்படுதல் வேண்டும்.

5. நேரடி இருப்பெடுத்தலில் காணப்பட்ட இருப்பு கிரயத்துக்கும் பதிவேடுகளில் காணப்பட்ட இருப்பு கிரயத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் கணக்கீட்டுக்கு உட்படுத்தப்பட்டு சீராக்கங்கள் மேற் கொள்ளப்படும்.

## இருப்புக் கிரயம்

இருப்புக்கான கிரயமானது கொள்வனவு கிரயத்துடன் இருப்பினை விற்பனை பிரிவுக்கு மாற்றும் வரை அல்லது உற்பத்தி பிரிவுக்கு மாற்றும் வரை ஏற்பட்ட அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கப்படல் வேண்டும். அதாவது.

| | ரூபா |
|---|---|
| *கொள்விலை* | XXX |
| *கொள்விலை வரிகள்* | XXX |
| *சுங்கத் தீர்வைகள்* | XXX |
| *உட்சுமைக் கூலிகள்* | XXX |
| *கப்பற் கட்டணங்கள்* | XXX |
| *ஏற்றி இறக்கல் கூலிகள்* | XXX |
| *கொள்வனவு கிரயம்* | XXX |

இருப்பிற்கான விலையிடல் முறைகள்

- *முதலுள் முதல் வெளிமுறை(FIFO)*
- *நிறையிடப்பட்ட சராசரி நிறை(WAM)*

இருப்புடன் தொடர்புடைய ஆவணங்கள்

- *பந்தாய அட்டை (BINCARD)*
- *களஞ்சியப் பேரேடு (STORE LEDGER)*
- *பொருள் வேண்டுகோள் பத்திரம்(MRN)*
- *கொள்வனவுக் கட்டளை(PURCHASE ORDER)*
- *பொருள் பெறுவனவு பத்திரம்(GRN)*

களஞ்சிய சாலையில் பேணப்படும் இருப்பு மட்டங்கள்

- *மறுகட்டளை மட்டம்*
- *இழிவிருப்பு மட்டம்*
- *உச்ச இருப்பு மட்டம்*
- *சராசரி இருப்பு மட்டம்*

இருப்புக்களை பதிவு செய்யும் கணக்கீட்டு முறைகள்

- *கால அடிப்படை இருப்பு முறை*
- *தொடர் இருப்பு முறை*

**உசாத்துணை**

- Tim

*ஒருவருக்கு நேரம் சரியில்லா விட்டால்*
*அவர் வாங்கிய புடலங்காயும் பாம்பாக மாறிவிடும்*

# நிதிப்பகுப்பாய்வு

**அனார்த்தனி.அ**
*A/L Com 2017*

நிறுவன கணக்கீட்டு உள்ளீடுகளை பயன் படுத்தி தயாரிக்கும் அறிக்கை நிதிப்பகுப் பாய்வு ஆகும். நிதி முகாமைக்கு தேவையான தகவல் களை நிதிக் கூற்றானது வழங்குகின்றது. வணிக மொன்றினுள் காணப்படுகின்ற பிரதான நிதிக் கூற்றுக்களாக "வருமானக்கூற்று, நிதிநிலமைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை குறிப் பிடலாம்.

இவ் நிதிக்கூற்றுக்களை பகுப்பாய்வு செய்வதே நிதிப்பகுப்பாய்வு எனப்படும். இவ் நிதிப் பகுப்பாய் விற்கு பயன்படுத்தப்படும் பிரதான கருவியாக நிதி விகிதங்கள் காணப்படுகின்றன. இங்கு பயன் படுத்தப்படும் நிதி விகிதங்களாக

- ***திரவத் தன்மை விகிதம்***
- ***இலாபத்தன்மை விகிதம்***
- ***செயற்பாட்டு விகிதம்***
- ***இணைப்பு விகிதம்***

J/HOLY FAMILY CONVENT LIBRARY DATE:- NATIONAL SCHOOL JAFFNA

என்பவற்றை குறிப்பிடலாம்.

## திரவத்தன்மை விகிதம்

நிறுவனங்களின் குறுங்காலக் கடன் களை உரிய தவணையில் கொடுப்பனவு செய்யக் கூடிய ஆற்றலினையும் நிறுவனம் தாம் பெற்ற கடனை குறித்த காலத்தில் கொடுத்துத் தீர்க்க உள்ள ஆற்றலினையும் புலப்படுத்தும் வகையில் கணிப் பீட்டுக் கொள்ளும் விகிதங்களே திரவத்தன்மை விகிதங்கள் ஆகும்.

நிறுவனங்களின் திரவத்தன்மையினை மதிப்பீடு செய்ய பின்வரும் விகிதங்கள் பயன் படுத்தப்படுகின்றன.

- ***நடைமுறை விகிதம்***
- ***விரைவு விகிதம்***
- ***காசு விகிதம்***
- ***கால அளவீட்டு விகிதம்***

இவ் விகிதங்களை சற்று விரிவாக நோக்குவோம்.

## நடைமுறை விகிதம்

நடைமுறைச் சொத்துக்களுக்கும் நடை முறைப் பொறுப்புக்களுக்கும் இடையிலான தொடர்பினைக் காட்டுகின்ற விகிதம் நடைமுறை விகிதம் ஆகும். இவ் விகிதம் 2 : 1 ஆக இருப்பது சிறந்த திரவத்தன்மையினை வெளிக்காட்டுவதாக அமையும்.

$$\text{நடைமுறை விகிதம்} = \frac{\text{நடைமுறைச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$$

## விரைவு விகிதம்

திரவச் சொத்துக்கும் நடைமுறைப் பொறுப் புக்கும் இடையிலான தொடர்பினைக் காட்டும் விகிதம் விரைவு விகிதம் எனப்படும். இவ் விகிதம் 1:1 ஆக இருப்பது சிறந்த திரவத் தன்மையினை வெளிக்காட்டுவதாக அமையும். விரைவுச் சொத் தானது பின்வருமாறு கணிப்பிடப் படும்.

விரைவுச் சொத்து = நடைமுறைச் சொத்து – (இருப்பு + முற்பணச் செலவுகள்)

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{விரைவுச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$$

## காசு விகிதம்

காசுக்கும் நடைமுறைப் பொறுப்புக்கும் இடையிலான விகிதாசார ரீதியிலான தொடர்பைக் காட்டும் விகிதம் இதுவாகும்.

$$\text{காசு விகிதம்} = \frac{\text{காசு + சந்தைப்பிணைகள்}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$$

## கால அளவீட்டு விகிதம்

வணிகத்தில் அன்றாடச் செலவுகளை மேற் கொள்வதற்கு நிறுவனத்திற்கு காணப்படும் இயலுமையை காட்டுகின்ற விகிதம் இதுவாகும். சராசரி அன்றாட செயற்பாடுகளானது பின்வரு மாறு கணிப்பிடப்படும்.

$$\text{சராசரி அன்றாடச் செயற்பாட்டு செலவு} = \frac{\text{விற்பனைக் கிரயம் + விநியோக, நிர்வாக மற்றும் ஏனைய செலவுகள் – தேய்வுகள்}}{365}$$

$$\text{கால அளவீட்டு விகிதம்} = \frac{\text{திரவத்தன்மை சொத்துக்கள்}}{\text{சராசரி அன்றாடச் செயற்பாட்டுச் செலவு}}$$

## இலாபத்தன்மை விகிதம்

சொத்துக்கள், பங்கு முதலீடுகள், விற்பனை என்பவற்றிற்கேற்ப வணிகத்தினால் உழைக்கப் படும் இலாபம் எவ்வளவு என்பது இலாபத்தன்மை விகிதத்தினூடாக காட்டப்படுகின்றது.

இலாபத்தன்மையினை அளவிட பின்வரும் விகிதங்கள் பயன்படுகின்றன.

- மொத்த இலாப விகிதம்
- தேறிய இலாப விகிதம்
- முதலீட்டுக்கான திரும்பல் வீதம்
- உரிமை மூலதனத்திற்கான திரும்பல் விகிதம்

இவற்றை சற்று விரிவாக நோக்குவோம்.

## மொத்த இலாப விகிதம்

விற்பனையில் மொத்த இலாபத்தின் அளவினைக் காட்டும் விகிதமொன்றாக இவ் விகிதம் அமையும். இவ் விகிதத்தின் மூலம் நிறுவனத்தின் விற்பனைக் கிரயம் மொத்த இலாபம், விற்பனை என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை அறியலாம்.

$$\text{மொத்த இலாப விகிதம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

## தேறிய இலாப விகிதம்

தேறிய இலாபத்திற்கும் விற்பனைக்கும் இடையிலான தொடர்பினை காட்டும் விகிதம் இதுவாகும்.

$$\text{தேறிய இலாப விகிதம்} = \frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

## முதலீட்டுக்கான திரும்பல் வீதம்

மொத்த சொத்துக்கும் வணிக உழைப் பிற்கும் இடையிலான தொடர்பினை காட்டும் விகிதம் இதுவாகும்.

$$\text{முதலீட்டுக்கான திரும்பல் வீதம்} = \frac{\text{வரிக்குபின் தேறிய இலாபம்}}{\text{மொத்தச் சொத்துக்கள்}} \times 100$$

## உரிமை மூலதனத்திற்கான திரும்பல் விகிதம்

சாதாரண பங்குதாரரது மூலதனத்திற்கும் உழைக்கப்பட்ட இலாபத்திற்கும் இடையிலான தொடர்பை இவ்விகிதம் காட்டும்.

$$\text{உரிமை மூலதனத்திற்கான திரும்பல் விகிதம்} = \frac{\text{வரிக்குபின் தேறிய இலாபம்}}{\text{உரிமை மூலதனம்}}$$

## இணைப்பு விகிதம்

நிறுவனத்தின் உரிமையாளரது மூலதனத் திற்கும் கடன் மூலதனத்திற்குமிடையிலான தொடர்பினைக் காட்டுகின்ற விகிதம் இணைப்பு விகிதம் ஆகும். இதன் மூலம் நிறுவனத்தின் நீண்ட கால நிதி நிலைமை தொடர்பான தகவல் களை பெற்றுக் கொள்ளலாம்.

இணைப்பு விகிதத்தை அளவிட பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- ***கடன் விகிதம்***
- ***கடன் உரிமை விகிதம்***
- ***வட்டிக் காப்பு விகிதம்***

## கடன் விகிதம்

நிறுவனம் ஒன்றின் கடன் மூலதனத்திற்கும் மொத்த மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பினை காட்டுகின்ற விகிதம் இதுவாகும்.

கடன் மூலதனமானது இவ்வாறு கணிப்பிடப்படும்.

கடன் மூலதனம் = நிலையான வட்டி பெறும் மூலதனம் + கூறப்பட்ட முன்னுரிமைக்குப் பங்கு மூலதனம்.

$$\text{கடன் விகிதம்} = \frac{\text{கடன் மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}}$$

## கடன் உரிமை விகிதம்

நிறுவனம் ஒன்றின் கடன் மூலதனத்திற்கும், உரிமை மூலதனத்திற்கும் இடையிலான தொடர்பினைக் காட்டக்கூடிய வகையில் கணிக்கப்படும் விகிதம் இதுவாகும். இவ்விகிதம் 1ற்கும் குறைவாயின் தாழ் இணைவாகவும் 1ற்கு கூடவாயின் உயர் இணைவாகவும் காணப்படும்.

தாழ்இணைவானது நிறுவனத்திற்கு சிறப்பாக அமைவதுடன் நிறுவனத்தின் நீண்ட கால கடன் வழங்குநரின் பாதுகாப்பினை இது உறுதிப்படுத்துவதாக அமையும்.

$$\text{கடன் உரிமை விகிதம்} = \frac{\text{கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}}$$

உரிமை மூலதனம் = கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் + ஒதுக்குகள்

## வட்டிக் காப்பு விகிதம்

வணிகமானது தனது உழைப்பில் இருந்து வட்டியினை எத்தனை தடவை செலுத்த முடியும் என்பது இதன் மூலம் கணிப்பிடப்படும்.

$$\text{வட்டிகாப்பு விகிதம்} = \frac{\text{தேறிய இலாபம்} + \text{வட்டிச் செலவு}}{\text{வட்டிச் செலவு}}$$

## செயற்பாட்டு விகிதம்

இதன் கீழ் பின்வரும் விகிதங்கள் பயன்படுத்தப்படும்

*சரக்கிருப்பு புரள்வு விகிதம்*

*கடன்பட்டோர் புரள்வு விகிதம்*

*கடன் கொடுத்தோர் புரள்வு விகிதம்*

*மொத்த சொத்து புரள்வு விகிதம்*

## சரக்கிருப்பு புரள்வு விகிதம்

குறித்த நிறுவனத்தின் குறித்த காலப் பகுதிக்கான விற்பனைக் கிரயத்திற்கும், சராசரி இருப்புக்கும் இடையிலான தொடர்ப்பினைக் காட்டும் விகிதம் ஆகும்.

$$\text{இருப்புப் புரள்வு விகிதம்} = \frac{\text{விற்பனைக் கிரயம்}}{\text{சராசரி இருப்பு}}$$

$$\text{சராசரி இருப்பு} = \frac{\text{ஆரம்ப இருப்பு} + \text{இறுதி இருப்பு}}{2}$$

## கடன்பட்டோர் புரள்வு விகிதம்

குறித்த காலத்தினுள் கடன்பட்டோர் எத்தனை தடவைகள் பணத்தினைச் செலுத்துகின்றனர் பணமாக மாற்றம் பெறுகின்றனர் என்பதை இவ்விகிதம் எடுத்துக்காட்டும்.

கடன்பட்டோர் புரள்வு விகிதம் உயர்வாக இருப்பது க/ப இருந்து பணத்தை விரைவாக வசூலிக்கும் இயலுமையை நிறுவனம் கொண்டுள்ளதை குறிக்கும்.

$$\text{க/ப புரள்வு விகிதம்} = \frac{\text{கடன் விற்பனை}}{\text{சராசரி கடன்பட்டோர்}}$$

## கடன் கொடுத்தோர் புரள்வு விகிதம்

ஒரு நிறுவனத்தின் குறித்த காலக் கடன் கொள்வனவிற்கும், கடன்கொடுத்தோர் மீதிக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் விகிதம் இதுவாகும்.

$$\text{க/கொ புரள்வு விகிதம்} = \frac{\text{கடன்கொள்வனவு}}{\text{சராசரி கடன்கொடுத்தோர்}}$$

## மொத்தச் சொத்து புரள்வு விகிதம்

நிறுவனத்தில் உள்ள சொத்துக்களிற்கும் விற்பனைக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பீடு செய்வதற்கு இவ்விகிதம் பயன்படும். இவ்விகிதமானது சொத்துகளின் வினைத்திறன்

மட்டத்தினை மதிப்பீடு செய்ய பயன்படும்.

**மொத்த சொத்துப் புரள்வு**

$$\text{விகிதம்} = \frac{\text{மொத்த விற்பனை}}{\text{மொத்தச் சொத்துக்கள்}}$$

இவ் நிதி விகிதங்களை ஓர் உதாரணத்தின் மூலம் நோக்குவோம்.

**சாளினி கம்பனியின் 2017.03.31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| விபரம் | தொகை | தொகை |
|---|---|---|
| விற்பனை | | 300,000 |
| ஆரம்ப இருப்பு | 20,000 | |
| கொள்வனவு | 210,000 | |
| | 230,000 | |
| இறுதி இருப்பு | (30,000) | |
| விற்பனைக்கிரயம் | | (200,000) |
| மொத்த இலாபம் | | 100,000 |
| ஏனைய இலாபம் | | 15,000 |
| | | 115,000 |
| விற்பனை விநியோகக் கிரயம் | 13,000 | |
| நிர்வாகச் செலவு | 16,000 | |
| ஏனைய செலவு | 10,000 | |
| நிதிச் செலவு | 6000 | (45,000) |
| வரிக்கு முன் இலாபம் | | 70,000 |
| (-) வருமான வரி | | (20,000) |
| ஆண்டுக்கான இலாபம் | | 50,000 |

**சாளினி கம்பனியின் 2017.03.31இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று**

| விபரம் | கிரயம் | தேய்வு | தேறியது |
|---|---|---|---|
| நடைமுறை அல்லாச் சொத்து | | | |
| கட்டிடம் | 200,000 | (50,000) | 150,000 |
| இயந்திர உபகரணம் | 150,000 | (30,000) | 120,000 |
| | 350,000 | (80,000) | 270000 |
| நன்மதிப்பு | | | 50000 |
| நடைமுறைச் சொத்து | | | |
| சரக்கிருப்பு | | 30,000 | |
| கடன்பட்டோர் | | 20,000 | |
| முற்பண செலவு | | 10,000 | |
| காசு | | 20,000 | 80,000 |
| மொத்த சொத்துக்கள் | | | 400,000 |

| | | | |
|---|---|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | | | |
| 10% சாதாரண பங்கு | | 140,000 | |
| முன்னுரிமைப் பங்கு | | 100,000 | 240,000 |
| ஒதுக்கம் | | | |
| இலாபநட்டக் கணக்கு மீதி | | | 60,000 |
| நடைமுறை அல்லாப் பொறுப்பு | | | |
| வங்கிக் கடன் | | 20,000 | |
| தொகுதிக் கடன் | | 40,000 | 60,000 |
| நடைமுறைப் பொறுப்பு | | | |
| கடன் கொடுத்தோர் | | 17,000 | |
| சென்மதி உண்டியல் | | 6,000 | |
| அட்டுறு செலவு | | 4,000 | |
| செலுத்த வேண்டிய கூலி | | 13,000 | 40,000 |
| மொத்த மூலதனமும் பொறுப்புக்களும் | | | 400000 |

**மேலதிகத் தகவல்**

1. விற்பனையில் 40% உடன் காசு விற்பனை ஆகும்.
2. வருடாந்த தேய்வு 9000
3. நிதிச் செலவு என்பது வட்டியைக் குறிக்கும்
4. பங்கொன்றின் விலை 20/= ஆகும். பங்கொன்றிற்கான இலாபம் 2/= ஆகும்.

வேண்டப்படுவது

திரவத்தன்மை விகிதங்கள்

இலாபத்தன்மை விகிதங்கள்

இணைப்பு விகிதங்கள்

செயற்பாட்டு விகிதங்கள்

**திரவத்தன்மை விகிதம்**

1. நடைமுறை விகிதம் $= \frac{\text{நடைமுறைச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$

$= \frac{80,000}{40,000}$

$= 2 : 1$

2. விரைவு விகிதம் $= \frac{\text{விரைவுச் சொத்து}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$

$= \frac{40,000}{40,000}$

$= 1 : 1$

3. காசு விகிதம் $= \frac{\text{காசு + சந்தைப்பிணைகள்}}{\text{நடைமுறைப் பொறுப்பு}}$

$= \frac{20,000}{40,000}$

= 0.5 தடவை

4. கால அளவீட்டு

விகிதம் $= \frac{\text{திரவச் சொத்து}}{\text{சராசரி அன்றாட செயற்பாட்டு செலவு}}$

$= \frac{40,000}{630.13}$

= 63.47

= **63 நாட்கள்**

**செயற்பாட்டு விகிதம்**

1. சரக்குப் புரள்வு விகிதம் $= \frac{\text{விற்பனைக் கிரயம்}}{\text{சராசரி இருப்பு}}$

$= \frac{200,000}{25000}$

= **8 தடவை**

2. கடன்பட்டோர் புரள்வு விகிதம் $= \frac{\text{கடன்விற்பனை}}{\text{சராசரி கடன்பட்டோர்}}$

$= \frac{180,000}{20,000}$

= **9 தடவை**

3. மொத்த சொத்து புரள்வு விகிதம் $= \frac{\text{விற்பனை}}{\text{மொத்தச் சொத்து}}$

$= \frac{300,000}{400,000}$

= **0.75 தடவை**

**இணைவு விகிதம்**

1. கடன் விகிதம் $= \frac{\text{கடன் மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}} \times 100\%$

$= \frac{160,000}{360\,000} \times 100\%$

$= 44.44\%$

2. உரிமை விகிதம் $= \frac{\text{உரிமை மூலதனம்}}{\text{மொத்த மூலதனம்}} \times 100\%$

$= \frac{200,000}{360,000} \times 100\%$

$= 55.55\%$

3. வட்டி காப்பு விகிதம் $= \frac{\text{தேறிய இலாபம்} + \text{வட்டி}}{\text{வட்டி}}$

$= \frac{70,000 + 6000}{6000}$

$= \frac{76000}{6000}$

= 12.60 தடவை

4. கடன் உரிமை விகிதம் $= \frac{\text{கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}}$

$= \frac{160,000}{200,000}$

= 0.8 : 2

**இலாபத்தன்மை விகிதம்**

1. மொத்த இலாப விகிதம் விகிதம்

$= \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை}} \times 100\%$

$= \frac{100,000}{300,000} \times 100\%$

$= 33.3\%$

2. தேறிய இலாப விகிதம் $= \frac{\text{தேறிய இலாபம்}}{\text{விற்பனை}} \times 100\%$

$= \frac{70,000}{300,000}$

$= 23.3\%$

3. மொத்த சொத்துக்கள் மீதான வருவாய் வீதம்

$= \frac{\text{வரிக்குமுன் இலாபம்} + \text{வட்டி}}{\text{மொத்த சொத்து}} \times 100\%$

$= \frac{70,000 + 6000}{400,000} \times 100\%$

$= 19\%$

4. உரிமை மூலதனத்திற்கான திரும்பல் விகிதம்

= வரி, முன்னுரிமை பங்கு

$\frac{\text{கழித்த இலாபம்}}{\text{உரிமை மூலதனம்}} \times 100\%$

$= \frac{40000}{200\,000} \times 100\%$

$= 20\%$

**உசாத்துணை**

ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி - வணிகக்கல்வி
உயர் கணக்கீடு - 2 (MR.K.B.Bajendren)

*இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில்*
*நங்கூரம் இல்லாத படகு போன்றது.*

# வங்கி கணக்கிணக்கக் கூற்று

**அர்ச்சனா.கு**
*A/L Com 2017*

வணிக வங்கியில் நடைமுறை வைப்பினை வைத்திருக்கின்ற வியாபார நிறுவன மொன்றுக்கு வணிக வங்கியால் அனுப்பப்படுகின்ற வங்கி கூற்றிலுள்ள வங்கி மீதிக்கும் வியாபார நிறுவனத்தினால் தயாரிக்கப்படுகின்ற கணக்கிலுள்ள வங்கி மீதிக்குமிடையில் வேறுபாடு காணப்படும் போது அவ் வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து இவ்விரு மீதிகளையும் இணங்கிக் கொள்வதற்காக தயாரித்துக் கொள்ளப்படும் கூற்று வங்கி கணக்கிணக்கக் கூற்று ஆகும்.

### வங்கிக் கூற்று

வணிக வங்கியில் நடைமுறை வைப் பினை வைத்திருக்கின்ற வியாபார நிறுவன மொன்றுக்கு வணிக வங்கியினால் நிறுவன வைப்புத் தொடர்பான சகல தகவல்களையும் உள்ளடக்கி மாதம் தோறும் அனுப்பி வைத்துக் கொள்ளப்படும் ஓர் கடிதம் வங்கிக் கூற்று ஆகும்.

### வங்கி கூற்றில் உள்ளடங்கப்பட்டிருக்கும் விடயங்கள்

1. *குறிப்பிட்ட காலத் தொடக்கத்தில் நிறுவனத்தின் பெயரில் வங்கியில் மீதியாகவுள்ள பணத்தொகை*
2. *குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறுவனத்தால் வங்கியில் மேலதிகமாக வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தொகை*
3. *குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறுவனத்தால் வங்கியிலிருந்து மீள எடுத்துக் கொள்ளப் பட்டுள்ள பணத் தொகை*
4. *நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி வசூலித்த வருமானம்.*
5. *நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி செலுத்திய செலவீனம்*
6. *வங்கி அறவிட்ட செலவீனம்*
7. *நிறுவன கடன்பட்டோனின் வங்கியில் நேரடி வைப்பு*

### வங்கி கூற்றில் உள்ளடங்கப்படாத விடயங்கள்

1. மாற்றப்படாத காசோலை
2. வசூலிக்கப்படாத காசோலை

### வங்கி கூற்றின் செலவுப் பக்கத்தில் [வரவு நிரலில்] உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள்

- *குறிக்கப்பட்ட காலப்பகுதியில் நிறுவனத்தால் வங்கியில் மேலதிகமாக வைப்பிலிடப் பட்டுள்ள பணத்தொகை.*
- *நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி வசூலித்த வருமானம்.*
- *நிறுவன கடன்பட்டோனின் வங்கியில் நேரடிவைப்பு*
- *வசூலிக்கப்பட்ட காசோலை*

### வங்கி கூற்றின் வரவுப் பக்கத்தில் [பற்று நிரலில்] உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள்

- *குறிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் நிறுவனத்தால் வங்கியிலிருந்து மீள எடுத்து கொள்ளப் பட்டுள்ள பணத்தொகை*
- *நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி செலுத்திய செலவினம்*
- *வங்கி அறவிட்ட செலவினம்*
- *மாற்றப்பபட்ட காசோலை*

### மாற்றப்படாத காசோலை

வியாபார நிறுவனத்தினால் குறிப்பிடப்பட்ட கடன் கொடுத்தோனுக்கு வரைந்து கொடுக்கப்பட்ட காசோலையானது அக் குறிப்பிட்ட கடன் கொடுத் தோனால் வங்கியில் இன்னமும் ஒப்படைத்து பணமாக மாற்றப்படாத ஓர் நிலையினை எடுத்துக் கூறுவது மாற்றப்படாத காசோலை ஆகும்.

### மாற்றப்படாத காசோலைக்கான மறு பெயர்கள்

கொடுப்பனவிற்காக இன்னமும் வங்கியில் சமர்ப்பிக்கப்படாத ch, வங்கியில் பணமாக மாற்றப் படாத காசோலை, வரவு வைக்கப்படாத காசோலை

### வசூலிக்கப்படாத காசோலை

வியாபார நிறுவனத்தினால் வங்கியில் தனது கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ள காசோலைக் குரிய பணத்தினை வங்கியானது இன்னமும் வசூலித்து நிறுவன வங்கி கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாத ஓர் நிலையினை எடுத்துக் கூறுவது வசூலிக் கப்படாத காசோலையாகும்.

### வசூலிக்கப்படாத காசோலையின் மறு பெயர்கள்

வங்கியால் பணமாக மாற்றப்படாத காசோலை
செலவு வைக்கப்படாத காசோலை
காசு எய்தப் பெறாத காசோலை
தீர்வையாகாத காசோலை
கைத்தேறா காசோலை
நிலுவையான காசோலை

### நிலையான கட்டளை or நிலபரக்கட்டளை

வணிக வங்கியில் நடைமுறை வைப்பினை வைத்திருக்கின்ற வியாபார நிறுவனத்தினால் வணிக வங்கி மீது பிறப்பிக்கப்படுகின்ற ஓர் உத்தரவு or கட்டளை or நிபந்தனை நிலையான கட்டளையாகும்.

### காசேட்டின் படி வங்கி மீதியும் வங்கி கூற்றுப் படி வங்கி மீதியும் வேறுபடுவதற் கான காரணங்கள்

- *மாற்றப்படாத காசோலை*
- *வசூலிக்கப்படாத காசோலை*
- *நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி வசூலித்த வருமானம்*
- *நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி செலுத்திய செலவினம்*
- *வங்கி அறவிட்ட செலவினங்கள்*
- *நிறுவன கடன்பட்டோனின் நேரடிவைப்பு*

### காசேட்டின் படி வங்கி மீதியினை விட வங்கி கூற்றுப்படி வங்கி மீதியானது அதிகமாக இருப்பதற்கான காரணங்கள்

*மாற்றப்படாத காசோலை*
*நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி வசூலித்த வருமானம்.*
*நிறுவன கடன்பட்டோனின் நேரடி வைப்பு*

### காசேட்டின் படி வங்கி மீதியினை விட வங்கிக் கூற்றுப்படி வங்கி மீதியானது குறைவாக இருப்பதற்கான காரணங்கள்

*வசூலிக்கப்படாத காசோலை*
*நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி செலுத்திய செலவினம்*
*வங்கி அறவிட்ட செலவினங்கள்*

### கசேட்டின் படி வங்கி மேலதிகப் பற்றினை விட வங்கிக்கூற்றுப்படி வங்கி மேலதிக பற்றானது அதிகமாக இருப்பதற்கான காரணங்கள்

*வசூலிக்கப்படாத காசோலை*
*நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி செலுத்தி செலவினம்*
*வங்கி அறவிட்ட செலவினங்கள்*

### திருத்திய காசேடு அல்லது சீராக்கிய காசேடு

வியாபார நிறுவனத்தினால் காசேட்டில் பதியப்படாத விடயங்களை பதிவு செய்து கொள்வ தற்கும் பிழையாகப் பதியப்பட்டுள்ள விடயங்களை

திருத்தம் செய்து கொள்வதற்குமாக வியாபார நிறுவனத்தினால் பராமரித்து வரப்படும் ஓர் ஏடு திருத்திய காசேடு ஆகும்.

### திருத்திய காசேட்டினை தயாரிப்பதற்கு தேவைப் படும் மீதி

காசேட்டின் படி வங்கி மீதி அல்லது காசேட்டின் படி வங்கி மேலதிகப் பற்று

### திருத்திய காசேட்டில் பதியப்படும் விடயங்கள்

நிலையான கட்டளைகளுக்கமைய வங்கி வசூலித்த வருமானம், நிலையான கட்டளை களுக்கமைய வங்கி செலுத்திய செலவினம், வங்கி அறவிட்ட செலவினம், நிறுவன கடன்பட் டோர் நேரடி வைப்பு, பங்குலாபம்

### திருத்திய காசேட்டில் பதிய முடியாத விடயங்கள்

மாற்றப்படாத காசோலை

வசூலிக்கப்படாத காசோலை

வங்கி விட்ட தவறு

### வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்து கொள்ளுவதற்கு அவசியமாகும் மூல ஆவணங்கள்

காசு வைப்புத்துண்டு

காசோலை வைப்புத்துண்டு

காசோலை அடியிதழ்

வங்கி கூற்று

**உசாத்துணை நூல்**

- வங்கிக் கணக்கிணக்கக் கூற்று வெளியீடு (S.தவா)

**குறிப்பு :** புதிய பாடத்திட்டத்திற்கு அமைய நிறுவனங்களில் காசு, வங்கிக் கணக்குகள் தனித்தனியாக பேணப்படும் அதே வேளையில் 2019 இல் உயர்தரத்தில் தோற்ற உள்ள மாணவர்கள் காசுக்கணக்கிற்கு பதிலாக காசு கட்டுப்பாட்டுக் கணக்கில் காசு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் பதிவு செய்தல் வேண்டும் என்பதை நினைவூட்டுதல் அவசியமாகும்.

*ஒருவன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல*
*விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை*

# ஒதுக்கங்களும் ஏற்பாடுகளும்
# Reserves and Provisions

**மதுசனா.பா**
*A/L Com 2017*

## ஒதுக்கங்கள் (Reserves)

குறித்த ஒரு சட்டத்திற்கு அமைய அல்லது ஏனைய தேவைகளுக்காக உழைத்த இலாபங்கள் அல்லது மிகைகளிலிருந்து நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்படும் தொகை ஒதுக்கம் எனப் படும்.

இவ் ஒதுக்கங்களை 02 வகைப்படுத்தலாம்.

**01) மூலதன ஒதுக்கம்**

உ+ம் :- **உருவாக்க முன் உழைத்த இலாபம்**
**நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு மிகை**
**தொகுதி கடன் மீட்பு ஆழ்நிதி ஒதுக்கம்**

**02) வருமான ஒதுக்கம்**

உ+ம்:- **பொது ஒதுக்கம்**
**இலாபநட்ட க/கு மிகை**
**பங்குலாபம் சமம்படுத்தும் நிதி**
**நிலையான சொத்து பிரதியிடுகை ஒதுக்கம்**

## மூலதன ஒதுக்கம் (Capital Reserves)

மூலதன ஒதுக்கம் என்பது பங்குதாரர்களுக்கு எச் சந்தர்பத்திலேனும் பங்குலாபமாக வழங்க முடியாத ஒதுக்கங்களை குறிக்கும்.

## உருவாக்க முன் உழைத்த இலாபம் (Pre - incroporation profits)

தனிவியாபாரம், பங்குடமை நிறுவனம் போன்றவற்றை வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்ட திகதிக்கும் வரையறுக்கப்பட்ட கம்பனியாக உருவாக்கப் பட்டுள்ளது என கம்பனி பதிவாளரால் அறிவிக்கப் பட்ட திகதிக்கும் இடையே நிறுவனம் உழைத்த இலாபம் உருவாக்க முன் உழைத்த இலாபம் எனப்படும்.

இது பின்வரும் தேவைகளுக்கு பயன்படுத்த முடியும்

*தொடக்க செலவை பதிவழிப்பதற்கு*
*உபகாரப் பங்கு வழங்குவதற்கு*
*மூலதன குறைப்பு திட்டத்திற்கு*
*நன்மதிப்பை பதிவழிப்பதற்கு*

## நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு மிகை (fixed assets Revalaation surpuls)

நிலையான சொத்துக்களை நடை முறைச் சந்தை விலையில் கணக்கேடுகளில் காட்டும் நோக்கில் மறுமதிப்பீடு செய்யும் போது அம் மறுமதிப்பீட்டு பெறுமதியானது புத்தக பெறுமதி யிலும் பார்க்க கூடுதலாக இருப்பின் அம் மிகை நிலையான சொத்து மீள்மதீப்பிட்டு மிகை எனப் படும்.

*இது பின்வரும் தேவைகளுக்கு பயன்படும்*

- *உருவாக்க முன் உழைத்த இலாபம் எத்தேவைக்களுக்கு பயன்படுத்தப்படுகின்றதோ அத்தேவைகளுக்கு பயன்படுத்த முடியும்.*
- *கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உரிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யுமிடத்து பங்குலாபமாக வழங்கலாம்.*

## தொகுதிக்கடன் மீட்பு ஆழ் நிதி ஒதுக்கம்

1) *தொகுதிக்கடன் பத்திரங்களினை மீட்கும் நோக்கில் இலாபங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் தொகை தொகுதிக்கடன் மீட்பு ஆழ் நிதி ஒதுக்கம் எனப்படும்.*
2) *அத்தொகை வருமானம் தரத்தக்க முதலீடுகளில் முதலீடு செய்யப்படும்*

***3) தொகுதிகடன்கள் மீட்பு செய்த பின் இந் நிதியில் மீதி இருப்பின் பொது ஒதுக்கத் திற்கு மாற்றப்படும்.***

### வருமான ஒதுக்கம்

பங்குதாரர்களுக்கு பங்குலாபமாக வழங்க கூடிய ஒதுக்கங்கள் வருமான ஒதுக்கம் எனப் படும்.

### பொது ஒதுக்கம் (General Reserve)

நோக்கம் எதுவுமின்றி தேவைக்கேற்ப பயன்படுத்த முடியுமென ஒதுக்கப்பட்ட தொகை பொது ஒதுக்கம் எனப்படும்.

### பங்குலாபம் சமப்படுத்தும் நிதி (Dividend equalized fund)

குறைந்த இலாபம் வரும் ஆண்டுகளில் பங்குலாபத்தினை வழங்கும் நோக்கில் இலாபம் அதிகம் வரும் காலங்களில் ஒதுக்கப்படும் தொகை பங்குலாபம் சமப்படுத்தும் நிதி எனப்படும்

### நிலையான சொத்து பிரதியிடுகை ஒதுக்கம்

நிலையான சொத்தை கொள்வனவு செய்ய வென இலாபத்திலிருந்து ஒதுக்கப்படும் தொகை நிலையான சொத்து பிரதியிடுகை ஒதுக்கம் எனப்படும்.

### ஏற்பாடுகள் (Provisions) பொறுப் பொதுக்கம்

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நட்டம் அல்லது பொறுப்பு ஒன்றிற்காக நிச்சயமற்ற வகையில் தீர்மானிக்கப்பட்ட தொகை ஒன்றை தேறிய இலாபத்திற்கு எதிராக சாட்டுதல் செய்தல் ஏற்பாடு எனப்படும்.

### ஏற்பாட்டிற்கும் ஒதுக்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகள்

**ஏற்பாடு**

- ***இலாபநட்ட கணக்கிலிருந்து உருவாக் கப்படும்***
- ***பாதுகாப்பு எண்ணக்கருவிற்கமைய கட்டாயம் செய்யப்படவேண்டும்.***
- ***நிதிநிலைமைக்கூற்றில் குறித்த சொத்துகளி லிருந்து கழித்து காட்டப்படும்.***
- ***இலாபம் இல்லாவிடினும் ஏற்பாடு செய்யப் படும்.***

**ஒதுக்கம்**

- ***எதிர்கால நட்ட அச்சத்திற்காக மேற் கொள்ளப்படும்***
- ***இலாபநட்ட பகிர் கணக்கிலிருந்து உருவாக் கப்படும்.***
- ***இயக்குனரின் முடிவிற்கமைய செய்யப்படும்.***
- ***நிதிநிலைமைக்கூற்று ஒதுக்கங்களின் கீழ் காட்டப் படும்.***
- ***இலாபம் இல்லாவிட்டால் ஒதுக்கங்கள் செய்யபடமாட்டாது.***
- ***எதிர்கால தேவைக்காக மேற்கொள்ளப் படுவது.***

***Reference Internet***

*யாருக்காகவும் உன்னை மாற்றிக் கொள்ளாதே*
*ஒரு வேளை, மாற நினைத்தால் ஒவ்வொரு*
*மனிதர்களுக்காகவும் நீ மாற வேண்டி ஏற்படும்*

# இலங்கை கணக்கீட்டு நியமம் - 17

# (LKAS - 17) குத்தகை

**டினேக்கா.K**
*A/L 2017 com*

எந்தவொரு நிறுவனமும் தனது செயற் பாட்டை மேற்கொள்ள சொத்துக்கள் (நடை முறை அல்லா சொத்துக்கள்) அவசியமாகிறது. அதற்காக சொத்துக்களை கொள்வனவு செய்ய தீர்மானிக்கும் போது அது தொடர்பாக ஏற்படும் சவால்கள் மற்றும் ஆபத்துக்களை நிவர்த்தி செய்யும் முகமாக உருவாக்கப்பட்டதே குத்தகை ஆகும். விளக்க மாகக் கூறின் ஒரு வாடிக்கையாளரினால் ஒரு சொத்தை அல்லது சொத்துத் தொகுதி ஒன்று குத்தகை வழங்குனரின் உடன் படிக்கைக்கு அமைய குறித்த காலம் முடியும் வரை பயன் படுத்தும் உரிமையினை ஏதேனும் கொடுப் பனவுக்கமைய பெற்றுக் கொள்ளப்படுமாயின் அது குத்தகை எனப்படும்.

இக் குத்தகையானது சொத்தின் இடர் மற்றும் அனுகூலத்தைப் பொறுப்பேற்கும் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இரு வகைப்படும்.

அவையாவன :- 1. நிதிக்குத்தகை
2. செயற்பாட்டு குத்தகை

நிதிக் குத்தகை எனப்படுவது யாதென்றால் குத்தகை விற்பனையாளரிடமிருந்து குறித்த சொத்தொன்றின் இடர், அனுகூலங்கள் குத்தகை கொள்வனவாளரிடம் மாற்றப்படுமாயின் அது நிதிக்குத்தகை எனப்படும்.

நிதியல்லாத ஏனைய அனைத்துக் குத்தகை யும் செயற்பாட்டுக் குத்தகை எனப்படும். இக் குத்தகையில் பெறும் சொத்துக்களை நிதிநிலமைக் கூற்று சொத்தாக பதிய முடியாது. ஏனென்றால் அச்சொத்து தொடர்பான இடர், அனுகூலங்கள் குத்தகை கொள்வனவாளரை சார்ந்தது இல்லை. எனவே செயற்பாட்டுக் குத்தகையில் குத்தகைப் பணம் ஓர் செலவீனமாக கருதப்படும்.

செயற்பாட்டு குத்தகைக்கான இரட்டைப் பதிவு
குத்தகை செலவு க/கு வரவு
காசு / வங்கி க/கு செலவு

**நிதிக்குத்தகைக்கான கணக்கு பதிவுகள்**

01) சொத்தினை நியாயமான பெறுமானம் அல்லது காசு விலையில் பதியும் போது
குறித்த சொத்து க/கு வரவு
குத்தகை விற்பனையாளர் க/கு செலவு

02) ஆரம்ப வைப்புக் கட்டணம் செலுத்தும் போது
குத்தகை விற்பனையாளர் க / கு வரவு
காசு / வங்கிக் க / கு செலவு

03) பெறுமானத் தேய்வு கணிப்பிடும் போது
பெறுமானத் தேய்வு க / கு வரவு
பெறுமான தேய்வு ஏற்பாட்டு க / கு செலவு

04) குத்தகை வட்டி செலுத்தும் போது
குத்தகை வட்டி க / கு வரவு
குத்தகை விற்பனையாளர் க / கு செலவு

05) தவணைப் பணம் செலுத்தும் போது
குத்தகை விற்பனையாளர் க / கு வரவு
காசு /வங்கிக் க / கு செலவு

குறிப்பு :- குத்தகை தவணைக் கட்டணத்தினுள்

வட்டித் தொகையும் உள்ளடங்கலாக தரப்படின் அத்தொகை தவணைக்கட்டணத்திலிருந்து வட்டியானது பிரிக்கப்பட்டு வருமானக் கூற்றில் நிதிச் செலவின் கீழ் காட்டப்பட வேண்டும்.

புத்தகப் பதிவின் போது குத்தகை கடன் கொடுத்தோர், வட்டி ஏடுகள் கவனமாக பதிய வேண்டியவை ஆகும்.

### உதாரணக் கணக்கு

வரையறுத்த திருசியா பொதுக்கம்பனி 01.04.2015 இல் ரூபா.2000000 கிரயமான இயந்திரத்தை நிதிக் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தது. இத் தொகையில் 25% ஆரம்ப வைப்புப் பணமாக செலுத்தப்பட்டது. மிகுதி தொகை 05 வருட குத்தகை கால அடிப்படையில் மீள செலுத்தப்படும். வருடாந்த தவணைப்பணம் 350000/= ஆகும். ஒவ்வொரு வருட முடிவிலும் குத்தகை தவணைப்பணம் வட்டியுடன் செலுத்தப் படும்.

குத்தகை வட்டிப்பணம்

| | |
|---|---|
| 31.03.2016 | 90000 |
| 31.03.2017 | 60000 |
| 31.03.2018 | 50000 |
| 31.03.2019 | 30000 |
| 31.03.2020 | 20000 |

இதன் பாவனை காலம் 05 வருடங்கள் ஆகும்.

01. ***31.03.2016 இல் குத்தகை தொடர்பான நாட்குறிப்புக்கள்***

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 01. இயந்திர க/கு | 2000000 | |
| குத்தகை விற்பனையாளர் க/கு | | 2000000 |
| (நியாயமான பெறுமதியில் பதியும் போது) | | |
| 02. குத்தகை கடன் கொடுத்தோர் க/கு | 500000 | |
| காசு க/கு | | 500000 |
| (ஆரம்ப பணம் செலுத்தும் போது) | | |
| 03. குத்தகை வட்டி க/கு | 90000 | |
| குத்தகை கடன் கொடுத்தோர் க/கு | | 90000 |
| (1ம் வருட குத்தகை வட்டி பதியும் போது) | | |
| 04. குத்தகை கடன் கொடுத்தோர் க/கு | 350000 | |
| காசுக் க/கு | | 350000 |
| (1ம் வருட தவணைப் பணம் செலுத்தும் போது) | | |
| 05. இயந்திர தேய்வு க/கு | 400000 | |
| இயந்திர தேய்வு ஏற்பாட்டு க/கு | | 400000 |
| (இயந்திர பெறுமான தேய்வை பதியும் போது) | | |

***02. 31.03.2016 இல் குத்தகை கடன் கொடுத்தோன் கணக்கு***

***குத்தகை விற்பனையாளர் க / கு***

| | | | |
|---|---|---|---|
| காசு | 500000 | இயந்திரம் | 2000000 |
| காசு | 350000 | வட்டி | 90000 |
| மீ/செ | 1240000 | | |
| | 2090000 | | 2090000 |
| | | மீ/வ | 1240000 |

03. 31.03.2016 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்பான குத்தகை மொத்த செலவீனம்

| | |
|---|---|
| இயந்திரம் தேய்வு | 400 000 |
| குத்தகை வட்டி | 90 000 |
| | 490 000 |

04. 31.03.2016 நிதி நிலமைக் கூற்றில் நடைமுறை அல்லாபொறுப்பின் கீழும் நடைமுறை பொறுப்பின் கீழும் காட்டும் குத்தகை கடன் கொடுத்தோனின் பெறுமதி.

| | |
|---|---|
| 31.03.2016 நடைமுறை அல்லா பொறுப்பு | |
| குத்தகை கடன்கொடுத்தோன் | 950 000 |
| (350 000 x 3 - 100 000) | |
| 31.03.2016 நடைமுறை பொறுப்பு | |
| குத்தகை கடன் கொடுத்தோன் | 290 000 |
| (350 000 - 60 000) | |
| மொத்தப் பொறுப்பு | 1240 000 |

**உசாத்துணை**

- W.WW .mylearing.lk
- The Essential Guide

*தந்தையை மதித்தவன் தருமத்தை செய்வான்*
*படிக்க மறுப்பவன் பரிதவித்து அலைவான்*

# மீள் மதிப்பீடு

**லூர்த்திகா.அ**
*A/L com 2017*

மீள்மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனம், பொறி, உபகரணங்களை மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதியில் இருந்து திரண்ட பெறுமானத் தேய்வை கழித்து ஐந்தொகையில் காட்ட முடியும்.

மீள் மதிப்பு சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட வேண்டியவை

1. ***மீள்மதிப்பிடப்பட்ட சொத்துகளும் அவற்றின் விபரம்***
2. ***மீள்மதிப்பீட்டால் ஏற்பட்ட மூலதன ஒதுக்கம் அல்லது இலாப நட்ட கணக்கில் பதிவழித்த தொகை.***
3. ***மீள்மதிப்பீட்டால் பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தில் ஏற்பட்ட மாற்றம்.***

மீள் மதிப்பீட்டால் சொத்துக்களுக்கு மிகைப் பெறுமதியும் உருவாக்கலாம் பற்றாக்குறை பெறுமதியும் உருவாக்கலாம்.

## மீள்மதிப்பீட்டுமிகை

மீள்மதிப்பீட்டு மிகையானது முற்றடக்க வருமானக்கூற்றில் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தின் கீழ் காட்டப்படல் வேண்டும்.

கடந்த காலம் மீள்மதிப்பீடு செய்து குறை ஏற்பட்டால் செலவாக முற்றடக்க வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட பின் அச்செலவு களுக்காக தற்போதைய மீள்மதிப்பீட்டு மிகை எதிரீடு செய்யப்பட்டு ஏனைய செயற்பாட்டு வருமானமாக காட்டப்படல் வேண்டும்.

***உதாரணம் 01***

31.03.2017 இல் கட்டிட மீதி ரூபா 3000 000, 31.03.2017 இல் கட்டிட பெறுமானத் தேய்வு ஏற்பட்டு மீதி ரூ 500 000, 31/03/2017இல் மீள்மதிப்பீட்டு பெறுமதி 2800000 ரூபா 31/03/2016 இல் கட்டிட மீள் மதிப்பீட்டு குறைவு 100 000 ரூபா.

| | | |
|---|---|---|
| கட்டிட தேய்வு ஏற்பாட்டு கணக்கு வரவு | 500 000 | |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு செலவு | | 200 000 |
| கட்டிட கணக்கு செலவு | | 200 000 |
| இலாப நட்டக் கூற்று கணக்கு செலவு | | 100 000 |

***உதாரணம் 02***

காணி 31/03/2015 மீதி 12000 000 30/06/2014 இல் காணி மீள்மதிப்பீட்டினால் ரூ 1000 000 மிகையாக மதிப்பிடப்பட்டது. அதே வேளை இக்காணி மீள்மதிப்பீடு செய்தமையால் 200 000 ரூபா மீள்மதிப்பீட்டு நட்டம் ஏற்பட்டுள் ளது.

இதற்கான நாட்டுக் குறிப்பு பதிவு

| | | |
|---|---|---|
| காணி கணக்கு வரவு | 1000 000 | |
| இலாப நட்டக் கூற்று கணக்கு செலவு | | 200 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் கணக்கு செலவு | | 800 000 |

## மீள் மதிப்பீட்டு குறைவு

மீள்மதிப்பீட்டு குறைவான ஒரு செலவீனமாக/ நட்டமாக முற்றடக்க வருமானக் கூற்றில் ஏனைய செயற்பாட்டு கிரயத்தில் கீழ் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

கடந்த காலப்பகுதியில் குறித்த சொத்து தொடர்பாக மீள்மதிப்பீட்டு மிகை வெளிக்காட்டப் பட்டிருந்தால் அம்மிகைக்கு எதிராக பதிவழிக்கப் படல்வேண்டும்.

***உதாரணம் 01***

31/03/2017 மோட்டார் வாகன மீதி ரூ 500,000, 31/03/2017 இல் மோட்டார் வாகன பெறுமான தேய்வு ஏற்பாட்டு மீதி 200 000, 31.03.2017 மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு பெறுமதி 200000 31/03/2017 இல் முடிவடைந்த காலப் பகுதியில் ஏனைய வருமானமாக இனங் காணப்பட்ட மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு மிகை ரூ 60000

இதற்கான நாட்குறிப்பு பதிவு?

| | | |
|---|---|---|
| மோட்டார் தேய்வு ஏற்பாட்டு கணக்கு வரவு | 200 000 | |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு வரவு | 60 000 | |
| இலாப நட்டக் கூற்று கணக்கு வரவு | 40 000 | |
| மோட்டார் வாகன கணக்குச் செலவு | | 300 000 |

***உதாரணம் 02***

காணியானது 31/03/2017 மீதி 5000 30/06/2016 இல் காணி மீள்மதிப்பீட்டினால் 400 குறையாக மதிப்பிடப்பட்டது. அதே வேளை இக்காணி கடந்த ஆண்டில் மீள்மதிப்பீடு செய்தமையால் 200 மிகை ஏற்பட்டுள்ளது.

இதற்கான நாட்குறிப்பு பதிவு

| | | |
|---|---|---|
| காணி மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு வரவு | 200 | |
| லாப நட்டக் கூற்று கணக்கு வரவு | 200 | |
| காணி கணக்கு செலவு | | 400 |

மீள்மதிப்பீட்டு கணக்கும் அதற்கான உதாரணங்களும்

***உதாரணம் 05***

31/12/2017 இல் பொறியின் கிரயம் 500 000
31/12/2017 இல் திரண்ட பெறுமானத் தேய்வு 200 000

1. 31/12/2017 இல் பொறியின் பெறுமதி 250 000/= என மதிப்பிடப்பட்டது.
2. 31/12/2017 இல் நிதிநிலமைக் கூற்றில் காட்டப்படும் பெறுமதி?

முற்றடக்க வருமானக் கூற்றில் காட்டப்படும் தொகை?

1. பொறியின் கிரயம் 250 000/= என வெளிப்படுத்தப்படும்.
2. பொறியின் கிரயம் 500 000

| | |
|---|---|
| (-) பெறுமதி தேய்வு ஏற்பாடு | (200 000) |
| மு/கொண்டு செல் பெறுமதி | 300 000 |
| நட்டம் | - 5000 |
| மீள் மதிப்பீட்டு பெறுமதி | 250000 |

மீள் மதிப்பீட்டு நட்டம் 50 000 ரூபா முற்றடக்க வருமானக் கூற்றில் ஏனைய செயற் பாட்டு கிரயத்தினுள் காட்டப்படும்.

***உதாரணம் 6***

Jeevan Company இன் தகவல் வருமாறு 31/12/2016 இல் பொறி தொகுதியின் புத்தக பெறுமதி 500 000, 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நவீன பொறி தொகுதியின் வருகை காரணமாக குறித்த பொறி தொகுதி 100 000 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டது. 31.12.2017 இல் குறித்த பொறி தொகுதியின் புத்தக பெறுமதி 400 000/= ஆக இருந்தது ஆனால் இதனுடைய சந்தை பெறுமதி 650 000 ரூபா ஆகும். இதனை எவ்வாறு நிதிக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டும்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட 100000/= நட்டத்தை இந்த ஆண்டு ஏற்பட்ட 250 000/= மிகையிலிருந்து எதிரீடு செய்து இந்த ஆண்டு நிதிக்கூற்றில் மீள் மதிப்பீட்டு ஒதுக்கமாக 150000 ஐயும் 100000/= மிகையை ஏனைய செயற்பாட்டு கிரயத்தில் கழித்தும் பொறி மீதியுடன் 250 000ஐ கூட்டியும் காட்டுதல் வேண்டும்.

***உதாரணம் 7***

31/12/2016 இல் பொறி பெறுமதி 500 000 31/12/2016 இல் 750 000 ற்கு மதிப்பிடப்பட்டது. 31.12.2017 இல் நவீன தொழில் நுட்ப வளர்ச்சிக்கு காரணமாக இது 400 000/= என மதிப்பிடப்பட்டது. 31.12.2017 இல் இதன் புத்தக பெறுமதி 700 000/= ஆகும். 31/12/17 இதற்கான பதிவை பின்வரும் கணக்குகளில் காட்டுக.

**பொறி தொகுதி கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| மீ/வ | 700 000 | மீள் மதிப்பீடு | 250 000 |
| | | வருமானக்கூற்று | 50 000 |
| | | மீ/செ | 400 000 |
| மீ/வ | 70 000 | | 700 000 |
| | 400, 000 | | |

**மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| | | மீ/வ | 250 000 |
| பொறி தொகுதி | 250 000 | | |
| | 250 000 | | 250 000 |

**இலாப நட்ட கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| பொறி தொகுதி | 50 000 | | |

*C.A (2016).SriLankan Accounting Standards.Colombo Srilanka Chartered Accountants of Srilanka*

*வாழ்க்கைப் படிகளில் மேலே உயரும் போது*
*வழியில் காண்பவருடன் அன்பாக பேசு*
*ஏனெனில் கீழே வரும் போது அவர்களை சந்திக்க நேரிடலாம்*

# பெறுமதி சேர் வரி

**சுதர்சினி.ஞா**
*A/L com 2017*

வாடிக்கையாளரின் நுகர்வின் போது அரசாங்கம் வருமான வரி திணைக்களம் சார்பில் வெவ்வேறு நபர்களால் திரட்டிக் கொள்ளப்படும் ஓர் நேரில் வரியே பெறுமதி சேர்வரியாகும். பொருட்கள் / சேவைகளின் கூட்டப்பட்ட பெறுமதிக்கு வரி விதிக்கப்படுவதால் பெறுமதி சேர் வரி எனப்படும்.

இங்கு இறுதியில் பொருளை / சேவையை நுகர்வதே வரியைத் தாங்கிக் கொள்பவராகின்றார். ஏனெனில் இவ்வரி இறுதி விலையில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

பொருட்கள் சேவைகள் மீதான வரி என்பதற்குப் பதிலாக 2002ம் ஆண்டின் இலக்கம் 14 கொண்ட பெறுமதி சேர் வரிச்சட்டம் அறிமுகப் படுத்தப்பட்டு ஆகஸ்ட் 1ம் திகதியிலிருந்து அமுல் படுத்தப்பட்டது.

பெறுமதி சேர் வரி இரு அடிப்படையில் நோக்கப்படும்.

01. பொருட்கள் / சேவையைக் கொ/வு செய்யும் போது செலுத்தப்படும் VAT. இது உள்ளீட்டு வரி எனவும் இதற்கான கணக்கீட்டு பதிவுகள் பின்வருமாறு,

| | |
|---|---|
| ***கொள்வனவு கணக்கு*** | ***வரவு*** |
| ***VAT கணக்கு*** | ***வரவு*** |
| ***கடன் கொடுனர் கணக்கு*** | ***செலவு*** |

02. பொருட்கள் / சேவைகளை வி/னை செய்யும் போது பெற்றுக் கொள்ளப்படும் VAT. இது வெளியீட்டு வரி எனவும் அழைக்கப்படும். இதற்கான கணக்கீட்டு பதிவுகள் பின்வருமாறு,

| | |
|---|---|
| கடன்படுனர் க/கு/ காசுக் கணக்கு | வரவு |
| விற்பனை கணக்கு | செலவு |
| VAT கணக்கு | செலவு |

## பெறுமதி சேர் வரி கட்டுப்பாட்டு கணக்கு

பெறவேண்டிய VAT செலுத்த வேண்டிய VAT என்பதற்கு தனித்தனி கணக்குகளைப் பேணாது இரண்டையும் தனிக் கணக்கில் பேணுவதற்கான ஓர் முறையே பெறுமதி சேர் வரிக் கட்டுப்பாட்டு கணக்காகும்.

Eg : Kalpana மோட்டார் நிறுவனம் மோட்டார் உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து வி/னை செய்கின்றது 2016 யூன் மாதத்தில் நடைபெற்ற கொள்வனவுகளும் விற்பனைகளும் வருமாறு,

யூன் 2ம் திகதி வழங்குனர்களிடமிருந்து

| | |
|---|---|
| கொள்வனவுகள் (இறக்குமதி) VAT நீங்கலாக | 2000000 |
| (கூட்டுக) 15% VAT | 300000 |
| VAT உள்ளடக்கிய பெறுமதி (காசு செலுத்தப்பட்டது) | 2300000 |

யூன் 06ம் திகதி

| | |
|---|---|
| வாடிக்கையாளருக்கு வி/னை | 1000000 |
| VAT நீங்கலாக (கூட்டுக) VAT 15% | 150000 |
| VAT உள்ளடக்கிய பெறுமதி (காசு பெறப்பட்டது) | 1150000 |

இதற்கான பதிவுகள் பொதுக் குறிப்பேட்டிலும், பேரேட்டுக் க/குகளிலும் பின்வருமாறு அமையும்.

## பொது நாட் குறிப்பேடு

| திகதி | விபரம் | வரவு | செலவு |
|---|---|---|---|
| 2016.06.02 | கொள்வனவு க/கு | 2000000 | |
| | VAT க/கு | 300000 | |
| | காசுக் க/கு | | 2300000 |
| | (காசுக்கு சரக்கு கொள்வனவு 15% VAT உட்பட) | | |
| 2016.06.06 | காசுக் க/கு | 1150000 | |
| | வி/னை க/கு | | 1000000 |
| | VAT க/கு | | 150000 |
| | (காசுக்கு சரக்கு விற்பனை 15% VAT உட்பட) | | |

**கொள்வனவு க/கு**

| | | | |
|---|---|---|---|
| 06.02 காசு க/கு | 2000000 | வருமான கூற்று | 2000000 |
| | 2000000 | | 2000000 |

**காசுக் க/கு**

| | | | |
|---|---|---|---|
| 06.06 விற்பனை க/கு | 1000000 | 06.02 கொ/வு க/கு | 2000000 |
| VAT க/கு | 150000 | VAT க/கு | 300000 |
| மீ/செ | 1150000 | | |
| | 2300000 | | 2300000 |

**விற்பனை க/கு**

| | | | |
|---|---|---|---|
| வருமானக் கூற்று | 1000000 | 06.02காசுக் க/கு | 1000000 |
| | 1000000 | | 1000000 |

**VAT க/கு**

| | | | |
|---|---|---|---|
| 06.02 காசுக் க/கு | 300000 | 06.06 காசு க/கு | 150000 |
| | | மீ/செ | 150000 |
| | 300000 | | 300000 |
| மீ/வ | 150000 | | |

குறிப்பு : VAT கணக்கில் இறுதி மீதியாக காணப்படும் ரூபா 150000 வரவு மீதியாக இருப்பதனால் அது கம்பனிக்கு வருமதியாக (சொத்து) அமையும்.

Eg 02 : காலணிகளை உ/தி செய்யும் வரையறுத்த ராகவ் கம்பனியானது 2016 ஏப்ரல் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கலின் சுருக்கம் வருமாறு

| திகதி | விபரம் | ரூபா |
|---|---|---|
| 01.04.2016 | சுதா கம்பனியிடம் கொ/வு (15% VAT உட்பட) | 1150000 |
| 04.04.2016 | காசு கொ/வு (15% VAT உள்ளடங்கலாக) | 230000 |
| 04.04.2016 | உணவுச்சாலை செலவுகள் | 10000 |
| 05.04.2016 | போக்குவரத்து (15% VAT உட்பட) | 4600 |
| 06.04.2016 | காசுக்கு வி/னை (15% VAT உட்பட) | 920000 |
| 11.04.2016 | காசுக்கு வி/னை (VAT நீங்கலாக) | 40000 |
| 12.04.2016 | கடன்வி/னை பியூலா கமபனிக்கு (135000 VAT உட்பட) | 1035000 |
| 20.04.2016 | மின்சார கட்டணம் (15% VAT ரூபா 777 உட்பட) | 595700 |

| | | |
|---|---|---|
| 20.04.2016 | பற்று (முகாமைப் பணியாளர்) | 100000 |
| 25.04.2016 | காசு வி/னை (15% VAT உட்பட) | 690000 |
| 25.04.2016 | சம்பள கொடுப்பனவு | 800000 |
| 26.04.2016 | பாலனிடம் கொ/வு (15% VAT உட்பட) | 575000 |
| 27.04.2016 | காசுக்கு கொ/வு (15% VAT உட்பட) | 28750 |
| 29.04.2016 | தொலைபேசி கட்டணம் (15 VAT உட்பட) | 4600 |
| 30.04.2016 | மிதுவுக்கு வி/னை (105000% VAT உட்பட) | 805000 |

VAT கட்டுப்பாட்டு க/கை தயார் செய்க.

## VAT கட்டுப்பாட்டுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| 01.04.2016 க.கொடுனர் | 150 000 | 06.04.2016 காசு (வி/னை) | 120 000 |
| 04.04.2016 காசு (கொ/வு) | 30000 | 12.04.2016 வி/னை | 135 000 |
| 05.04.2016 காசு (போக்குவரத்து) | 600 | 25.04.2016 காசு (வி/னை) | 90000 |
| 20.04.2016 காசு (மின்சாரம்) | 777 | 30.04.2016 கடன்படுனர் | 105 000 |
| 26.04.2016 கடன் கொடுனர் | 75000 | | |
| 27.04.2016 காசு | 3750 | | |
| 29.04.2016 காசு | 600 | | |
| 30.04.2016 மீ/செ | 189273 | | |
| | 450000 | மீ/வ | 450000 |
| | | | 189273 |

**உசாத்துணை**

- உயர் நிதிக்கணக்கீடு AAT

> *பணிந்து செய்வதால் எமக்கு ஒன்றும் குறைந்து போகாது*
> *அது எங்கள் பெருமையை புலப்படுத்தும்*

# NVQ Levels

*A.Mary Priyanka*
*A/L com 2018*

Tertiary and vocational Education Commission has taken steps to introduce a national Vocational Qualification system (NVQ) Consisted with 7 levels in collaboration with all Goverment Technical education and vocational training insititues and vocational training institutes and skills Development project presently as TEDP under the guidance of ministry of Vocational and technical Training.

Many developed and developing countries have introduced vocational skill certification systems Similar to that fifth NVQ system. At Present such system is in real Practice in those countries. As such international awareness on skills relating to NVQ Certificate levels are prevailing in the manner as it is applicable for knowledge and skills with regard to GCE (O/L) and GCE (A/L). Therefore National vocational Qualification system Could be considered as Nationally and internationally recognized Vocational Certification system which is a unified one.

**NVQ Level**

1 - Certificate
2 - Certificate
3 - Certificate
4 - Certificate
5 - Diploma
6 - Higher Diploma
7 - Degree equivalent

NVQ 1st Levels for craftsmen who possess basic skills and entry level competencies

NVQ 2nd Level for craftsmen who need direct and regular supervision.

NVQ3rd for occasional guidance

NVQ 4th for could work independently

NVQ 5th for supervisors

NVQ 6th for managers

NVQ 7th for decision makers

**Implementation of the NVQ system**

- NVQ system is implemented under a direct monitoring of tertiary and vocational education commission (TVEC)
- Assessment for awarding NVQ certificates will be conducted by a licensed assessor who are trained

by NITESL and registered by NAITA

- If the candidate is successful at the assessment and found competent, will issue respective NVQ certificate with the signatories of the Director General TVEC and the Head of training institution.

**Advantage of NVQ system**

- Career path to obtain qualifications in higher levels of this frame work and gaining relevant skills on the basis of experience and competencies.

- NVQ system is a skill evalution system and has high tendency for a foreign employment


- If NVQ Certificate recipients are enthusiastic to go in higher qualifications the system encourages upgrading their career development.

- NVQ certificate in not a training certificate. IT is a certificate that certifies your skills. It is a Nationally recognized certificate that confirms, you possess skills up to the respective NVQ Level in that occupation.

- since the skill standards are prepared with the contribution of professionally competent personal in the industry such skills are consisted with functions to be carried out in the industry, there fore, it is easier to seek jobs for NVQ certificate holders.

References


♦ www.tvec.gov.lk

# ஏணி

**ச.வனிஸ் டொறிஷா**
*A/L Com 2017*

தீர்மானம் எடுத்தபடி
திருப்தியில் படிப்படியாய்
வளர்ச்சி எனும் ஏணியிலே
கால்பதித்த வணிகம் நான்!

வெற்றி, தோல்வி தீர்மானித்தபடி
என் படிகள் கடந்தோட
இலக்கை நோக்கியபடி என்
கால்கள் முன்னேற...

விளைதிறனை, வினைத்திறனாக்கிட
மனித வளம் புது உத்திகாண
என்புத்தி சந்தையில் இடம்தேட
என் உயரம் வான் தொடும்

தரங்களின் அதிகரிப்பு
உற்பத்தியின் சிறப்புத்தேர்ச்சி
என் வளர்ச்சி பெருகிட
என் கனவு நனவாகும்

ஊழியரின் பங்கெடுப்பும்
வாடிக்கையாளர் கணக்கெடுப்பும்
என்னை ஏற்றிவிடும்
நிலையில்லா உலகில்
நிரந்தரக் குடில் அமைப்பேன்.

# நன்றி

**எந்நன்றி கொன்டார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்நன்றி கொன்டமகர்க்கு**

என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இத்தளிரை வெளியிடுவதற்கு பல தடைகள் எழுந்த போது நாம் அவற்றை தகர்த்தெறிந்து இன்று அனைவரது கைகளிலும் இத்தளிர் தவழ நல்ல காலப் பொழுதையும் நேரத்தையும் தந்த இறை வனுக்குமுதற் கண் நன்றிகள்.

இந் நூலை வெளியிட அனுமதி தந்து ஆசிச் செய்தியையும் வழங்கி எமக்கு உற்ற துணையாய் இருந்த எமது பாடசாலை அதிபர் மற்றும் உப அதிபருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்

பல இன்னல்கள் மட்டிலும் எம் அனைவரையும் ஒன்று சேர்த்து எமது மன்றத்திற்கு தலைமை தாங்கி இத் தளிர் இன்று சுடர் விட்டு பிரகாசிக்க ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது மன்றப் பொறுப்பாசிரியர் அவர்களுக்கும் ஏனைய வணிகப் பாட ஆசிரியர்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகள்.

எமக்கு நேர் காணல் வழங்கிய விரிவுரையாளர்களுக்கு எமது மன்றம் சார்பாக நன்றிகளை கூறிக் கொள்கிறோம். இத்தளிர் வெளிவர தமது ஆக்கங்களை தந்து உதவிய துறைசார் வல்லுனர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். மேலும் முதற்பிரதி பெற்றவருக்கும் சிறப்பு பிரதி பெற்ற அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் எமது வணிகத் தளிரை அச்சிட்டு உரிய நேரத்தில் தந்துதவிய நிறுவனத் தினருக்கு எமது நன்றிகள்.

இம் மலருக்கு விளம்பரங்களூடாக நிதி உதவி வழங்கிய அனைத்து விளம்பரதாரருக் கும் எமது நன்றிகள். இறுதியாக இத் தளிர் சிறப்பாக வெளிவர இலை மறை காயாக இருந்து தமது உடல் உழைப்பையும் நேரத்தையும் செலவழித்த எமது வணிகத்துறை பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நன்றி

**வணிக மன்றம் – 2017**

# சிறந்த பெறுபேறு பெற்றோர் விபரம்

## A/L 2016 Commerce

மேரி பிறின்சஸ் நீதிகா மத்தியூஸ் பிறேமதாஸ்

- முகாமைத்துவ கற்கை நெறி

வினுஜா ஆரோக்கிய சீலன்

- முகாமைத்துவ கற்கை நெறி

மேரி ஸ்ரிவீனா குமர குலசிங்கன்

- முகாமைத்துவ கற்கை நெறி

சார்லினி சார்லஸ் ஜோன்சன்

- முகாமைத்துவ கற்கை நெறி

மேரி பிரியங்கா மரியதாஸ்

- முகாமைத்துவ கற்கை நெறி

லில்லி கருண்ஷியா கிறிஸ்ரீன் பெனாட்

- முகாமைத்துவ கற்கை நெறி

# Sieelan

## Furniture & Multi Trade Centre





தளபாடங்கள், கதிரைகள், பிளாஸ்ரிக், எலெக்ரிக், சில்வர், அலுமினியம், அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றை பெற்றுக் கொள்ளலாம்

## சீலன் பேனிச்சர்ஸ் அன் மல்ரி ரேட் சென்ரர்

T.P : 077 6617501

கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்.

ISHARA
NEW DRESS MART

# இஷாரா

நியூ டிறெஸ் மாரட் (பிறைவேட்) லிமிடெட்

*Number One Name*
*In The Fashion World...!*



இல. 199/A, 199/B, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
Web : www.isharanewdressmart.com
E-mail : senura@isharanewdressmart.com
T.P : 021 221 9925, 077 - 2628933

# Himalaya Dream Roy






Vinayagar Hall,
A9 Road Kaithadi,
Jaffna Branch.

## Brain Power Institute

Gurunagar Jaffna



**தரம் 4 முதல் O/L, A/L வரையான வகுப்புக்கள்**

கலை, வர்த்தகப் பிரிவுகள்
சிங்களம், Spoken English
புலமைப்பரிசில் வகுப்புக்கள்
மாதாந்த, இடைத்தவணை, தவணைப்பரீட்சைகள்
ஒவ்வொரு மாணவரினதும் தனிப்பட்ட கவனம்

**கல்வியால் நாம் கல்விக்காகவே நாம்**

## Ladchumanan Hardware

**சீமெந்து, பெயின்ற்,**
**கட்டிடப் பொருட்கள் விற்பனையாளர்**



Mobile No : 077 3922317
Tel : 021 224 3374

**கே.கே.எஸ் வீதி,**
**மல்லாகம்.**

*K.K.S. Road,*
*Mallakam.*

## நிருபன்

### தொலைத் தொடர்பு நிலையம்



**17/13, கடற்கரை வீதி,**
**குருநகர்,**
**யாழ்ப்பாணம்.**

## கதிசன் ஹாட்வெயர்

### பெயின்ரின் வர்ண உலகம்



**160, பாங்சால் வீதி, சின்னக்கடை,**
**குருநகர், யாழ்ப்பாணம்**

*500ற்கு மேற்பட்ட வர்ணங்களில் பெயின்ற் வகைகளை கலவை இயந்திரம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்*

HNB

# Your Favourite Gifts From Your Favourite places

The best age to start good habit is when your're young.
Since you kids are champs at saving we want to show you the value of this good habit with gifts.

The more you save, the more gifts you get. So save with HNB singithi and get your favourite gifts from your favourite places.

## Maintain the following account balance and get these amazing gifts

| Account Balance | Gifts |
|---|---|
| Rs.1,000.00 | Singithi Jumbo Till |
| Rs. 5,000.00 | Water bottle |
| Rs.10,000.00 | School bag |
| Rs.25,000.00 | An exciting gift |
| Rs.50,000.00 | Rs.1,500 Voucher |
| Rs.100,000.00 | Rs.5,000 Voucher |
| Rs.250,000.00 | Rs.10,000 Voucher |
| Rs.500,000.00 | Rs.20, 000 Voucher |

**500 Diri Daru scholarships for the top performers in the Years 5 Scholarship exams**

Maintain a minimum deposit of Rs.10,000/= - in your child's HNB Singithi Lama account before the exam and make him/her eligible for an HNB Diri Daru scholarship.

HNB
Singithi
Great gifts for a good habit

Be a part of the Jumboland Gift Fiesta
All you need to do is open a HNB Singithi Account with a deposit of Rs.1000

யாழ் நகரின் முதல் தர அரச அனுமதி பெற்ற
கனரக (AD) சாரதி பயிற்சி பாடசாலை





யாழ் நகரில்
முதல் முறையாக
"கிருபா லேணர்ஸ்"
வழங்கும் இரவு நேர சாரதி
பயிற்சி நெறி

# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடையாத விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்
- அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாரும்க்கும் பயிற்சிகள் வழங்கப்படும்
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.

**தலைமைக் காரியாலயம்**
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224353, 021 4923200, 0777225292

**கிளைகள்**

| பருத்தித்துறை | சாவகச்சேரி | சுன்னாகம் | விசுவமடு |
|---|---|---|---|
| 021 4923201 | 021 4923202 | 021 2242022 | 021 3201515 |
| 0714546958 | 021 2270700 | 0714546956 | 0714546955 |
| **கிளிநொச்சி** | **நெல்லியடி** | **முழங்காவில்** | **பூநகரி** |
| 021 2285505 | 021 3006550 | 021 3006544 | 021 3201818 |
| 0714546955 | 0714546957 | 0714546955 | 0714546955 |

இல. 216, A9 வீதி, வவுனியா.
[வசந்தி தியேட்டருக்கு முன்பாக]
024 2227777, 0777100444

J.Tisanthan
077 8820588

# ST Creative Enterprises

**No.226, Brown Road, Jaffna.**

**T.P : 021 320 0809**

**stcreative2014@gmail.com**

# UNITY PC SYSTEMS

Computer Sales,
Service and Maintenance,
CCTV Camera & Networking





*No : 74, Palaly Road,*
*Lluppaiyady Junction, Jaffna.*
*T.P : 021 222 0666/077 344 6194*

Reg. No. DS 882

# சசிகா லேணர்ஸ்




அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

## முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

- விண்ணப்பதாரி கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புக்களும், வாகன தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
- எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல் , பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.
- காணொளி மூலமும் (வீடியோ மூலம்) கற்பிக்கப்படும்.

# THE SASIKA LEARNERS

**தலைமைக் காரியாலயம்**

இல. 57 வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

**077 722 6247**

021 221 7678
077 614 0361
sasikaLearners
sasikadrivingschool@gmail.com

**சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்**

- தேசிய அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி - பெண்களுக்கு மட்டும்)
- மருத்துவச் சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
- சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)

**கிளைக் காரியாலயங்கள்:**

| | |
|---|---|
| வேலணை<br>வங்களாவடிச் சந்தி | 021 221 5472<br>070 301 3012 |
| மல்லாகம்<br>கே.கே. எஸ் வீதி | 021 224 3393<br>070 301 3014 |
| சங்கானை<br>ஓடக்கரை வீதி | 021 225 1664<br>070 301 3016 |

**இப்பொழுது யாழ். நகரின் மத்தியில்**

இல. 821 C மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
070 301 5004
021 222 8004




வாகன பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
( கிளை நிறுவனங்களிலும் வாகனப்பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

**வாகன விபத்தைத் தவிர்ப்போம் உயிர்களைக் காப்போம்.**



# வணிகத்தளிர்
# VANIKATHTHALIR



வணிக மாணவர் ஒன்றியம்
COMMERCE UNION

Printed By : Mathi Colours, Nallur. 021 222 9285